# வைத்திய சதகம்



அருள்மிகு

பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்

சித்த மருத்துவநூல் வெளியீட்டுக் குழு

**1975.**

வெளியீட்டுத் தொடர் எண் : 25

[illegible] எண் 20944

# வைத்திய சதகம்

பதிப்பாசிரியர்

ஹகீம் பா. முகம்மது அப்துல்லா சாயபு அவர்கள்



அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்
சித்த மருத்துவநூல் வெளியீட்டுக் குழுவினருக்காக

கௌரவத் தலைவர்

டாக்டர். இரா. தியாகராசன். எல். ஐ. எம்.

அவர்களால், பதிப்பிக்கப் பெற்று,

தமிழ்நாடு அரசுக்கு நன்கொடையாக
அளிக்கப் பெற்றது.

கி. பி. 1975 விலை ரூ. 4/—

இரண்டாம் பதிப்பு : 1975

உரிமை :
அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்
சித்த மருத்துவநூல் வெளியீட்டுக் குழு,
இந்திய மருத்துவத்துறை இயக்குநர் அலுவலகம்,
சென்னை-600029.


## அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்

### அறங்காவலர் குழு

திரு. கு. சின்னப்பன், தலைவர், அறங்காவலர் குழு

| | |
|---|---|
| ,, அ. தமிழரசு | அறங்காவலர் |
| ,, இரா. சின்னதுரை | ,, |
| ,, புலவர் சி. பழனிச்சாமி, எம். எல். ஏ. | ,, |
| ,, ஏ. பச்சையப்ப கவுண்டர் | ,, |

இரா. அர்ச்சுனன், பி. ஏ.,
துணை ஆணையர்—நிருவாக அதிகாரி


அச்சிட்டோர் :
சிவார்ட்ஸ் பிரிண்டர்ஸ்,
119, ஸ்ட்ராஹன்ஸ் ரோடு,
சென்னை-600012.

மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்

மாண்புமிகு

பேராசிரியர் க. அன்பழகன், எம். ஏ.,

அவர்கள் அளித்த

# அணிந்துரை

முன்தோன்றிய—மூவா முதன்மொழியாம் தமிழுடனும் அதன் நாகரிகத்துடனும் பிறந்து வளர்ந்த—சித்த மருத்துவத்தின் நன்மையும் மேன்மையும் உலகம் என்றும் இழந்துவிடாது காப்பது நம் கடன். தமிழகத்திலும் பிற தென் மாநிலங்களான திராவிடத்திலும் சித்த மருத்துவம் இன்றும் பலரால் — வழிவழியாகவும், கற்றறிந்தும் — கையாளப்பட்டு வரினும் அதன் சிறப்பும் புகழும் நிலைபெறுவதற்கு நாம் ஆற்ற வேண்டிய பணிகள் பலவாகும் தமிழக அரசின் ஆதரவாலும் இத்துறை வல்லுநர்களின் முயற்சியாலும்—மருத்துவ முறைகளுள் சித்த மருத்துவமும் இடம் பெற்று வளருகிறது. எனினும், அதன் தனிச் சிறப்புகள் அறிவியல் ஆய்வாளர்கள் ஒப்புக்கொள்ளுமாறு ஆய்வுகள் மூலம் நிலைநிறுத்தப்பட்டாக வேண்டும். அந்தநிலை உருவாவதற்கு — ஓலைச்சுவடிகளாகவும் ஒருகாலத்திலே அச்சேறியும் இன்று கிடைத்தற்கரிதாகியும் உள்ள நூற்றுக்கணக்கான சித்த மருத்துவ நூல்கள் உடனடியாகப் பதிப்பிக்கப்பட வேண்டும். இவை வெளி

வந்தால் தான் இன்று சித்த மருத்துவம் பயிலும் மாணவரும் இளம் மருத்துவரும், அவற்றைப் பயின்று பயன்பெற இயலும். மருந்து செய்முறைகளை ஒப்புநோக்கி உண்மை தெளியவும், மருந்துகளின் தரத்தை உறுதிப்படுத்தவும், அரிய மூலப் பொருள்கள் கிட்டாதவிடத்து மாற்று மூலப் பொருள்களைக் கொண்டு மருந்து செய்திடவும் மருந்து உற்பத்தியைப் பல மடங்காகப் பெருக்கி மக்களுக்குப் பரவலாகக் கிடைக்கச் செய்யவும்வாய்ப்பாகும்; பரவலாக எங்கும் எளிதில் கிடைப்ப தால் செல்வாக்குப் பெற்றுள்ள அலோபதி மருந்துகட்கு ஈடு கொடுத்து மக்களிடம் செல்வாக்குப் பெறவும் முடியும்.

எனவே, சித்த மருத்துவ நூல்கள் வெளியிடும் முயற்சிக்குத் தகுந்த நிதி உதவி வேண்டுமென்னும் எனது வேண்டுகோளை இசைவுடன் ஏற்று அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் அறங்காவல் குழுவினரும் — அதன் முன்னாள் தலைவர் திரு. பு.மனோகரன் அவர்களும்— இதற்காக இரண்டு லட்சம் ரூபாய் நிதி ஒதுக்க முன் வந்ததுடன் சித்த மருத்துவநூல் வெளியீட்டுக்கென டாக்டர். இரா. தியாகராசன் எல்.ஐ.எம்., அவர்களைத் தலைவராகக் கொண்ட ஒரு குழுவையும் அமைத்துச் செயல்படுத்தலாயினர்.

இக்குழுவின் தலைவரும், உறுப்பினர்களும் ஆர்வத்துடன் ஈடுபட்டு ஆற்றிவரும் நற்பணியும் — பல்வேறு வகையிலும் அவர்கட்குத் துணைநிற்போர் ஆற்றும் பணியும் — இந்திய மருத்துவத்துறை இயக்குநர் டாக்டர் பு. மு. வேணுகோபால் அவர்களின் இயக்குவித்திடும் திறனும் எனது பாராட்டுக்குரியனவாகும்.

அருள்மிகு பழநி திருக்கோயில் அறங்காவலர் குழுவினருக்கும், அக்குழுவின் தலைவருக்கும் எனது நன்றியும் பாராட்டும் உரியவாகும்.

இந்த நூல் வெளியீட்டுக் குழுவினரால் தேர்ந்தெடுக்கப் பெற்று முதலில் வெளியிடப்படும் நூல் வரிசையில் 25-வது நூலாகும்.

இந்நூலின் பதிப்பாசிரியர் — சித்த மருத்துவ வல்லுநர் ஹக்கீம் பா. முகம்மது அப்துல்லா சாயபு அவர்கள் — இளமை முதலே-தமது முன்னோர் தம் மருத்துவக் கலையைப் பொன்னே போல் போற்றிப் பயின்று தொடர்ந்து பல ஆண்டுகள் பாடு

பட்டுப் பயன்படுத்தித் தேர்ந்து தெளிந்து—உலகோர்க்குப் பயன்படவேண்டும் என்னும் உயர்ந்த நோக்கத்துடன் அரிய சித்த மருத்துவ நூல்கள் பலவற்றை இயற்றி வெளியிட்டுள்ளார் இச்செயல்களின் பெருமை அவரையே சாரும்.

மறைபொருளாய்ப் பேணப்பட்டு அதனாலேயே உருவழிந்து மறைந்து போவதற்கு ஆளாகிவிட்ட சித்த மருத்துவ உண்மைகள்—இருட்டறையிலிருந்து வெளிக்கொணரப்பட்டு—ஒளிகாண்பதற்கு வழிகண்ட வல்லுநரில் அவர் தலைசிறந்தவராவார் என்னில் மிகையாகாது.

தெளிவுடனும், துணிவுடனும், அறிவுடனும், ஆற்றலுடனும், நெறியுடனும், பொறுப்புடனும் எளிய இனிய தமிழில்—இத்தனை நூல்களை இயற்றியமைக்கும், சித்த மருத்துவ உலகம்—ஹக்கீம் அப்துல்லா அவர்களுக்கு எந்நாளும் நன்றி செலுத்தும் கடப்பாடுடையதாகும்.

அவர் இயற்றிய அனுபோக வைத்திய நவநீதம் முதற்பாகத்தின் முகவுரையே சித்த மருத்துவத்தின் அக்கால நிலைமையை விளக்கமாகவும், நம்மவர் கடமையை எடுத்துக் காட்டுவதாகவும் அமைந்துள்ளதைக் காண்க.

"மிகக் கொடிய நோய்களையும் அறத் தீர்க்கும் பற்பம் செந்தூரமாகிய முறைகள், நமது நாட்டு மருத்துவத்தில் இருப்பதுபோல மற்ற மருத்துவத்தில் இல்லையென நமது மருத்துவநூல் பயிற்சியுள்ள ஐரோப்பிய மருத்துவர்கள் மனப்பூர்வமாக ஒப்புக் கொள்கிறார்கள். ஆங்கில மருத்துவம், நாட்டு மருத்துவம் ஆகிய இரண்டிலும் சிறப்புள்ளவர்களான சிறந்த பண்டிதர்களின் தீர்மானமாவது :—

"அறுவை செய்தல் முதலிய இரண மருத்துவத்தில் ஆங்கில முறை வைத்தியம் மிகவும் மேலானது. மற்ற நோய்களின் மருத்துவத்தில் தற்கால சாந்தியாகச் செய்வதிலும் ஆங்கில வைத்தியமே அதிகம் சிறந்தது. ஆனால் நாட்பட்ட நோய்களையும் பெரிய நோய்களான குன்மம், நீரிழிவு, சயம், எருவாய் நோய், பாண்டு, மந்தாக்கினி, மேகம், தாது இழப்பு முதலிய கடின நோய்களையும் அறத் தீர்ப்பதற்கு நாட்டு மருத்துவ முறைகளே மிகமேன்மையானவை. அவற்றுள்ளும் முறைக் கிரமமாகச் செய்யப்பட்ட பற்ப செந்தூரங்களே மிகமேன்மை பெற்றவை" என்பதே.

இந்த அபிப்பிராயமானது மிகவும் சரியானதெனவும், உத்தமமானதெனவும், அதிகம் வாய்மையானதெனவும் சிறந்த மருத்துவர்களான ஒவ்வொருவரும் முழுமனதோடு ஏற்றுக் கொள்வார்கள்.

இக்கூற்று உண்மையாவதை, நவீன கருவிகள் வளர்ச்சியால் ஆலென வளர்ந்து அடர்ந்து நிற்கும் அலோபதி மருத்துவமும் ஏற்கும் வண்ணம் நடைமுறையில் செயல்படுத்தி எண்பிக்கும் வல்லமையும், ஆராய்ச்சி முறையில் சான்றுகளை உருவாக்கும் முயற்சியும் ஓங்க வேண்டுமென்பதே எனது பேரவா.

இந்த உயர்ந்த நோக்கத்துக்கு உறுதுணையாகுமாறு இவ்வரிய நூலைப் பதிப்பித்து வழங்கியுள்ள அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் சித்த மருத்துநூல் வெளியீட்டுக் குழுவினரின் முயற்சி பாராட்டுக்குரியதாகும்.

இவ்வெளியீடு மேலும் பல நூல்களை வெளியிடும் முயற்சியில் ஈடுபட்டுள்ளோரை ஊக்கப்படுத்துவதற்குத் துணை செய்வதாகுமென நம்புகிறேன். அவர்கள்தம் முயற்சி வளர வாழ்த்துகிறேன்.

சென்னை
20—3—1975

க. அன்பழகன்.

# இரண்டாம்பதிப்பின் முன்னுரை

உலக மொழிகளில் மிகப் பழமையானது தமிழ்மொழி; அது போல் தமிழ் மருத்துவமுறையும் அத்தகைத்தே. இம் மருத்துவ முறையைத் தோற்றுவித்தவர் சித்தர்கள் எனப்படுவர். ஆகையால், இம்மருவத்திற்குச் சித்த மருத்துவமென்று பெயர் அமையலாயிற்று. அச்சான்றோர்கள் தாம் கண்ட உண்மைகளையும் மருத்துவ நுணுக்கங்களையும், மருந்து சரக்குகளின் குணம் முதலானவைகளையும் மாணவர்கள் பலரை ஏற்று ஓதியும் ஓதுவித்தும் பற்பல ஏடுகளில் பதிவு செய்தும் உலகோர்க்கு உதவி செய்து தம் மருத்துவ முறைகளைப் பரப்பி வந்தார்கள்.

காலப்போக்கில், சிறிது சிறிதாய் இயற்கையின்—நிலநடுக்கம், கடற்கோள் போன்ற—சீற்றம் காரணமாகவும், வெளிநாட்டார் படையெடுப்பு, சிதலை, இராமபாணம் போன்றவைகளின் தாக்குதலாலும் பல ஏடுகள் அழிந்தவை போக மிகுந்தவைகளில் சில மேலைநாட்டு நூல் நிலையங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டன வெனக் கூறப்படுகின்றது. இன்னும் எஞ்சியுள்ள ஏடுகளாலும், அம் மருத்துவக் கலையைத் தொன்றுதொட்டு கையாண்டுவரும் மருத்துவர்கள் வாயிலாகவும், பல நூற்றுண்டுகளாக அதன் அடிப்படை உண்மை, தனித்தன்மை காரணமாகவும் சித்த மருத்துவம் அழியாது நிலை பெற்றிருக்கிறது

தஞ்சையையாண்ட மராட்டிய மன்னர் சரபோஜி அவர்களின் ஆட்சிக் காலத்தில் சித்த, ஆயுள்வேத, யூனானி மருத்துவ ஏடுகள் எல்லாம் சரசுவதி மகால் நூல் நிலையத்தில் அரியணை ஏறின. மருத்துவப் புலவர்களின் அனுபவங்கள் ஏடுகளில் ஏறி ஏமமுற்றன. மருந்து செய்முறையும், பிணித்தீர்வும் அவர் ஏற்படுத்திய தன்வந்திரி மகாலில் மறுமலர்ச்சியுற்றன. அவர் ஆட்சிக்குப்பின் சித்த மருந்தும் அரசு ஆதரவை இழந்து பழையபடி குடிமக்களின் ஆதரவு கொண்டு ஆங்காங்கு வழக்கில் இருந்து வரலாயிற்று.

மிக அண்மையில் வெள்ளையராட்சிக் காலத்தில் நீதிக்கட்சிச் சார்பில் முதல் அமைச்சராகப் பணியாற்றிய பானகல் அரசர் 1924 இல் இந்திய மருத்துவப் பள்ளியைத் தோற்றுவித்தும் பல கிராம மருத்துவ மனைகளை அமைத்தும் இயங்கச் செய்து சித்த

மருத்துவம் முதலான இந்திய மருத்துவ முறைகளின் மறு மலர்ச்சிக்கு வித்தூன்றினர். அக்காலத்தில் மேற்படி கல்வி நிலையத்தில் பயிலும் மாணவர்களுக்கு அமைந்த பாடத்திட்டப்படி கற்பிக்கப் போதிய பாடப் புத்தகங்களும் முதல் (மூல) நூல்களும் இல்லாக்குறையை ஓர்ந்து பாடப் புத்தக ஆக்கக்குழுவை அரசு அமைத்தது. அந்நாள் சித்த மருத்துவத்துறைத் தலைமை ஆசிரியராய் இருந்த பண்டிட் வைத்திய ரத்னம், மருத்துவ சிரோன்மணி காலஞ்சென்ற திரு. க. ச. முருகேச முதலியார் அவர்கள் குணபாடம் (மூலிகை வகுப்பு) என்னும் நூலைத் தன் சொந்த முயற்சியால் இயற்றி அரசினர்க்கு நன்கொடையாக அளித்து வெளியிடச் செய்தும், குழுவினர் அரசுவழி வெளியிட்ட நஞ்சு நூல், பாலவாகடம் என்ற நூல்களைப் பார்வையிட்டும் உதவினர். அக் குழுவினர் நூற்றுக்கும் மேற்பட்ட மருத்துவச் சுவடிகளையும் அச்சிட்ட நூல்களையும் சேகரித்து, ஒரு நூல் நிலையம் ஏற்படுத்தினர்.

மேற்படி பள்ளி கல்லூரியாக மிளிர்ந்தபோது, அந்நாள் கௌரவ இந்திய மருத்துவ இயக்குநராகப் பணியாற்றிய டாக்டர் ம. ரா. குருசுவாமி முதலியார் ஊக்கம் கொடுத்தமை காரணமாக 1950 இல் சித்த மருத்துவம், மருந்துவாங்கச் சுருக்கம், நோயில்லா நெறி, குணபாடம், மூலிகை வகுப்பு, தாது சீவ வகுப்பு என்ற நூல்களும் அப்போது பணிபுரிந்து வந்த கல்லூரி விரிவுரையாளர்களைக் கொண்டு எழுதுவித்து அரசுவழி வெளியிடப் பெற்றன.

அக்கல்லூரி நிகழ்ந்த காலத்திலும் பின்னர்ப் பாளையங் கோட்டைக் கல்லூரி தோன்றிய பின்னுங்கூட பாடநூல்களும் துணை நூல்களும் நிரம்பாமை பெருங்குறையாக நீடித்து வருவதாயிற்று

ஆகவே, பண்டைய சித்த மருத்துவ ஓலைச்சுவடிகளையும் கையேடுகளையும் ஒருமுறை அச்சாகிப்பின் விற்பனைக்குக் கிட்டாத புத்தகங்களையும் சேகரிக்கவும், மருந்து செய்முறை அட்டவணை தயாரிக்கவும், பாடநூல்கள் வெளியிடவும் ஆகிய பணிகள் செய்ய (Pharmacopea committee 1936 G. O. M. S. 2163 Dt. 23-8-60) ஒரு குழுவும், சித்த மருத்துவக் கல்வி மற்றும் பாடநூற் குழு என்று G. O. MS. No. 1060 health Dt. 13-6-66) ஒரு குழுவும், திருவட்பா, திருப்புகழ் முதலியவகைகளில் உள்ள மருத்துவப் பகுதிகளையும் ஆய்வதற்காக ஒரு குழுவும் எனத் தமிழக அரசு குழுக்களை ஏற்படுத்தியது. அதன் விளைவாக அறுவை மருத்துவம், சூல் மருத்துவம் என்ற நூல்கள் வெளிவந்தன,

மீண்டும் விரைவில் பயன்காண வேண்டி 1973ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் 15ஆம் நாள் தமிழக அரசினர் மேற்கூறிய குழுக்களை ஒருங்கிணைத்து சித்த மருத்துவ அறிவியல் வளர்ச்சிக் குழு என்னும் ஒரு குழுவைத் (G. O. MS No. 2571 of 23-10-73) தோற்றுவித்தார்கள். அக் குழுவின் பணிகளாவன: சித்த மருத்துவ அரிய சுவடிகள், கையேடுகள், அச்சாகிய பழைய நூல்கள் ஆகியவைகளைச் சேகரித்துப் பாதுகாத்தல்; ஓலைச்சுவடிகளை ஆய்ந்து கையெழுத்துப்படி, தட்டெழுத்துப்படி முதலியவைகளை எடுத்து அச்சியற்றி வெளியிடல்; ஒருமுறை அச்சில் வெளி வந்து விற்பனைக்குக் கிடைக்கப் பெறாத நூல்களை மீண்டும் வெளியிடல்; இதுவரை அச்சிடப் பெறாத நூல்களை வெளியிடல் என்பனவாம். அதன்படி இக் குழுவினர் இதுவரை 400 சுவடிகளையும் 100 கையெழுத்துப் பிரதிகளையும் 230 அச்சான பழைய நூல்களையும் சேகரித்துள்ளனர்.

இக் குழுவினர் தாம் மேற்கொண்ட பணிகளைச் செயலாற்ற, இந்திய மருத்துவத் துறை இயக்குநர் அலுவலகத்தில் ஒரு தனி அலுவலரையும் அவருக்கு உதவியாளர்களையும் நியமித்துள்ளனர். அவர்கள் நூல்களைப் படியெடுத்துத் திருத்தம் செய்து அச்சியற்றத் தக்க வகையில் செய்து வருகின்றனர்.

அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் நிதியிலிருந்து சித்த மருத்துவநூல் வெளியீட்டுக்கென்று ஒதுக்கப் பட்ட இரண்டு இலட்சம் ரூபாயைக் கொண்டு மேற்படி நூல்களை நடைமுறைச் சிக்கல்களைத் தவிர்த்து வெகு விரைவில் வெளியிட மேற்படி சித்த மருத்துவ அறிவியல் வளர்ச்சிக் குழுவிலுள்ள உறுப்பினர் சிலருடன் அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் அறங்காவலர் குழு முன்னாள் தலைவர் உயர்திரு. பு. மனோகரன் அவர்களையும் மேற்படி திருக்கோயில் நிருவாக அதிகாரியையும் கொண்டு அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் சித்த மருத்துவநூல் வெளியீட்டுக்குழு ஏற்படுத்தப்பட்டது. அக்குழு முடிவெடுத்தபடி முதல் வெளியீட்டு வரிசையில் 25-வது நூலாக இந்த வைத்திய சதகம் வெளியாகிறது. இந்நூல் அனுபோக வைத்திய நவநீதம் என்னும் உரைநடை நூல்களின் ஆசிரியர் ஹக்கீம் பா. முகம்மது அப்துல்லா சாயபு அவர்கள் முதலில் பதிப்பித்து மிக முக்கியமான பிற்சேர்க்கைகளும் குறிப்புகளும் இணைத்து வெளியிட்டுள்ளதாகும். ஹக்கீம் பா. முகம்மது அப்துல்லா சாயபு அவர்கள் சென்னை, ஜார்ஜ் டவுனில் அப்புமேஸ்திரி தெருவில், 12ஆம் எண்ணுள்ள வீட்டில் வாழ்ந்து வந்தார்.

இவர் தஞ்சை மன்னர் சரபோஜியின் தன்வந்தரி மகாலை அலங்கரித்த மருத்துவர் ஒருவரின் வழித்தோன்றல் ஆவார். அவர் பரம்பரை மருத்துவர். சித்த யூனானி ஆகிய இம்முறைகளில் செய்பாகம், கைபாகம்.நோய்தீர்வு முதலிய எல்லாக் கலைகளிலும் மிக்கத் தேர்ச்சி பெற்றவர். இவர் தனக்குச் சொந்தமாக மருத்துவ மனையும், மருந்து செய் சாலையும், அச்சகமும் நடத்தி வந்தார்.

இவர் கடவுள் நம்பிக்கை, பிறர் நலம் பேணல், கொடை, பரிவு ஆகிய நற்பண்புகள் நிறைந்தவர். இவர் சர். உஸ்மான் சாயபு அவர்களின் நெருங்கிய உறவினராவார்.

இவர் ஐம்பதுக்கும் மேற்பட்ட மருத்துவ நூல்களை உரைநடையில் இயற்றி வெளியிட்டதுடன், தேரையர் யமகம், தேரையர் கரிசல் அகத்தியர் இலக்க சௌமிய சாகரம் போன்ற முதல் (மூல) நூல்களையும் வெளியிட்டுள்ளார். இவருக்குப்பின் இவரது நூல்களை மறுமுறை பதிப்பித்து வெளியிடுவோரின்மையால் அவைகிட்டுவது அரிதாயிற்று.

இந்த **வைத்திய சதகம்** என்னும் நூல் ஒவ்வொரு நோய்க்கும் உதவும் மருந்துகளின் பெயர்களைக் கூறுவதாய் அமைந்துள்ளது. இது மருத்துவம் செய்பவர்களுக்கு ஒரு முக்கியமான வழிகாட்டியாய் உதவுமென்பதில் யாதொரு ஐயப்பாடுமில்லை.

மேற்கண்ட அரிய நூலின் வெளியீட்டுப் பணிக்குப் பெருந்தொகை தேவைப்படுவதால், இப்பெரும்பணியை விரைவில் செயல்படுத்த உளங்கொண்ட நம் தமிழக அரசின் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மாண்புமிகு பேராசிரியர் உயர்திரு. க. அன்பழகன் எம். ஏ., அவர்கள் பேரார்வங்கொண்டு மேற்படி பணி முட்டின்றி முடிவதற்கு அரசு நிதியிலிருந்து ஆண்டொன்றுக்கு ஐம்பதாயிரம் ரூபாய் வழங்க ஆணை பிறப்பித்தார். மேலும் அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் அறங்காவலர் குழு முன்னாள் தலைவர் உயர்திரு. பு. மனோகரன் அவர்களைக்கொண்டு முதல் தவணையாக மேற்படி திருக்கோயில் கருவூல நிதியிலிருந்து இரண்டு இலட்சம் ரூபாயை ஒதுக்கி வழங்கச் செய்தமையும், சித்த மருத்துவ நூல்கள் விரைவில் வெளியாக வாய்ப்புத் தேடித் தந்தமையும் காலஞ்சென்ற திரு. டாக்டர் ஜி. டி. நாயுடு அவர்களைக் கொண்டு காலஞ்சென்ற திரு. டி. வி. சாம்பசிவம் பிள்ளையவர்கள் தொகுத்து வைத்திருந்த மருத்துவப் பேரகராதியின் முதல் மூன்று பகுதிகளையும் பிற சித்த மருத்துவ இலக்கிய நூல்களையும் அச்சிட்டு வெளி

யிடச் செய்தமையும் அமைச்சர் பெருமகனார் சித்த மருத்துவ மறு மலர்ச்சிக்கு முழுமனதுடன் ஆற்றிவரும் செயற்கரிய ஆக்கச் செயல்களாகக் கூறிப் பெருமிதமடையலாம். இதற்குத் தமிழகம் என்றென்றும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளது.

அருள்மிகு பழநி தண்டாயுதபாணி திருக்கோயில் அறங்காவலர் குழுத் முன்னாள் தலைவர் உயர்திரு. பு. மனோகரன் அவர்கள் தமக்குள்ள பற்பல அறப்பணிகட்கிடையேயும் இக்குழுவின் கூட்டங்களில் பங்கு கொண்டு, நூல் வெளியீட்டுக்கான பற்பல வழிமுறைகளையும், ஆலோசனைகளையும், வழங்கி வெளியீட்டுப்பணி ஊக்கமும் ஆக்கமும் பெற்றுத் தங்குதடையின்றி நூல்கள் வெளிவர, மேற்படி திருக்கோயில் நிதியிலிருந்து மேற்படி அறங்காவலர் குழுவினரைக் கொண்டு முதல் தவணையாக இரண்டு இலட்ச ரூபாய் வழங்கச் செய்ததோடு, சித்த மருத்துவக்கல்லூரி ஒன்று பழநியில் தோற்றுவிக்க உடன்பட்டமைக்கும் சென்னையில் மத்திய சித்த மருத்துவ நூலகமொன்றை நிறுவக் கட்டடம் கட்டித்தர முயன்று வருகின்றமைக்கும் இக்குழுவினரும், இதில் பணியாற்றி வருபவர்களும் என்றும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டவர் ஆவார்கள்.

மேற்படி அறங்காவலர் குழுத்தலைவர் அவர்களுக்கு உறுதுணையாக இருந்து ஒத்துழைத்து வரும் மேற்படி திருக்கோயில் நிருவாக அதிகாரி அவர்களுக்கும் இப்பணிகள் நிறைவுபெற ஆக்கிய தீர்மானங்களுக்கு ஒப்புதல் அளித்துவரும் இந்து சமய அறநிலையப் பாதுகாப்புக் குழுத்தலைவர் உயர்திரு. கே. எஸ். நரசிம்மன் ஐ. ஏ. எஸ்., அவர்களுக்கும் இக்குழுவினரின் உளங்கனிந்த நன்றி உரித்தாகும்.

இக்குழுவினர் பணியாற்றுவதற்கு ஏற்ற இடவசதியும் பிற வசதிகளும் தம் அலுவலகத்தின் ஒரு பகுதியில் கொடுத்து, பணி இடையீடின்றி நடைபெற வேண்டிய ஆலோசனைகளும் ஊக்கமும் அளித்துவரும் இந்திய மருத்துவத் துறை இயக்குநர் உயர்திரு டாக்டர் பு. மு. வேணுகோபால், எச். பி. ஐ. எம்., அவர்களுக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அடக்க விலையில், மிக விரைவில் அச்சடிக்கும் தாள்கள் சேஷசாயி பேப்பர் மில்சாரிமிடருந்து கிடைக்கும்படி செய்த முத்தமிழ்க் காவலர் உயர்திரு. கி. ஆ.பெ. விசுவநாதம் அவர்களுக்கு இக்குழு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளது.

மற்றும், இந்நூல்களை அச்சியற்றஏற்றவண்ணம் மூலப்படிகளைத் திருத்தம் செய்வித்தும், அச்சுப்படிகளைத் திருத்தம் செய்தும் இந்நூலுக்கு அருஞ்சொல்லுரை எழுதியும் இக்குழுவுக்குத் துணைபுரிந்துவரும் தனிஅலுவலர் டாக்டர் வி. விசுவநாதன் எல். ஐ. எம்., அவர்களையும் அன்னாருக்குத் துணைபுரிந்துவரும் புலவர்கள் வை. முரு. முத்துக்குமாரசாமி, மு. சௌரிராசன், வி. செ. விநாயகம், தா. சிங்காரவேலு ஆகியவர்களையும் இக்குழு மனமுவந்துபாராட்டுகிறது.

மேற்கண்ட பணிக்குத் தேவையான நூல்களைக் கொடுத்துதவிய காஞ்சிபுரம். சித்த மருத்துவர் திரு. சிற்சபை அவர்களுக்கு இக்குழுவின் சார்பில் நன்றி கூறப்படுகிறது.

இந்நூலை குறுகிய காலத்தில் அழகிய முறையில் அச்சியற்றிய சிவார்ட்ஸ் அச்சகத்தாரின் சேவைக்கு இக்குழு மனமுவந்து பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறது.

சான்றோர் மிகுந்த இவ்வுலகு இந்நூல்களில் காணும் குற்றங் கண்டு முனியாது நனியாதரவு தந்து எம்மை ஊக்குவிக்குமென்ற துணிவுடன் இந்நூலை வெளியிடுகின்றனம்.

டாக்டர் இரா. தியாகராசன், எல். ஐ. எம்.,
தலைவர்
அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்
சித்த மருத்துவநூல் வெளியீட்டுக்குழு,

இந்திய மருத்துவத்துறை
இயக்குநர் அலுவலகம்,
சென்னை-600029.

# முதற்பதிப்பின் முகவுரை

இந்த அருமையான நூலை வெளிப்படுத்த நேரிட்ட காரணம் பின் வரும் செய்திகளால் தெள்ளிதாய் நன்கு விளங்கும்.

நம்மால் வெளிப்படுத்தப்படும் நூற்களைக் கைக்கொண்டு அவற்றிலுள்ள பல முறைகளையும் செய்து தாமும் அனுபவித்துத் தம் இனச் சுற்றம், நட்பு முதலிய பலருக்கும் உபயோகித்து அவற்றால் பல நற்பயன்களை அடைந்துவரும் நமது நண்பர்கள், நம்மைப் பலவிதத்தாலும் ஆதரித்துப் பெருமைப்படுத்தி வருகின்றார்கள். சித்த மருத்துவத்திலும் ஆங்கில மருத்துவத்திலும் ஒரு நோய்க்காகும் பல சரக்குகளை ஒருங்கு திரட்டிச் சொல்லப்பட்ட நூற்கள் பல இருக்கின்றன. அப்படியிருப்பதால் அவசியமான சமயத்தில் ஒரு நோய்க்கு இன்னின்ன சரக்குகளாகும்; இன்னின்ன உடலினர்கட்கு இன்னின்னவைகள் தக்கவைகள் என்று தெரிந்து (சமயோசிதம்போல) வேளைக்கு ஏற்றாற்போல் மருந்துகள் செய்ய பெரும் உதவியாயிருக்கின்றது. அவ்விதம் தமிழில் ஒரு நூல் இல்லாதது பெருங் குறையாயிருந்தது. ஆதலால், அவ்வகை நூலை வெளிப்படுத்தி அக்குறையை நீக்கியதனைச் சிறுவர் முதல் யாவரும் மனனஞ் செய்யும் படியாகச் செய்யுளாக அமைத்தால் மிகவும் பயனுயிருக்குமென நமது நண்பர்களுள் பலர் பல நாள்களா நம்மை வற்புறுத்தி வந்தனர்.

ஆனால், இப்பெருங் காரியத்தைச் செய்து நிறைவேற்ற அடியேன் பல வகையிலும் சக்தியற்றவனாக இருந்தேன் ஆயினும், நமது நண்பர்களின் விருப்பத்தை அவலமாக்க வசமற்றவனாய் இக் காரியத்தில் அதிகக் கவலையுடன் முயற்சி செய்து வந்தேன். அவ்வாறு செய்து வரும்போது வடமொழியில் "சதசுலோகம்" என்னும் நூலொன்றிருப்பதாகத் தெரிந்து அதனைத் தமிழில் மொழி பெயர்த்து வெளிபடுத்தலாமென்னும் நோக்கத்துடன் பார்வையிட்டேன். ஆனால், அது வடமொழிதெரிந்த பண்டிதர்களுக்கும் சரக்கு முதலியவற்றின் பெயர்களுள் பலவித சந்தேகங்களைக் கொடுக்கக் கூடியதாயிருந்தது. அதனால் அதனை மொழிபெயர்த்தால் அரை குறையாய் இருப்பதுடன் வாசகமாயும் இருக்கும். இது நமது நண்பர்களின் விருப்பந்திற்கேற்றதன்று; ஆகையால் அதனை விட்டு முன்னிலும் அதிகச் சிரமத்துடனும் கடினத்துடனும் முயற்சிசெய்து முடிவாக நம்மிடத்துலுள்ள ஏட்டுச் சுவடிகளில் ஏதேனும் இவ்வகை

நூலகப்படுமாவென்று பலநாளாராய்ந்து தேடி வந்தேன். அப்படித் தேடி வரும்போது கடவுளின் அருளாலும் பெரியோர்களின் வாழ்த்தினாலும் நமது நண்பர்களின் நல்லூழாலும் நமது முயற்சி வீண் போகாமல் இந்த நூல் அகப்பட்டது. இதனை ஆதியோடந்தமாக வாசித்துப் பார்த்ததில் மேற்கண்ட கருத்திற்கிசைந்த ஒரு படி நோயிற்காகும் பல சரக்குகளும் ஒன்ருகத் திரட்டப்பட்டும், சிறந்த செய்யுட்களாகவும் செய்யப்பட்டிருந்தபடியால் தேடிப்போன பொருள் வழியிற் கிடைத்ததுபோல் அதிக மகிழ்வு உண்டாயிற்று. ஆதலால், இதனை இப்போது வெளிப்படுத்த முன் வந்தேன். இந்த நூலானது புதுவையிலுள்ள பெருமைமிகு சாமிநாத பண்டிதரவர்‡களாற் செய்யப்பட்டதாகத் தெரிய வருகிறது. இந்நூலின் செய்யுட்களின் தன்மையை நோக்கும்போது இவர் வைத்திய சாத்திர ஆராய்ச்சியிலும் இலக்கண இலக்கிய ஆராய்ச்சிலும் மகாபண்டிதரென்பது நன்கு விளங்குகின்றது. இந்நூல், ஒரு நோய்க்குப் பயனும் பல சரக்குகளையும் ஒன்ருகச் சேர்த்துச் செய்யுட்களாகச் செய்யப்பட்டிருப்பதால் இதனை மனப்பாடஞ் செய்து கொண்டு எந்த இடத்திலும் எந்த நேரத்திலும் ஆங்காங்கு அப்போதைக்கப்போது கிடைக்கும் சரக்குகளினுல் தகுந்த மருத்துவம் செய்வதற்கு வழி உண்டாகும். இன்னும், ஒவ்வொரு சரக்கின் குணங்களைத் தெரிந்து கொள்ள வேண்டுமானுல் பல்லாயிரஞ் செய்யுட்களை மனப்பாடஞ் செய்து கொள்ள வேண்டும். இம்முறையாகத் தனித்தனியே எல்லாச் சரக்குகளின் குணங்களையம் தெரிந்து கொள்வது மிகவும் அரிது; அப்படித் தெரிந்த போதிலும் இன்ன நோய்க்கு இன்ன சரக்கைப் பயன்படுத்த வேண்டுமென்று அவ்வேளையில் தோன்றுவது அதனிலுமரிது; அப்படித் தோற்றினும் அந்தச் சரக்கு நினைத்த இடங்களிற் கிடைப்பதென்பது அரிதினுமரிது; ஆகையால், மேற்கூறியபடி ஒரு நோயிற்குபயோகமாகும் பல சரக்குகளடங்கிய இந்நூலின் செய்யுட்களை மனனஞ் செய்து கொண்டால் அவை எப்போதும் நினைவிலிருக்குமாகையால், அவற்றிற் சொல்லுப்படும் சரக்குகளில் ஏதேனுமொன்று நாம் நினைத்த சமயத்தில் கிடைக்கும். அதைக் கொண்டு மேற்கூறிய இடரில்லாமல் வைத்தியம் செய்யலாம். முன்னே கூறியபடி தனிச் சரக்குகளின் குணத்தைக் சொல்லும் செய்யுட்களை மனப்பாடம் செய்திருக்கின்ற மருத்துவரையும் பின்னே கூறியபடி ஒரு வியாதிக்காகும் பல சரக்குகள் அளடங்கிய செய்யுட்களைமனப்பாடஞ் செய்திருக்கிற மருத்துவரையும் சீர்தூக்கிப் பார்த்தால் பின் கண்டவரே அதிகம் சிறந்தவ

---

குறிப்பு:— இந்நூல்பாயிரத்தில் இதை இயற்றியவர் புதுவை மருத்து நூலோன் சவரிமுத்துமகனுர் கனகராய சிரோமணி எனவும் பாயிரம் இயற்றியது சாமிநாத பண்டிதரெனவும் காணப் படுகிறது.

ராவர். ஏனெனில் இவர் தாம் கற்றிருக்கின்ற நூலின் வல்லபத்தினுல் (ஆற்றலினுல்) எந்த நோய்க்கும் எந்தச் சமயத்திலும் எந்த இடத்திலும் எவருக்கும் சமயோசிதமான சிகிச்சை செய்வார். முன் கண்டவர் அவ்விதம் செய்ய முடியாது. இந்தச் செய்தி பொய் மெய்யென்பதைச் சாத்திரவாதிகளும் அனுபவசாலிகளுமாகிய மகா பண்டிதர்கள் தெரிந்து கொள்வார்கள். இஃதன்றி மருத்துவத்தில் ஒருவர் பழக்கப்பட வேண்டுமானுல், முதலில் அங்காதிபாத நூல் முதலிய சாத்திரங்களைப் படிக்கவேண்டும். அதன் மேல் குணவாகடங்கள், நோயியல்புகள் ஆகியவைகளைப் படிக்க வேண்டும். அப்படிப் படித்தாலும் மருத்துவஞ் செய்யப் பல்லாண்டுகள் செல்லவேண்டும். இந்த நூலை வாசித்தாலோ பழக்கப்பட அவ்வளவு காலம் அவசியமில்லை; கொஞ்சம் வாசிக்கத் தெரிந்த சிறுவர், பெண்கள் ஆகியவர்கட்கும் இதனை மனப்பாடம் செய்வித்தால் அவர்களும் இலேசாக மருத்துவம் செய்தல் கூடும். மனப்பாடஞ் செய்வதற்கும் இது எளிதான நூல் மூன்று அல்லது நான்கு மாதங்களுக்குள் இதனை மனப்பாடஞ் செய்து விடலாம்! இவற்றையெல்லாம் நோக்கும்போது இந்நூல் பல வகையிலும் சிறந்ததாகும்.

இவ்வகைச் சிறப்பு வாய்ந்த இந்நூலில் ஒருநோய்க்காகும் பல சரக்குகள் ஒவ்வொரு செய்யுட்களிலும் சொல்லப்பட்டிருக்கின்றன; அவற்றுள், சில சரக்குகள் வேறு நோய்களுக்கும் எடுத்துக் கூறப்பட்டிருக்கின்றன. அதனுல், இதில் சொல்லப்பட்டிருக்கும் ஒரு சரக்கானது, எந்தெந்த நோய்களுக்கு உபயோகப்படுமெனத் தெரிந்து கொள்வதற்கு ஒவ்வொரு செய்யுட்களையும் ஆராய நேரிடும். அப்படிச் செய்வது முடியாத செயல். ஆகையால், இந்நூலிலுள்ள சரக்குகளை எல்லாம் இதன் ஈற்றில் அகராதி வடிவாக அமைத்து இன்னின்னநோய்க்காகும் என்னும் விளக்கமும் எழுதிச்சேர்த்திருக்கின்றோம். இதில், சில நோய்களுக்கு வடமொழிப் பெயர்களும், மருத்துவ மறைமொழிப் பெயர்களும் கொடுக்கப் பட்டிருக்கின்றன. அவைகளையெல்லாம் சிறந்த மருத்துவர்கள் தெரிந்து கொள்வது கூட மிகவரிது. ஆகையால், அவ்வகைப் பெயர்களையும் அகராதி வரிசை ஏற்படுத்தி அதனதன் சிறப்புப் பெயர்களையும் விளக்கிக் காட்டியிருக்கின்றோம். இன்னும், இந்நூலிலுள்ள ஒருபாட்டில் சரக்கை இன்னின்ன வகையாகப் பயன்படுத்த வேண்டுமென்று சில வகைகள் மட்டும் குறிப்பாய்ச் சொல்லப்பட்டிருக்கின்றன. அந்த வகைகளுக்கும் செய்முறை விவரமில்லை. ஆதலால் ஒவ்வொருவகையும் இன்னின்ன முறையாகச் செய்யவேண்டுமென்னும் விளக்கமும் சரக்குகளின் அளவு முதலியவைகளும் பொதுவிதியாக எழுதி

இதனுடன் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இப்படிச் செய்திருப்பதால் மருத்துவர், மருத்துவரல்லாதவர் ஆகிய எல்லோரும் முறைகளை இலகுவாகச் செய்து கொள்ளலாம். இன்னும், இதிலுள்ள அருஞ் சொற்களுக்கு விளக்கமும், நஞ்சியல்புள்ள சரக்குகள் இன்னின் னவை என்பதும், தனியாய்ப் பயன்படுத்தப்படாத சில சரக்கு களின் முறைகள் இன்னின்னவை என்பதும் ஆங்காங்குக் குறிப் பிடப் பட்டிருக்கின்றன.

இன்னும்பல செய்திகளடங்கிய இந்த அருமையான நூலைவெளி படுத்த உடற்றுன்பம், பொருட்செலவு, காலம்முதலியன எவ்வளவு வேண்டுமென்பது கற்றறிந்த அறிவாளிகட்குத் தெரியாமற் போகாது. இதனைச் சிறிய நூலென வெறுக்காமல் முதலிலிருந்து முடிவுவரைப் படித்து மனனஞ் செய்து கொள்பவர்கள் ஒரு சிறந்த அறிஞருடைய சக்தியை யடைந்து எந்த நோய்க்கும், எந்நேரத் அதிலும் தனிச்சரக்கு மருத்துவம் செய்து வெற்றியடைவார்களென் பது உறுதி. இந்தச் செய்தியானது பழக்கத்தால் உறுதி செய்தறியக் கூடுமே யொழிய வாய்ப் பேச்சினாலும் வீண் தருக்கத்தினாலும் தெரிந்து கொள்ள முடியாது. அதனால், நமது நண்பர்களிதனை ஆதியோடந்தமாக வாய்ப்பாடஞ் செய்தாயினும் அல்லது அவசிய மான காலங்களில் இதனை ஆழ்ந்த கருத்துடன் படித்தாயினும் இதிற் சொல்லிருக்கின்ற விதிப்படி மருத்துவம் செய்து தாமும் நற் பயனை யடைந்து பிறர்க்கும் நல்ல பயன்களை உண்டாக்குவார் களென நம்புகின்றோம்.

இந்த நூலானது ஏட்டிலிருந்து எடுத்து எழுதப்பட்ட படி யாலும், மனித இயல்புத் தவறுதலினாலும் இன்னும் வேறு பல விதக் காரணங்களிலும் இதில் பலவிதப் பிழைகள் நேரிட்டிருக்க லாம். அவற்றைத் தெரிந்த பண்டிதர்களும், அறிவாளிகளும், பயிற்சி முதிர்வு உடையவர்களும் இவ்வேழையை மன்னித்து அப்பிழைகளைத் திருத்தித் தெரியப்படுத்தினால் அவை, சாத்திரம், உத்தி, புத்தி ஆகியவைகளுக்கு ஒத்திருக்குமாயின் அப்பெரியவர் களின் பெயருடன் மறுபதிப்பில் திருத்திப் பதிப்பிக்கப்படும்.

இந்த நூலைப் படித்து இதிற் சொல்லப்படும் செய்திகளை உணர்ந்து அவற்றின்படி நடப்பவர்கள் இம்மைக்குரிய உடல் நலம், உடல் வளம், நீண்ட ஆயுள், நோயற்ற வாழ்வு ஆகியவை களைப் பெற்று இனிது வாழ்வார்களாக ஆமின்.

இங்ஙனம்

**அக்கீம் பா. மு அப்துல்லா சாயபு**

சென்னை—2.

# பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| அகராதி | 61 |
| அசுமரி நோய்க்கு | 16 |
| அதிசார நோய்க்கு (பெருங்கழிச்சல்) | 13 |
| அதி ஸ்தூல நோய்க்கு | 29 |
| அதிக்குரு நோய்க்கு | 30 |
| அபஸ்மார நோய்க்கு (மனநோய்) | 35 |
| அல்குல் நோய்க்கு | 53 |
| அற்புத இரணத்திற்கு (குருதிக்கட்டி) | 45 |
| ஆவரண பைத்தியத்திற்கு | 28 |
| இரத்த பித்தத்திற்கு | 4 |
| இரத்த குன்மநோய்க்கு | 21 |
| இரண நோய்க்கு | 42 |
| இரைப்பு நச்சு நோய்க்கு | 57 |
| இளகம் | 112 |
| இறை வணக்கம் | 1 |
| உதட்டு நோய்க்கு | 38 |
| உன்மத்தத்திற்கு | 34 |
| ஊறல் கியாழம் | 106 |
| எருவாய்ப் புற்றுநோய்க்கு | 50 |
| எலி நஞ்சு நோய்க்கு | 56 |
| எலும்பு முறிவுக்கு | 44 |
| எலும்புருக்கிக்கு | 5 |
| ஒற்றடம் | 116 |
| கண் நோய்க்கு | 35 |
| கண்டமாலை நோய்க்கு | 39 |
| கருப்ப விப்புருதிக்கு | 20 |
| கருப்பிணி சுகத்திற்கு | 31 |
| கல்கம் | 107 |
| கலப்புத்தூள் | 111 |

| | |
|---|---|
| கன்ன நோய்க்கு (காது நோய்) | 37 |
| காமாலைக்கு (மஞ்சள் நோய்) | 23 |
| காமியத்திற்கு | 52 |
| கிரந்திப் புண்ணுக்கு | 48 |
| கிராணி நோய்க்கு | 14 |
| ✓கிருமி நோய்க்கு (நுண்புழு நோய்) | 26 |
| குடிநீர் | 108 |
| குட்ட நோய்க்கு (தொழுநோய்க்கு) | 25 |
| ✓குரற்கம்மலுக்கு | 8 |
| குருதி எருவாய் நோய்க்கு (இரத்த மூலம்) | 12 |
| குன்ம நோய்க்கு | 20 |
| கோட்ட விரணத்திற்கு | 52 |
| சய நோய்க்கு (இளைப்பு) | 7 |
| சருவ நச்சு நோய்க்கு | 54 |
| சன்னச நோய்க்கு | 11 |
| சிலந்திப்பூச்சி நச்சு நோய்க்கு | 55 |
| சீத சுரத்திற்கு | 4 |
| சீத பித்தத்திற்கு | 25 |
| ✓சுகப்பிரசூதிக்கு | 31 |
| சுவாச காசத்திற்கு | 6 |
| சுவையின்மைக்கு | 8 |
| ✓சேத்தும நோய்க்கு (ஐயம்) | 28 |
| சேற்றுப் புண்ணுக்கு | 51 |
| சோகைக்கு (வீக்கப் பிணி) | 3 |
| சோம நோய்க்கு (வெள்ளைப்பாடு) | 18 |
| தலை நோய்க்கு | 41 |
| தலைமுழுக்குத் தைலம் | 114 |
| ✓தலை மூளை இரணத்திற்கு | 49 |
| தன விப்புருதிக்கு | 19 |
| தப்பளம் | 114 |
| தாப சுரத்திற்கு | 3 |
| தாவர நஞ்சுகளுக்கு | 53 |
| திரி | 115 |

பக்கம்

| | |
|---|---|
| தீப்பட்ட புண்களுக்கு | 43 |
| தூபம் | 115 |
| தேள் நஞ்சு நோய்க்கு | 56 |
| தொண்டை, குரல்வளை நோய்க்கு | 41 |
| நகத்தில் காணும் நோய்க்கு | 50 |
| நகம் பல் நஞ்சு நோய்க்கு | 58 |
| நசியம் | 115 |
| நரை, திரை, முதுமை நோய்க்கு | 58 |
| நாவில் காணும் நோய்க்கு | 39 |
| நீர்வேட்கை நோய்க்கு (விதாக நோய்க்கு) | 9 |
| நுண்புழு நஞ்சு நோய்க்கு | 55 |
| நெய் (கிருதம்) | 118 |
| பதுமகண்ட விரணத்திற்கு | 48 |
| பயன்படுத்தும் வகை | 60 |
| பல் நோய்க்கு | 38 |
| பவுத்திரப் புண்ணுக்கு | 44 |
| பற்று | 114 |
| பாண்டம் | 110 |
| பாண்டு நோய்க்கு (வெளுப்பு நோய்) | 28 |
| பாயிரம் | 1 |
| பால நோய்க்கு | 32 |
| பால கிரகத்திற்கு | 32 |
| பித்த நோய்க்கு (அழல்) | 27 |
| பிரமேகத்திற்கு | 17 |
| பிடித்தைலம் | 114 |
| பீச்சு | 116 |
| புகை பிடித்தல் | 115 |
| புகை கொடுத்தல் | 115 |
| புகைத்திரி | 115 |
| புதிதாய் அடிப்பட்ட புண்ணுக்கு | 43 |
| புரையோடிய புண்களுக்கு | 47 |
| பூதக்கிரக தோடத்திற்கு | 33 |

பக்கம்


| | |
|---|---|
| பெரும்பாட்டிற்கு | 5 |
| ✓பெருவயிறு நோய்க்கு (உதரவாதம்) | 12 |
| பொட்டக விரணத்திற்கு | 49 |
| மகோதர நோய்க்கு | 22 |
| மங்கு நோய் (தோல் நோய்) | 51 |
| மதமூர்ச்சைக்கு | 10 |
| மந்தாக்கினிக்கு | 15 |
| மார்பு நோய்க்கு | 9 |
| முகத்தில் தோன்றும் நோய்க்கு | 40 |
| முகப் பருக்களுக்கு | 48 |
| மூக்கு நோய்க்கு | 38 |
| மூக்குப் பொடி | 114 |
| மூத்திரக் கிரிச்சரத்திற்கு | 15 |
| மூல நோய்க்கு (எருவாய் மூளை) | 11 |
| ✓மூளை இரணத்திற்கு | 45 |
| மேகக்கட்டிக்கு | 18 |
| யானைக்கால் நோய்க்கு | 46 |
| வந்தியா நோய் (மலட்டு நோய்) | 30 |
| வடகம் | 113 |
| ✓வட மொழியிலுள்ள நோய்ப் பெயர்களின் விளக்கப் பட்டியல் | 117 |
| வயித்திய சதக பிற்சேர்க்கை | 105 |
| வாதசுரோணித நோய்க்கு | 28 |
| வாத நோய்க்கு (வளி) | 27 |
| வாத சூலைக்கு (வளி) | 22 |
| வாந்தி நோய்க்கு | 9 |
| வாய் உள் நாக்கு நோய்களுக்கு | 9 |
| விசற்பியாகிய விழற்பாக நோய்க்கு | 24 |
| விசூழிக்கு (வாந்தி பேதி) | 15 |
| விந்து இழப்பு நோய்க்கு | 59 |
| விப்புருதி நோய்க்கு | 16 |
| வெந் நீர் ஊறல் குடிநீர் | 110 |
| வெண்குட்டத்திற்கு | 26 |
| வைசூரி நோய்க்கு | 24 |

# வைத்திய சதகம்

## (சதசுலோகம்)

### இறை வணக்கம்

பூதலத்தி லேபிணிகள் போக்குஞ் சரக்குவகைச்
சாதகமாச் சொல்லுஞ் சதகத்தை—ஆதரவாய்
அச்சிட் டுதவுதற்கிங் காதியிறை யோன்பாத
மிச்சைபெறு நற்றுணையா மே. 1.

அருஞ்சொற்பொருள் :—சதகம்—நூறு பாக்களடங்கிய சிறுநூல் (96 பிரபந்த வகையில் ஒன்று)

சற்சதானந் தத்தனிமு தன்மையோன் றாள்பணிந்து
சொற்சதச்சு லோகத்தைச் சொல்லிடவே—பற்கலையோர்
நற்றவத்தோர் மாபெரியோர் நன்மருந்து நூற்றெளிந்தோர்
கற்றறிந்தோர் தம்பதங் காப்பு. 2.

(அ. பொ.) :—நூறு பாடல்கள் சதசுலோகம்—[சதம்=நூறு; சுலோகம்—பாடல்; (வடசொல்) சதகமென்று தமிழில் வழங்கப் படும்].

### பாயிரம்

மணிகொண்ட திரைபூ வானும்
வயங்குமுச் சுடர்மற் றெல்லாம்
அணிகொண்ட விரலாற் றாங்கு
மறுதிமுத் தொழிலோன் பாதம்
பணிகொண்ட சிரமேற் கொண்டு
பண்டிதற் குதவி யாகத்
துணிகொண்ட மனத்திற் றேர்ந்து
சொற்றினன் தமிழின் நூலே.

(அ. பொ.) :—மணி—நவரத்தினங்கள்; திரை (ஆகுபெயர்)—கடல்; பூ—நிலவலயம்; வான்—ஆகாயம்; வயங்கும்—விளங்கும், முச்சுடர்—ஞாயிறு; மதி, தீ; முத்தொழில்—ஆக்கல், அழித்தல்; காத்தல்; பணி கொண்ட—பணிதலை நோன்பாய்க் கொண்ட; சிரம்—தலை; பண்டிதர்—மருத்துவ வல்லுநர் (பொதுவான பெயர் சிறப்பாக மருத்துவ வல்லுநரைச் சுட்டும்.) சொற்றினன்—(அரிய சொல்லாட்சி) சொன்னேன்.

நிதிபெறு புதுவை யென்னும் நீணகர் வைகி வாழுந்
துதிபெறுஞ் சைவ வேளாளர்த் தூய்குலத் திலத மானேன்
ததிபெறு மருத்து நூலோன் சவரிமுத் தென்பா னீன்ற
திதிபெறு கனக ராய சிரோமணி யென்னு மன்னோன்.

**(அ.பொ.)**:—நிதி—செல்வம்; நீணகர்—பெரிய பட்டினம்; வைகி—வாழ்ந்து, துதி-சிறப்பு ; திலதம்—திலகம்—சிறப்புத்தோன்றல்; ததிபெறும்—உற்றவிடத்தில் உதவி பெறத்தக்க; மருத்துநூலோன் (வயித்தல்) வைத்திய நூல் அறிவு பெற்றவன்; ஈன்ற—பெற்ற.

திருவளர் பாதத்தைப் போற்றிச் செகமெலாம் பயன்ப யப்ப
மருவளர் சுலோகம் நூறாய் வழங்கிய சதசு லோகங்
கருவளர் தமிழாற் செய்யுட் கவிபல விருத்தப் பாவாற்
குருவள ரறிவாற் செய்தான் குவலயம் வியப்பத் தானே.

**(அ.பொ.)**:—செகம்—உலகம்; மரு—மணம், இசை; பல்விருத்தப் பாக்களால்—பலவகைச் சந்தங்கொண்ட விருத்தப்பாடல்களால் குரு—இருள்நீக்கியவர்; குவலயம்—உலகம் (மண்ணுருண்டை.)

கருத்தினால் பலவுந் தேர்ந்து காவிய புராணச் செய்யுட்
பொருத்துநூல் பலவுஞ் செய்தோன் புரவலன் சாமி நாதன்
திருத்துநூ லனந்த வியாதித் தேடருஞ் சதசு லோகம்
மருத்துநூற் பாயி ரத்தை வளம்பெற வுரைத்த தன்றே.

**(அ.பொ.)**:—கருத்தினால்—உள்ளத்தின் இயல்பு முதலியவை. களைக்கூறும் போகப்பனுவல்கள்; புரவலன்—கவியரையன்; திருத்துநூலனந்தவியாதி—(அனந்த வியாதி திருத்து நூல்)அளவு கடந்த நோய்களைத் தீர்த்திடும் நூல். (மருத்துவநூல்)

ஆக பாயிரம் 4 பாடல்கள் முற்றும்.

## நூல்

### ஆசிரிய விருத்தம்.

### தாபச் சுரத்திற்கு

முத்தமும் பற்படக முந்திரிகைப் பேரீந்து
மூங்கிலிலைப் பூநாகம்
முலைப்பாலு மிளநீரும் மஞ்சட்டி ரோகணியு
முயர்சந்த னந்தாரமுங்

கொத்தமல் லிகைசுக்கு காஞ்சோரி நிலவேம்பு
கொன்றைபுடல் தசமூலமுங்
கோட்டம்வெட் பாலைகரு நெய்தல் அரசம்பட்டை
கோரோச னம்மதுரம்

சித்தாமுட் டியிலுப்பை நெய்ச்சட்டிப் புளியாரை
சிறுமூல நன்னாரியுஞ்
செவ்வியந்திப் பிலிதோடை பூசணிக் கொடிசீனி
சிறுதேக்கு வேம்புமருளுந்

சித்தரத் தையும்வெட்டி வேருட னிலாமிச்சு
தான்றிகடு நெல்லிசீந்திற்
சதாவரி ருத்திராட்சம் வட்டத் திருப்பியுஞ்
சகலசுரத் திற்குமாகுமே.

(அ. பொ.) :— தாபம்—ஓங்கி நீங்காவெம்மை; சுரம்=வெப்பு நோய்; முத்தம்—முத்து; கோரைக்கிழங்கு (முத்தக் காசுஎன்பதன் மரூஉ), முந்திரிகை—திராட்சை; ரோகணி—கடுகுரோகணி தாரம்—தேவதாரு; அரிதாரம் என்னும் தாளகம்; புடல்—பேய்ப் புடல்; தசமூலம்—வில்வம், வாகை; பெருங்குமிழ், பாதிரி, தழுதாழை, கண்டங்கத்திரி, சிறுமல்லி, பெருமல்லி, சிறு வழுதுணை, சிறுநெருஞ்சில் (இது சித்தர்) வழக்கு; மதுரம்—அதி மதுரம்; சிறுமூலம்—கண்டத்திப்பிலி; தோடை—ஆடாதோடை; சீனி—சர்க்கரை; சிறுதேக்கு—கண்டுபாரங்கி; மருள்—ஒருவகைக் கற்றாழை; கடு—கடுக்காய்; சதாவரி— தண்ணீர்விட்டான் கிழங்கு சகல—எல்லா வகை.

குறிப்பு :—சித்த முட்டி—இது சிற்றாமுட்டி என்னும் சொல் குறுக்கல் விகாரமுடன் எதுகை நோக்கி எடுத்தாளப் பட்டுள்ளது காண்க.

(2) சிலர் முத்தம் என்பதை சிற்றாமணக்கின் விதை என்பர்; பொருந்துமேல் கொள்க. (2) தசமூலத்தில் பலவகை உண்டு. பிற நூல்களில் கண்டு கொள்க.

## சீதச் சுரத்திற்கு

வட்டத்திருப்பி வேரோடு பெருமுட்டி
மரமஞ்சள் திரிகடுகொ டுள்ளியதும்
விட்டுணுக்கிரந்தி நாரத்தம் வேருமேவும்
பத்திரி பிஞ்சொடு நொச்சிலியும்
ஒட்டறையோடிரு துளசியு மூக்குரட்டை
யுயரும்லவங்கத் தோலிலைச் சிரகமும்
திட்டப்பெருமரஞ் சிறுதேக்காலம் பழுப்புஞ்
சீதச்சுரத்திற்கு மாகிடு மென்றனரே. 2

(அ. பொ.)—சீதம்—குளிர்ச்சி (யின் காரணத்தால்); வட்டத் திருப்பி—மலைதாங்கி; பெருமுட்டி —பேராமுட்டி; திரிகடு—சுக்கு, மிளகு, திப்பிலி; உள்ளி — பூண்டுத்திரி; பத்திரி— தாளிச பத்திரி; பிஞ்சு—பிஞ்சு கடுக்காய்; இருதுளசி—கருந்துளசி, வெண்துளசி; லவங்கத்தோல்—இலவங்கப் பட்டை; இலை—இலவங்கப்பத்திரி.

## இரத்த பித்தத்திற்கு

நலமுட னுடா தோடைபற் படகம்
நற்சிறு கீரைமுந் திரிகை
நாட்டுள தென்னம் பாளையு மதுரம்
நல்லிலா மிச்சிரு வேலி

தலமுய ராலின் விழுது பேரீந்து
தண்ணீர்முட் டான்கிழங் கறுகுந்
தான்றியுங் கடுக்காய் நெல்லியுங் குருந்துந்
தாதுமா துளங்கனி பாலுங்

குலவிய சீனி காய்ந்திடுஞ் சாணங்
கோவதின் நெய்யொடு தேனுங்
கோரையின் கிழங்கு மிலுப்பையின் மலருங்
கோதையே சந்தன முடனே

இலவதி நீரும் அதினுடப் பிசினும்
இனியபொன் னுங்கணி யிலையும்
இரத்த பித்தத்திற் காமென வறிந்தும்
இயம்பினர் கும்பமா முனியே. 3

(அ. பொ.):—இருவேலி--வேலிப்பருத்தி என்னும் உத்தா மணியும், கொடிவேலி என்னும் சித்திரமூலமும் என்று கொள்வர். அறுகு—வெள்ளறுகு; குருந்து—கல்லால மரம்; தாது— காவிக்கல்.

பூந்தாதுகள், இரதம்; சாணம்—பிராணியின் மலம் (சிறப்பாக பசு மாட்டின் சாணம்) கோ—பசு; இலவதின் நீர்—இலவமர வேரிலி ருந்து எடுக்குநீர்; இயம்பினர் — கூறினர்; கும்பமா முனி — அகத்தியர்.

## பெரும்பாட்டிற்கு

நாகலும் பாலை யத்திவெட் பாலை
நற்கருங் காலியின் பட்டை
நலந்தருங் கருப்பஞ் சாறுட னரக்கும்
நற்பெரும் பூசணிக் காயும்

தோகையே சிவந்த பருத்தியின் பூவுந்
துணியதின் சாம்பல்தா மரைப்பூ
சொன்னவிக் கிழங்கும் வாழையின் பூவுஞ்
சொற்கரு நெய்தலோ டிந்து

மோகமாந் தென்னம் பாளைசந் தனமும்
முத்தமும் நெல்லியின் காயும்
மூடிய பேய்க்கொம் மட்டியி னிலையும்
முழுங்குபச் சிலையும்நீர் முட்டான்

மாகனலவங்கப் பட்டையீ தெல்லாம்
மாதர்கள் யோனியிற் பெருகும்
வன்பெரும் பாடோ டிரத்தமாம் பித்தம்
வாங்குமென் றுரைத்தனர் முனியே. 4

(அ. பொ.):—நாகல்—(பரவை வழக்கு) நாவல் என்னும் மரம் (இதன் பட்டை); பாலை—பாலைக்கொடி; அரக்கு—கொம்பரக்கு (லாட்சா); பெரும்பூசணிக்காய்—வெண்பூசணிக்காய்; இந்து—இந்துப்பு; வெள்ளி; மோகம்=பாதிரி, முருங்கை, வாழை; நீர் முட்டான்—தண்ணீர்விட்டான் கிழங்கு; யோனீ—பெண்குறி; வாங்கும்—தீர்க்கும்; முனி—அகத்தியரைச் சுட்டும் (இதற்கு முன் பாடலைக்காண்க.)

## எலும்புருக்கிக்கு

நிலப்பனையும் வெட்பாலை யொதியம் பட்டை
நெருஞ்சில்வே ரரக்குமுத்தம் நெல்லிசீந்தில்
இலுப்பையுடன் பலாசம்பூ தாமரைப்பூ
இலைக்கந்தம் மாம்பருப்பு நெய்தற்கந்தம்

நலப்படுவட் டத்திருப்பி வாழைக் கந்தம்
நந்தியாம் வட்டம திமதுரம் நாகல்
இலைப்பெருந் கருங்காலி தண்ணீர் விட்டான்
எலும்புருக்கித் தீர்க்குமென இயம்பினரே 5

(அ. பொ.) :—தாமரைப்பூ, இலை, கந்தம்—தாமரையின் பூ தாமரையின் தளிரிலை; தாமரையின் கிழங்கு; மதி—வெள்ளி (கந்தமென்று வருவவை வெல்லாம் கிழங்கு என்ற பொருள்.)

## சுவாசகாசத்திற்கு

கண்டுபா ரங்கியிரு சங்குமா டாதோடை
காயமோ டிருசீ ரகமும்
கடுகுமோ தகனெச்சில் தாளக மனேசிலை
கரிசாலை பருத்தி யிலையுங்

காஞ்தூ துளையிந்து சாரணை விளாவிலை
கனியொடு வசம்பு குக்கில்
கறிக்கணு வெண்கருங் காலிசா திக்காயும்
கருங்கா லியவச் சாரமும்

மண்டுகற் கடசிங்கி தேவதா ரமுள்ளி
மாஞ்சில் தாளி சேலமும்
வள்ளை வெந்தய ங்கொள்ளு வெட்பாலை
சர்க்கரை வனமுருக் கொடுபண்ணையும்

வாலுளுவை நாகேச மிலவங்கப் பத்திரியும்
மஞ்சள் தேன்சடை யாயிலும்
மயிலிறகு சாம்பலும் ஆம்பல்சிற் ருமுட்டி
மருதணி யிலந்தை வித்துங்

கொண்டதிப் பிலிமூலந் தான்றிகடு நெல்லியுங்
கொன்றையோ டரத்தை யகிலுங்
கோட்டமொடு சீதளை தும்பைகீழ் வாய்நெல்லிக்
கொடிவே லியுந்தி ராயுங்

கூகைநீ ராவின்பால் செம்பை முக்கத்தாரி
கோல வித்தொடு பட்டையுங்
குப்பைமே னியுமுன்னை துளசிபொன் னுவரை
குமிழிரு நெருஞ்சில் வேருந்

துண்டமா மிலவங்கப் பட்டைசிறு கொம்மட்டி
சுக்குபெரு வாகை தேற்றான்
துய்யமுள் ளங்கியுந் தழுதாழை பெருமல்லி
சொற்பொ டுதலைக் காயதுந்

தொடர்கண்டங் காரியும் வில்லை வழுதலைவேருஞ்
சொற்க ஞசிறு மல்லியுந்
தூயபா திரிவேரு மிளகுதேன் செவ்வியஞ்
சுவாச விக்கலுந் தீருமே. 6

(அ. பொ.):— இருசங்கு—சங்கங்குப்பி என்னும் மூலியும்; சங்கு என்னும் கடற்படு பொருளும்; காயம்—பெருங்காயம்; இரு சீரகம்—நற்சீரகம், பெருஞ்சீரகம்; மோதகம்—அசமோதகம் என்னும் ஒரு வகை ஓமம்; இந்து—இந்துப்பு, வெள்ளி; சாரணை—வெண் சாருவேளை (சாட்டரணை என்றும் வழங்கும்). விளாவிலைகனி யொடு—விளாமரத்தின் இலையும் பழமும்; குக்குல்—மைசாட்சி (குக்குலு) குங்கிலியம்; கறி—மிளகு; கணு — திப்பிலி மாஞ்சில் — சடாமாஞ்சில்; பண்ணை — பண்ணைக்கீரை; நாகேசம் — சிறு நாகப்பூ; சடை—சடையென்னும் நீர்ப்பூண்டு (நெட்டி என்றும் வழங்கப்பெறும்); மருதாணி—மருதோன்றி; (பரவை வழக்கு) சீதளை—கொடி மாதளை, ஒருவகை நாரத்தை; திராய்—தொராக் கீரை (பம்பந்திராய் என்றுங் கூறுவர்; செம்பை— கருஞ்செம்பை; கோல்வித்தொடு பட்டையும்—(அங்கோலம் என்னும் சொல்லின் முதற்குறை) அழிஞ்சில்விதையும், அழிஞ்சிற் பட்டையும்; இரு நெரிஞ்சில் — சிறுநெருஞ்சில், யானைநெருஞ்சில்; துண்டம் — இஞ்சி; வில்லை—வில்வம்; சுவாசம் — இரைப்பு. (சடை என்பதைச் சடாமாஞ்சி என்பாரும் உண்டு.)

## சய நோய்க்கு (இளைப்பு)

உற்றகறி பாலையும் வெள்ளா டதன்பாலும்
ஓங்கு மயிர்மா ணிக்கமும்
உடும்பதி னிறைச்சியும் பூசணிக் காயதும்
உயர்நி லக்குமிழ் வேரதுங்

கொத்துமலிப் பேரீந்து முந்திரிகை யின்கனி
கோவி னெய்யொடு வெண்ணெயுங்
குலவுநீர் முட்டானு மட்டவர்க் கத்துடன்
கூறுநல் லமுக்கு ராவுந்

தொற்றிவளர் சீந்திலும் நாகமல் லிகைவேருந்
துய்ய முத்தக் காசதுஞ்
சொற்சடா மாஞ்சிலோ டிலுப்பையின் பூவுந்
துதிபெற்ற நல்செந் தேனதுந்

சித்தமொ டுரைத்தமுன் காசசு வாசமாந்
திரவிய வர்க்கங் களெல்லாஞ்

சயரோக மானதொரு கபத்தைத் தீர்க்குமெனச்
செப்பினன் கும்ப முனியே. 7

(அ. பொ.) :—வெள்ளாடு — வெள்ளாட்டின் இறைச்சி; நீர் மூட்டான் — தண்ணீர்விட்டான்கிழங்கு; அட்டவருக்கம் — திரிகடுகு, இருசீரகம், ஓமம், காயம், இந்துப்பு ஆகியவை; முத்தக்காசு — கோரைக்கிழங்கு.

## குரற்கம்மலுக்கு

கண்டுபா ரங்கியுந் திப்பிலியின் மூலமுங்
கருவேம் பொடுமுள் ளங்கியுங்
கரிசாலை பண்ணையும் வசம்பில்ல யுருத்திராட்சம்
சங்கன் சிரமே லமதுவும்

மண்டுதேன் செவ்வியமு முந்திரிகைக் கொடிவேலி
வனம ணித்தக் காளியும்
வளருமா டாதோடை மிளகு திப்பிலி சிறிய
வழுதலை யின்வே ரானதுந்

துண்டமா மிலவங்கப் பட்டையொடு பத்திரி
சுக்குட னரத்தை யகிலுந்
துய்யகண் டங்காலி யானையின் திப்பிலிச்
சுகந்த மாமில வங்கமுங்

கண்டுமுன் சொன்னதொரு காசச் சுவாசமாங்
கபவகை நோய்க ளெல்லாங்
காணுங் குரற்கம்ம லானசுர சாதமாங்
கருதிய மருந்தி வைகளாமே. 8

(அ. பொ.) :— திப்பிலியின்மூலம் —கண்டத்திப்பிலி; சிரம் — சீரகம்; அரத்தை—சிற்றரத்தை; சுகந்தம்—நறுமணம்; கண்டு— கற்கண்டும், சுரசாதம்—குரல்கம்மல்.

## சுவையின்மைக்கு

திரிகடு கிஞ்சிவெல்லஞ் சீரகஞ் திரிசா தீகஞ்
திருகுதா தளையிந்துப்புச் சிறுமூல மாது லங்கம்
இருகுசக்கரை தாளீசமியல் வேப்பம் பூவுஞ் செவ்யம்
அருதிநற் றிராயினேடு மரோசிகந் தீர்ப்ப தாமே. 9

(அ. பொ.):—திரிசாதம்—இலவங்கபத்திரி,இலவங்கப்பட்டை,சிறுநாகப்பூ என மூன்றுமாம்;ஈகம்—சந்தனம்; மாதுலங்கம்—கணபதி

நாரத்தை; செவ்யம் — செவ்வியம் (இடைக்குறை) ; அரோசகம் —சுவையின்மை; விருப்பமின்மை; மாதுலுங்கம் என்பது நாரத்தை வகையில் ஒன்று இதனைக்கணபதி நாரங்கம் என்பர் சேர நாட்டவர்.

## வாந்தி நோய்க்கு

புத்தோடு நாகமாந் துளிரும் வில்வம்
பொரிதாளிப் பத்திரியும் பொரிமா சுக்கும்
இத்தோடு சர்க்கரைதே னிளநீர் பாலும்
இலந்தைவிதைச் சீரகமும் மாதுலங்கங்
கொத்தமலி மாதளையின் பழமு முத்தங்
கொண்டவிளாங் கனியுமிரு வேலி சந்தம்
அத்தோடு பிலங்குறைக்கும் வாந்திக் கெல்லாம்
ஆகுமென வேமுனிவ ரருளினரே. 1

(அ. பொ.) :—புத்தோடு—புதிய மண் ஓடு; பொரி—நெற் பொரி; பிலம்—வன்மை; வலிவு.

## மார்பு நோய்க்கு

தசமூலம் மூக்கரட்டை யெள்ளி னெண்ணெய்
சாரணையின் வேருடனே தேவ தாரம்
நிசமாகு மரமஞ்சள் கூகை நீறும்
நேர்பஞ்ச லவணமுடன் நெய்யுஞ் சுக்கும்
கசமாறு மரத்தையுடன் சிற்று முட்டிக்
காயமுட னரக்கிவைகள் கருதிக் கொண்டு
வசமாகும் உருத்ரவாயு வென்னும் பேராம்
மார்பினோய்க் காமென வகுத்த தாமே. 11

(அ. பொ.):—பஞ்சலவணம் — கறியுப்பு, இந்துப்பு, வளையலுப்பு வெடியுப்பு, கருப்பு உப்பு என்றும்; வளையலுப்பு, அமுரியுப்பு கல்லுப்பு, அட்டுப்பு, மரவுப்பு என்றும் பற்பல நூல்களில் பற்பல விதமாய்க் கூறப்பட்டுள்ளது. உத்திக்கு உகந்தவாறு கொள்க. கசம் —(காசம்) இருமல், ஆறும்—தீரும்.

## நீர்வேட்கை நோய்க்கு (விதாகக நோய்க்கு)

இச்சைகொள் ளதிமதுர மிருவே லிலாமிச்சும்
இனியமா தளையின் பழமும்
இலுப்பையின் பூவதும் நெல்லியும் பேய்ப்புடல்
இளநீ ருடன் சீனியும்

பச்சைகற் பூரமுஞ் சீந்திலும் நெற்பொரியும்
பாலு டன்பொரி மாவதும்
பற்படக நன்னாரி பச்சைப் பயற்றுநீர்
பருநி லக்குமிழ் வேரதுங்

கொச்சை முந்திரிகையும் பேரீந்து முத்தமுங்
கொத்து மல்லிகைச் சந்தனங்
குளிர்ந்ததண் ணீரதுஞ் செந்தேனு மாகவே
குறித்த நன்னில வேம்பதும்

மிச்சமாய் நீருண்ட தண்ணீர் மிட்டானதும்
மேவுநற் செங்க ரும்பும்
வேகமே லதுகொண்டு தாகமாய்த் தோன்றிய
விதாக நோய் தீர்ப்பதாமே. 12

(அ. பொ.):—இனிய மாதுளை—இனிப்புச் சுவையுள்ள மாதுளை; கொச்சை—வெள்ளாடு (இறைச்சி); வேகம்—விரைவு; தாகம்—எரிவு; விதாகம்—மிக்க எரிவுடன் கூடிய நீர்வேட்கை.

குறிப்பு :—கொச்சை முந்திரிகை என்று கொண்டு—கொட்டை திராட்சை என்பாரும் உண்டு.

## மதமூர்ச்சைக்கு

முந்திரிகைப் பேரீந்து கதலிப் பழத்துடன்
முத்தமு மிலந்தை வித்தும்
முலைப்பா லுடன்வெட்டி வேருட னிலாமிச்சு
மோரிற் றெளிந்த நீருங்

கந்தமுறும் பச்சைக்கற் பூரமும் பச்சரிசிக்
கழுநீ ருஞ்சா ராயமுங்
கரிப்பாலை நீரதும் பாலுட னிளநீருங்
கருது பொன்னு வாரையுந்

தந்தசிறு காஞ்சோரி குழம்புமோர் கல்லுப்புச்
சம்பழ மிலுப்பை மலருந்
தாமரைக் கந்தமும் நெற்பொரியும் நன்னாரி
சர்க்கரை யுமதி மதுரமும்

வந்தகடு தான்றியும் நெல்லியுங் கல்மதமும்
வெண்பூசணிக் காயதும்
மாதளைக் கனியதும் நெய்யுடன் திப்பிலியும்
மதமூர்ச்சை தீர்க்கு மாமே. 13

(அ. பொ.) : —கதலி—வாழை, கந்தம்—மணம்; கிழங்கு சம்பழம்—எலுமிச்சம் பழம்.

## சன்னுச நோய்க்கு

சன்னுச ரோக மென்ற பித்தந் தீரத்
தலையழுந்தச் சொரிந்திடுதல் நசியம் பண்ணல்
சொன்னேர்கண் ணஞ்சனமும் புகையும் போடச்
சுட்டிகையும் நகங்கடனி லூசியேற்றல்
கன்னியரே தேனியாற் றும்பி யாலுங்
கடிந்திடவுஞ் செய்திடுத லுள்ளி யிந்து
சன்னதிரி கடுகுடனே மாதுலங்கஞ்
சன்னுசிநோயறும் மருந்திவைதாமே. 14

(அ. பொ.) : —தும்பி-வண்டுகளில் ஓர் இனம்.

## மூல நோய்க்கு (எருவாய் முளை)

சாரணை பிரண்டைக் குழம்பு மோர் கடுக்காய்
தான்றியும் நெல்லியின் காயுந்
தாமரைவளைய முள்ளிநேர் வாளஞ்
சார்கொடு வேலியுஞ் சிவதை

காரிடுங் காட்டுக் கருணையும் வெல்லங்
கரிகரு மையும் பழு பாகல்
கார்புளிக் கருணை புங்குசேங் கொட்டை
கரியவேம் பெள்ளுடன் மெருகுந்

தேரிடுமருளுஞ் சுக்குடன் மிளகுஞ்
செய்யதிப் பிலியவச் சாரம்
தீதறு கொட்டைக் கரந்தை கோமயமுந்
தேன்மொழி யேயின மதுகேள்

வேரெனு மிரதம் வாங்கவுஞ் சார
வேகமே யதுதனக்கீய
வெந்திடச் சாரச் சூட்டினு லறுக்க
மேவிய மூலநோய் போமே. 15

(அ. பொ.): —குழம்பு மோர்—நன்கு கடைந்தமோர்; கரிகருமை —கரிசாலை; கார்புளி—புளி நறளை; கருணை—நல்ல (காரலில்லாத) கருணை, சேனைக்கிழங்கு; மெருகு -- மெருகன் கிழங்கென்னும் யானைச்செவி இலைக் கிழங்கு; கோமயம்—பசுவின் சிறுநீர் என்று உலகோர் கொள்வர்; (உண்மையில் கோமயம் என்பது பசுவின் சாணம் கோசலம் என்பது பசுவின் சிறுநீர்).

## குருதி எருவாய்முளை நோய்க்கு (இரத்தமூலம்)

பூசிடவுந் திரிபுரத்தான் துத்த நாகம்
புகட்டு பேய்ப்பீர்க் கொட்டறையுஞ் சிறுதும்மட்டி
வீசுமயி லடிமரமு மிரத்த மூலம்
வெட்பாலைப் பாவட்டை வெங்கா ரந்தான்
ஆசை மிகும்நீ ருள்ளி தாமரைப்பூ
அரன் கொன்றை மயிலிறகு மாவின் வெண்ணெய்
வாசபெருஞ் சிவிறியுநா யுருவி யிந்து
வல்லுதிர மூலத்தை அகற்றி யாமே. 16

(அ. பொ.) :—பூசிடவுந் திரிபுரத்தான் துத்த நாகம்— (திரிபுரத் தான் பூசிடுந்துத்த நாகம்) சிவன் பூசிக்கொள்வது திருநீறு (திரிபுரத் தான்—சிவன்) ஆகையால், இச் சொற்றொடர் துத்தநாக நீறு அல்லது பற்பத்தைக் குறிக்கும் என்க; இரத்தம்—குங்குமப்பூ; மூலம் —காறுகருணைக்கிழங்கு; நீருள்ளி—வெங்காயம; (சிவிறி—நீர்பீச்சும் இயந்திரம்) பெருஞ் சிவிறி என்பது ஒரு மூலியென் பாடமுண்டு. அரன் கொன்றை—சிவன் அணியும் சரக்கொன்றை.

குறிப்பு :— திரிபுரத்தான்—இதனை ஒரு மருந்து சரக்காகக் கூறப்படுகிறது. இதன் வேறு பெயர் கிடைத்த பின் மறுபதிப்பில் வெளியிடப்படும்.

## பெருவயிறு நோய்க்கு (உதரவாதம்)

காக்காயின் மூங்கி லானதோர் கொருக்கைக்
கருஞ்சிவ தையுமணிப் புங்குங்
காயமுஞ் சிவதைவெளுத்த காக்கணமுங்
கருதிய தில்லையுங் கடுக்காய்

வாக்குயர் சதுரக் கள்ளிநேர் வாளம்
வடித்தகொள் ளதிங்குடி நீரும்
வளருநல் வட்டக் கிலுகிலுப் பையுமே
வல்லாளக் கெண்ணெய் வெள்ளுளியும்

ஆக்குதற் குரிய வேளையின் செடியும்
யானையுங் குதிரையுங் கழுதை
ஆடுட னொட்டை யெருமையும் பசுவும்
அழகிய மனிதரோ டெட்டும்

ஊக்கமாய் விடுத்த மூத்திர மதுவும்
உதரமேப் பொருமியப் பிணியாம்
ஒழுங்குட னுரைத்தார் கும்பமா முனிவர்
உதரவாத தீர்ப்ப தானதுமிதுவே. 17

(அ.பொ.):—காக்காயின் மூங்கில்—கொருக்கந்தட்டு எனப்படும் ஒரு வகை நாணல். இது சங்க நூல்களில் வேழம் என்னும் வழக்கிலுள்ளது. உதரம்—வயிறு; பொருமியப் பிணி—ஊதிப் பருத்த நோய்; உதரவாதனம்—பெருவயிறு அல்லது மஹோதரம் என்னும் பிணி.

## அதிசார நோய்க்கு (பெருங்கழிச்சல்)

வட்டத் திருப்பியும் வெட்பாலை யின்வித்தும்
மாம்ப ருப்பொடு பட்டையும்
வறட்சுண்டி புளியதின் வித்துவேர்ப் புறணியும்
வாழபினி பூலாவதும்

மாதுளங் காயதும் வில்லையி னிளங்காயும்
வன்னிளந் தும்பி யின்காய்
வாழைத்தென் னம்பூவு மாத்தியின் பூவதும்
வாச லவங்கப் பூவது

விட்டக் கொடிக்கழல் வித்து நீர்ப் பூலாவு
மேவுநீர் முள்ளி வித்தும்
வெட்டிவேர் பாலையின் பட்டைச் சாதிக்காயும்
விடத்தே ரியான விலையும்

வேங்கையின் பட்டையும் நெற்பொரியு மாகவே
மேவு மஞ்சிலைத் துளிரதும்
வெள்ளறுகு வித்துடன் சீரகம் பேரீந்து
மேவு திப்பிலி லோத்திரந்

தொட்டக் கருங்காலி நாவலின் பட்டையுந்
துளிரு டன்கடுக்காயதுந்
தோதுசிறு காஞ்சோரி பெருமரப் பட்டையுஞ்
சுக்கு மிலவம் பிசினதுந்

துய்யபால் நல்லெண்ணெய் முத்தமச மோதகஞ்
சொற்க டப்பன் பட்டையுந்
துலங்குகீழ்க் காய்நெல்லி வெட்பாலையின் பட்டை
துய்யவெண் குங்கி லியமும்

அட்டதிக் கெங்குமிகு சித்தர்களு மெச்சிமகி
முருஞ்சடைக்கஞ் சாவதும்
ஆவாரையின் பட்டை நெய்யுடன் செந்தேனும்
ஆவி னற்றயி ரானதும்

ஆதிவிடைய முந்தில்லை வெள்ளாட்டுத் தயிருடன்
ஆனதோர் வகையி தெல்லாம்
அரிதெனப் பொதிகையிற் கும்பமுனி யருளிய
வதிசார நோய்க்குமாமே, 18

(அ. பொ.) :- வில்லையின் இளங்காய்—வில்வப்பிஞ்சு; தும்பி யின் காய்—தும்பி என்னும் மரத்தின்காய்; அஞ்சிலைத் துளிர்—(அத்தி இத்தி, ஆல், அரசு, நாவல் என்னும் ஐந்து துவர்ப்பியாகிய தளிர் கள் என்பாரும் ஐந்திலை கொண்ட நொச்சித்தளிர் என்பாரும் உண்டு.

## கிராணி நோய்க்கு

ஆயிலும் புங்கும் பொடுதலைக் காயும்
அழிஞ்சியுங் குழம்மோர் வசம்பும்
அதிநவச் சாரஞ் சத்தியின் சாரம்
ஆகிய நல்லெவச் சாரந்

தீயிலும் பெரிய சித்திர மூலந்
திரிகடு சிறிய மூ லகமுஞ்
செவ்வியம் பற்பாட கங்கரு வேம்பு
சீரகங் காயம் மூக்குரட்டைப

பாயிலு முட்கா வேளைகா வட்டம்
பருகியப் புல்லுநல் வேளைப்
பகர்புளி யாரை யிந்து கல்லுப்புப்
பாகுகாய்ச் சுப்புபொட் டுலுப்புச்

சாயினுங் கறுத்த வுப்புச் சாரணையுஞ்
சாருமா வாரைதக் கோலந்
தாவு வெங்கார மாரையி னிலையுஞ்
சாற்றினர் கிராணி நோய்க்கே 19

(அ பொ.) :—நல்லெவச்சாரம்—நல்ல யவாட்சாரமும்; சிறிய மூலகங்—கண்டந்திப்பிலி என்னும் மோடி, கறுத்த உப்பு—கருப்பு உப்புபாகும். காய்ச்சுப்பு — பாகுபோலக் காய்ச்சிய உப்பு ஐந்தாம் காய்ச்சல் முதல், ஆறு, ஏழு என்று காய்ச்சி சுத்தம் செய்த வெடியுப்பு.

## மந்தாக்கினிக்கு

சாற்றிய வதிசாரத்திற் காகிய மருந்திரேடு
மாற்றியக் கிராணிக்கான வகையுள்ள திரவியங்கள்
ஏற்றமா யிதிரண்டு மியல்மந்தாக் கினிக்குமாகுந்
தோற்றமாய் முனிவன் சொன்ன தூயநல் லுரையிதே. 20

(அ பொ.) :- — திரவியங்கள் — சரக்குகள்; மந்தாக்கினி— உண்ட உணவைச் செரிப்பிக்கும் அழல் குறைந்த நிலை. உரைகள் மருந்துகள்.

## விசூழிக்கு (வாந்திபேதி)

முன்னமேநீரி லுப்பதைக் கரைத்து
முயல்பெறக் குடித்தபின் சத்தி
முனைந்து செய்வித்தல் கரிசாலைச் சாறு
மூக்கிலே நசியமே பண்ணல்

சொன்ன நல் லவரையிலை தனைக்கருக்கிச்
சுக்குடன் காய்ந்தநீ ருண்ணல்
துய்யகால்குதிமைக்காய்ச்சவுங் கையான்
சுத்தசாரறதனில் வெங்காரங்

கன்னியே பொரித்துக் கொடுக்கவுங் கால்கைக்
கணுவினிற் சேலையாற் சுற்றிக்
கட்டியே வைத்து நல்விரு விழியிற்
கருது மஞ்சனமிட வகைகேள்

மன்னுநற் சுக்குமிளகுதிப் பிலியும்
வகையுட னிவைகளாற் செய்ய
வசங்குமென் றுரைத்தார் விசூழியின் நோய்கள்
வகுத்திடுங் கும்பமா முனியே. 21

அ. பொ. :— முனைந்து— முயன்று; நசியம்—மூக்கிலிடும் (உறிஞ்சவைக்கும்) மருந்து. அஞ்சனம்—கண்ணுக்கிடும் மருந்து விசூழி= இது விஷூசி என்னும் வடசொல்லின் தற்பவமெனக.

## மூத்திரக் கிரிச்சரத்திற்கு

அதிமது ரஞ்சிறு நாணலுந் தெற்பையும்
அரிய நெருஞ்சில் துரா
யானை நெருஞ்சில் கரும்பொடு சந்தனம்
ஆவதின் நெய் பாலும்

மதியுறு சூரிய காந்தியும் பூசணி
வங்கமதின் பற்பம்
மகிழும் பூசிறு கீரையு நெல்லியு
மணலியுங் கவுதும்பை

விதியுறு தேற்றான் வித்தொடு முந்திரிகை
வெள்ளரி யிளநீரும்
வெள்ளறு குடனீர் முள்ளிபொன் னாங்கணி
மேவிய மரமஞ்சள்

முதிருறு சீந்திலு மேலமு டன்னீர்
முத்தமு நிம்பஞ் சர்க்கரை யாவும்
முட்டான் பிரமியது
மூத்திரக் கிரிச்ச நோய்க்கே. 22

(அ. பொ.) :— மணலி — மணலிக்கீரை; குடநீர்—வெல்லத்தைக் குளிர்ந்த நீரில் கரைத்த (பானகம்); நீர்முத்தம்—நீரடிமுத்து நிம்பம்—வேம்பு; முட்டான்—தண்ணீர் விட்டான்கிழங்கு; கிரிச்சரம்—தடையுடனும் மிக்கவலியுடன் ஒழுங்குமின்றி நீர்இறங்கும் நோய்

## அசுமரி நோய்க்கு

கருத்தமுந் திரிகையுங் கொள்ளதின் குடிநீருங்
கன்மத மெவச் சாரமுங்
கருது கற்பூரச் சலாசத்து பாலையுங்
கந்தமா முத்த மதுவும்

வெருத்த முதிகூந்தலுஞ் சிவதைவெங் காரமும்
வெட்டி வேர்வறட் சுண்டியும்
விளக்கெண்ணெய் சாரணை தண்ணீர் முட்டான்
விளாம் பிசின் விழுதி யிலையும்

முரித்தசிற் பீளையும் மாவிலங் கப்பட்டை
முருங்கையின் பட்டை யதுவும்
மூக்குரட்டை யின்வேரு மரிய நீர்ப்பூலாவும்
முந்துமதி மதுர மதுவும்

அருத்தகற் பச்சையாம் பாக்குட னிவையெலாம்
அருக்கு நீர்க் கிரிச்சமான
அரியகற் கட்டெனு முரோக மென்றுரை செய்யும்
அசுமரியை தீர்க்கு மாமே. 23

(அ. பொ.) :—கந்தமா முத்தம் — மணம் பொருந்திய கோரைக் கிழங்கு; முதிகூந்தல்—முதியார் கூந்தல் (அ) அவ்வையார்

## பிரமேகத்திற்கு

கொண்டநல் லாவாரை கடலழிஞ் சிப்பட்டை
கோவைக் கிழங்கி னுடனே
குழம்புமோ ரிருமஞ்சள் பருத்தியின் வித்துடன்
குன்றியின் விதைச் சீந்திலுங்

கோட்டமொடு பேயத்திப் பட்டைசேங் கொட்டை
குக்குல் பொன்னுங் காணியுங்
கோரைக் கிழங்குடன் காந்த மண்டூரமுங்
குலவு தேற்றான் கொட்டையும்

மண்டுநாவற் பட்டை பாலைமருதம் பட்டை
வட்டத் திருப்பி வேரும்
வாசந்தரும் விளாம் பட்டைநிலை யாவாரை
வன்சிறு பயற்று நீரும்

வாகை நிம்பப் பிசின் விடத்தேரி யின்பிசின்
வன்கருங் காலி வெள்வேல்
வகையாம் விளாம்பிசின் கருவேலதன் பிசின்
வன்பலா சம்பி சினதுங்

கண்டதா மரைவித்து முசுட்டையின்னிலை வித்துக்
கருதுநீர் முள்ளி வித்து
கரிய வேப்பிலையுடன் மூங்கிலிலை யல்லிவிதைக்
கடுஞ்சிறு நெருஞ்சி வித்துங்

கானப்பலாசதின் பட்டைதென் னம்பூவுங்
கடிய பூவரசு மலருங்
கருதுகற் பூரச் சலாசத்து மப்பிரகங்
கடுநாகச் செந்தூரமும்

அண்டர்கொள் தேனதுந் தேங்காயி னெண்ணெயும்
அரியநல் லெண்ணெயதுவும்
அரிதான சீனியு முருங்கையின் பட்டையும்
அருநிலப் பனைக்கந்தமும்

அழகாங் கரும்பனைக் கந்தமுந் துத்திவிதை
யதுவுடன் திரிபலை யதும்
ஆன பேராமுட்டி யிவையெலாம் பிரமேக
நோய்க்காகும் திரவியங்கள். 24

(அ. பொ.) :— குழம்பு மோர்—கடைந்த மோர், இருமஞ்சள்—கப்புமஞ்சள், கறிமஞ்சள், குக்குல்—மைசாட்சி (குக்கில்), பாலை

— வெட்பாலைப்பட்டை, நிலையாவாரை —நிலாவாரை; முசுட்டை —பொன்முசுட்டை; கடுஞ்சிறு நெருஞ்சிவித்து—கூரிய முட்களை உடைய தானசிறுநெருஞ்சிவிதை; கானம்—காடு, அண்டர்—தேவர் நல்லெண்ணெய் — எள்நெய், நிலப்பனைக்கந்தம் — நிலப்பனைக் கிழங்கு; கரும்பனைக்கிழங்கு— கரிய பனையின்கிழங்கு, திரிபலை கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய் இம்மூன்றும் மருத்துவத்துக் காகிய முப்பழங்கள்.

## மேகக் கட்டிக்கு

ஏலமுடன் மலைவேப்பம் பிசினுங் கோட்டம்
இலவங்கப் பத்திரியும் வெட்டி வேருஞ்
சாலகரும் போளமகில் குந்திரிக்கந்
தவுணேயம் வெள்ளியந் தேவதாரம்
பாலையதின் பட்டையிலா மிச்ச வேரும்
பருங்கிரந்தித் தகரமுடன் குக்கில் போளம்
வேலையதி நாகணமுஞ் சுக்கு மஞ்சள்
மேகத்தின் கட்டிக் காகுமாமே. 25

(அ. பொ.) :—கரும்போளம் – கரியபோளமென்னும் மூசாம்பரம் (இதனை இரத்தபோள மெனவுங் கூறுவர்.) குந்திரிக்கம்—வெண்குங்கிலியம், தவுணேயம்—முருக்கின்எண்ணெய் (முருக்கில் இருவகையுண்டு: பலாசு, கலியாணமுருக்கென்னும் முள் முருக்கு என்பன —இவ்விரண்டின் எண்ணெய் என்று பொருள் கொண்டு விதிப்படிக் குழித்தைலம் இறக்கி உபயோகிக்க) வேலையதி நாகணம்—கடல் நத்தையினிடம் பெறப்பட்ட நகம் என்னும் பொருள்.

## சோம நோய்க்கு (வெள்ளைப்பாடு)

செய்யவுளுந் ததிமதுரம் நெருஞ்சில் வேருந்
தேற்றான்வித் தேலமுடன் சீந்திற் சத்தும்
வெய்யநிலப் பனைக்கந்தம் பனையின் கந்த
மிலாமிச்சு முந்திரிகை வெட்டி வேருந்
தையலே வாழையதின் பழமுங் கந்தந்
தாமரைப்பூக் கந்தமுடன் தண்ணீர் முட்டான்
துய்யநறு சந்தனமும் நெல்லி சீனி
சோமரோக நோய்க்கெனச் சொன்ன தாமே. 26

(அ. பொ.) ;— சீந்திற் சத்து—சீந்தில் சர்க்கரை; தையலே —(மகடூஉ முன்னிலை) பெண்ணே! கந்தம் என வருவனவெல்லாம்

கிழங்கைக் குறிக்கு மென்று உணர்க. (மணம் என்பதன்று). சோம நோய்—இது பெண்களுக்குக்காணும் நோய். யோனி வழியாய் வெண்மையான நச்சு நீர் பாய்ந்து நலிவு செய்யும் காரணம் பற்றி சோம நோய் என்று பெயர் பெற்றது. (சோமம்=வெண்மை.)

## விப்புருதி நோய்க்கு

சார்மணிப் புங்கும் விழுதியி னிலையுந்
தாணியும் நெல்லியுங் கடுக்காய்ச்
சாரணை தவசி முருங்கையின் வேருந்
தாவுநன் முருங்கையின் வேருங்

கூர்மிகுங் கற்பூரச் சலா சத்துங்
கூகைநீ ருயிலும் புங்குங்
கொடியகண் டகாரி சிறுவழு தலையுங்
கூறுமா விலங்கைமூக் குரட்டைப்

பார்மிகு நிம்ப மமுக்குரா வொதியின்
பட்டைமை சாட்சி பேய்ப் புடலும்
பகர்கொடி வேலி வெட்டி வேர் நாவல்
பட்டையும் நல்லிலா மிச்சுஞ்

சீர்மிகு வயிற்றில் விப்புருதிக்குஞ்
சிறந்தமேல் விருப்புருதிக்குந்
தின்னவும் பற்றுப்போடவும் வயிற்றிற்
சேர்ந்தவிப் புருதி களாமே. 27

(அ. பொ.) :— தாணி—தான்றிக்காய் (தோன்றி என்பது தோணி என்று மருவி வழங்குவது போலத் தான்றி என்பது தாணி என்று மருவி தாணிக்காய் என்று உலகோர் கூறுவதைக் காண்க) வயிற்றில்—வயிற்றினுள் (மறைவிடத்தில்); தின்னவும் — உட்கொள்ளத்தக்கனவற்றைச் சாப்பிடவும். (மற்றவைகளை) பற்றுப் போடவும் —தக்கபடி அரைத்துப் பச்சையாகவோ வெதுப்பியோ பற்றிடவும். விப்புருதி—கட்டிவகைகளில் ஒருவிதம்.

## தன விப்புருதிக்கு

எள்ளுடனே மருதாணி யிலையும் பட்டை
இருவேலி யாவாரை யிலைநன் னுரி
அள்ளியநல் லதிமதுரங் குமரி மஞ்சள்
ஆம்பலுட னரசந்தோ லாலம்பட்டை
வெள்ளைமிகு மாவின்நெய் புங்கம் வேரு
மேவியநல் லத்தியொடு வேப்பம் பட்டை
தள்ளியிதை யரைத்துடனே மேலும் பூசத்
தனத்தி லெழும் விப்புருதி நோய்க்காகுமே. 28

(அ. பொ.) :—மருதாணி—மருதோன்றி (தான்றி என்றது தாணிஎன மருவியதுபோல இச்சொல்லும் மருவியுள்ளதைக் காண்க, குமரி மஞ்சள்—கத்தூரி மஞ்சள்; தோல்—பட்டை; தனம்—முலை (ஸ்தனம் என்ற வட சொல்லின் தற்பவம்).

## கருப்ப விப்புருதிக்கு

காயமுட னிந்துப்புப் பற்ப டாகங்
கழல்விதையும் பாவட்டைக் கரந்தைப் பூண்டு
நாயுருவிக் கொடிவேலி பிரண்டை யுள்ள
நல்லெண்ணெய் விளக்கெண்ணெய் முடக்கொத் தானும்]

தூயநறுஞ் சீரகமும் வசம்பு வீழி
துடியான சாரணையின் வேரிதெல்லாம்
மாயவரும் பிணிகளுக்கு அதிக மான
வன்கெர்ப்ப விப்புருதி நோய்க்காகுமே. 29

(அ. பொ.) :—பற்படாகம்— குறுக்கல் நீட்டல் பற்பாடகம் என்ற சொல்லை யாப்பின் சீரமைப்பின் காரணமாய் நெடிலைக் குறுக்கிக் குறிலை நீட்டி அமைத்துள்ளார்) கழல்விதை—கழற்சிப் பருப்பு—கஜ்ஜக்காய் வித்து என்பர். கரந்தைப்பூண்டு—சிவ கரந்தை; கொட்டைக் கரந்தை என இரண்டுண்டு; சிவகரந்தை மேன்மையானது (அநுபோக வைத்திய நவநீதம் முதல் பாகத்தில் முதலாவதாகக் கூறியுள்ள தேவ கிருபா உசிதம் என்னும் மருந்தின் பெருமையைப் பற்றிப் படித்தும்செய்து உபயோகித்தும் அறிக); கொடிவேலி—உத்தாமணி; விளக்கெண்ணெய்—ஆமணக்கு நெய்; நறுஞ் சீரகம்—மணமுள்ள நற்சீரகம்; மாய—இறக்க; கருப்ப விப்புருதி—கருப்பையில் காணும் விப்புருதிக் கட்டிகள்.

## குன்ம நோய்க்கு

கடிதான நொச்சிலு முழவுமண் குடிநறுங்
கருதுமுழ ஓரு நீரும்
கட்டா மணக்குடன் சிறுமல்லிப் பெருமல்லி
கருவேம்பு தாணி நெல்லி

கடுக்காயும் புங்குடன் பஞ்சலவணந் ஞுக்குக்
கரந்தையுமே வச்சா ரமுங்
காயமுட னெட்டறையு மாயிலின் பட்டையுங்
கழல்விதையு முள்ளங்கியும்

வடிவான புளியன் புறணியின் சாம்பலும்
வன்பனைப்பூச் சாம்பலும்
வாலுளுவை சீந்தியும் சிறியதும் மட்டியும்
வனமுருக் கிள நீரதும்
வசம்புகண் டங்காலி யுள்ளிசிறு வழுதலையு
மாவிலிங் கப்பட்டையும்
மாதுளம் பழநிம்பு நாரத்தை யின்பழம்
மருவுசது ரக்கள்ளியும்
திடமான சத்தியின் சாரமும் வேளையுந்
தேவதாரமும் வில்வமுஞ்
சீரகந் தழுதாழை பாதிரியின் வேரதுந்
திப்பிலி மூல மதுவுஞ்
சித்திரமூலியு மாற்றினிற் சிவிறியுஞ்
செவ்வியந் திப்பிலியதுஞ்
சீரானப் புளியாரை நெருஞ்சியின் வேரதுஞ்
சேருகருஞ் சீரமுங்
கொடிதான சாரணை மூக்குரட்டையின் வேருங்
குலவுநல் லெண்ணெ யதுவுங்
கூகைநீ ராவின்பால் புளிக்கருணை யின்கந்தங்
குப்பையின் மேனியதுவுங்
கொள்ளதின் குடிநீரு மேரண்ட வெண்ணெயுங்
குமிழதின் வேரிதெல்லாங்
கொடியகுன் மங்களும் பீலிகை நோய்க்கென்றுங்
குறுமுனி யுரைத்த படியே. 30

(அ. பொ.) :—திப்பிலி மூலம்—மோடி (கண்டந்திப்பிலி) கருஞ்சீரகம்—(கெடுதல்)கருஞ்சீரகம்; ஏரண்டம்—சிற்றாமணக்கு; பீலிகை—பிலீகை என்னும் கல்லீரல் மண்ணீரல் நோய்; குறுமுனி—அகத்தியர்.

## இரத்தகுன்ம நோய்க்கு

திடமான புங்கம்வே ராயில் பட்டை
சிறியவழு தலைவேருங் கண்டங் காலி
கொடிவேலி சாரணையு மூக்கு ரட்டைக்
கொள்ளுடனே வெள்ளுள்ளி யெள்ளு காயம்
வடிவான முள்முருக்க னிலையும் பட்டை
வனமுருக்கன் தோற்சாம்ப லெவச்சா ரந்தான்
கடிதான விரத்தகுன்ம மென்றும் பேராய்க்
கருதுவார் சத்திகுன்ம நோய்க்காகுமே. 31

(அ. பொ.) :—திடமான— பருத்த; வெள்ளுள்ளி— வெள்ளைப் பூண்டு; சத்தி—வாந்தி (சர்த்தி என்னும் வடசொல்லின் தற்பவம்).

## வாத சூலைக்கு

கச்சசா ரணைவேரும் மூக்கு ரட்டை
கழல் விதையுந் திரிகடுகுங் காயம் நொச்சில்
நச்சுகொடி வேலியுட னுள்ளி காயம்
நல்லெண்ணெய் விளக்கெண்ணெய்க் கழற்சிக்காயும்
பச்சையா மெவச்சாரஞ் சத்திச் சாரம்
பஞ்சலவ ணம்புரசு வசம்புவேலை
வச்சதிப் பிலிமூலஞ் செவியங் கொள்ளும்
வாதமிகுஞ் சூலைகுன்ம நோய்க்காகுமே. 32

(அ. பொ.) :— கச்சசாரணை—மெலிந்ததான சாரணைவேர்.

## மகோதர நோய்க்கு

நஞ்சுபோக் கினவாள முள்ளியும் பெருங்காயம்
நல்லெண்ணெய் விளக்கெண்ணெயும்
நாகண மெவச்சாரஞ் சத்தியின் சாரமும்
நன்மணிப் புங்குவித்தும்

பஞ்சலவ ணம்வட்டக் கிலுகிலுப் பைச்செடி
பலாசதின் சாம்பலதுவும்
பாங்கான தாணியும் நெல்லியின் காயதும்
பண்ணுதில் லஞ்செடியதுங்

கொஞ்சுதிப் பிலி சுக்கு வெள்ளையின் காக்கணன்
கொடியகள் ளிப்பாலதுங்
கூறுகள் ளிக்கரி லோத்திர மகிற் கட்டைக்
கொடிவேலி யுஞ்சிவதையும்

வஞ்சமேயில்லாத பசுவிட்ட நீரதும்
வரிகடுக் காயிதெல்லாம்
மாதரின் மயலாசை யிடுமருந்தால்வரும்
மகோதர நோய்க்காகுமே 33

(அ. பொ.):—நஞ்சுபோக்கின—விடத்தன்மைபொருந்திய முளை யையும் முளை இலையையும் போக்கி முறைப்படி தூய்மை செய்த (நேர்வாளம்) லோத்திரம் —வெள்ளலத்திப் பட்டை; மயல்— மயக்கம், இடுமருந்து—கரவிடம் என்பர் நூலோர் (இது பலவகைப் படும்.) மகோதரம்—பெருவயிறு.

## பாண்டு நோய்க்கு (வெளுப்பு நோய்)

திரிகடு கெருமை மோருஞ் சிறந்தவெள் ளாட்டுமோருங்
குருதுமண் டூரலோகங் கொடிவேலிக் கோவின் நீரும்
அருகுவாய் விளங்கமுத்த மாட்சிக மிருமஞ்சள் தான்
பருங்கடு தான்றி நெல்லி பாண்டுவி னரங்களாமே. 34

(அ; பொ.) :— லோகம்—(வடமொழிப்பெயர்) இரும்பு; கோ— பசு, மாட்சிகம் — நிமிளை (பொன், வெள்ளி, தாம்பிர முதலிய பெரிய கனஉலோகங்களின் வித்து என்றும் நூல்கள் கூறும். ஆகவே பொன்னிமிளை, வெள்ளிநிமிளை, தாம்பிரநிமிளை எனப் பலவகை உண்டு)மாட்சிகத்துக்குத் தேனென்று ஒரு பொருளுண்டென்பதை யும் உணர்க,

## காமாலைக்கு (மஞ்சள் நோய்)

சுக்குபுட லதிமதுரம் நெல்லிசிறு கீரைத்
துய்யபொன்னுங் காணிமுத்தஞ் சந்தனமுங் [கடுக்காய்
மிக்ககரி சாலையுடன் கோட்ட மயிலடியும்
மேதியுடன் வெள்ளாட்டுக் குழம்புமோர் சீந்தில்
தக்கசிறு பயறுபால் நெய்யொடுமான் கொம்பு
தருகீழ்க்காய் நெல்லிசதா வரியுமிரு வேலி
கைக்குநடு மணிக்கட்டி லிரட்சையது போடக்
காமாலை நோய்க்கெனக் கருதுமுனி யுரைத்தார். 35

(அ. பொ.) :—மயிலடி—மயில்மரத்தின் வேர்; மேதி—எருமை சதாவரி— தண்ணீர்விட்டான்கிழங்கு; இரட்சை— சிட்டிகை என்னும் சூடிடல் (கறிமஞ்சளை விளக்குத்தீயில் கொளுத்தி இரண்டு மணிக் கட்டின் பின்புறம் சூடிடுதல் முறை.)

## சோகைக்கு (வீக்கப்பிணி)

மேவுசா ரணைவேரும் நாகண மரத்தையும்
வெள்ளாட்டுநீர் சாணமும்
வேளையு மெவச்சாரங் கோமயங் கொடுவேலி
வெள்ளறுகு காக்கணு னுந்
தாவுநேர் வாளமும் பஞ்சகோ லமுமஞ்சள்
தருமணிப் புங்குவித்துந்
தசமூலம் பிரமியு மிஞ்சிபா வட்டையுஞ்
சார்குழம் பானமோரும்

பாவுநீர் முள்ளிவட்டக்கிலு கிலுப்பையும்
பருதேவ தாரமதுவும்
பாங்கான வெள்ளுள்ளி சிவதைசங் கன்வேரும்
பண்ணுபேய்ப் பீர்க்கினுடனே

தூவுநற் கடுக்காயும் விழுதியி னிலையதுஞ்
சுத்தலோ கப்பொடியதுஞ்
தோகையே யிவையெலாம் முனிவனு முரைத்தபடிச்
சோகையின் நோய்க்காகுமே. 36

(அ. பொ.) :—அரத்தை—சிற்றரத்தை; பேரரத்தை என்பன; பஞ்சகோலம் — சித்திரமூலம், சுக்கு, செவ்வியம், திப்பிலி, திப்பிலி மூலம் ஆகிய ஐந்துங் கூடியது பஞ்சகோலமாம்.

## விசற்பியாகிய விழற்பாக நோய்க்கு

செய்யசெங் கழுநீரும் நெய்தற் கிழங்குடன்
செஞ்சந்த னங்கோட்டமும்
சீந்திலதி மதுரமுந் தாமரைக் கந்தமுந்
திறமான கொடி வேலியுந்

துய்யபா லைப்பட்டை வெள்ளறுகு சந்தனந்
துளசிவேம் பாவி னெய்யுஞ்
சொல்லிலா மிச்சமும் வெட்டிவேர் வள்ளியுஞ்
சுகந்தநன் னாரி யெள்ளும்

வையகம் புகழ்கோரைக் கந்தமுங் கத்தியிலை
வசம்புகிளி மூக்கிலையதும்
மருவுசக் கரவர்த்தி யிலையுடன் பூவரசு
மன்னுகீழ்க்காய் நெல்லியும்

வெய்யபெரு நன்னாரி யறுகுமா லம்விழுது
மேவுதென் னம் பூவதும்
விசற்பியென் றுரைசெயும் விழற்பாக நோய்க்காக
வேதமுனி கூறு மொழியே. 37

(அ. பொ.) :—கத்தியிலை— அரிவாள் மணைப்பூண்டு.

## வைகுரி நோய்க்கு

நல்லாடா தோடையொடு பேய்ப்பு டலும்
நறுநெய்யும் வேப்பம் வேரிலையும் நெல்லிச்
சொல்லா நீர் முட்டானுங் கொள்ளு மஞ்சள்
துராயுடனே மணிப்புங்கும் விபூதி முத்தம்

புல்லாகு மறுகுடனே பெருஞ்செங் குன்றிப்
பூ நிம்பஞ் செருப்படைகற் பூரவல்லி
வல்லாரை யிலையதுவுங் கொப்பை மையாள்
வைசூரி நோய்க்காக வகுத்ததாமே. 38

(அ. பொ.) :— பெருஞ்செங்குன்றி — பெரியதான செந்நிறங் கொண்ட குன்றி (மஞ்சாடி என்பாருமுண்டு); பூநிம்பம் — நிலவேம்பு. கொப்பைமையாள் (இது பிழைபட்டபாடமாகக் கருதப் படுகிறது. கொற்றவையாள் (—காளி, மாரி என்று கூறப்படும் கிராம தேவதை) என்ற பெயர்தான் ஏட்டிலிருந்து பெயர்த்தெழுதியதால் வந்த விளைவு போலும்; ஏடுகாண்புழி தேற்றம் காணலாம்) வைசூரி— அம்மை நோய்.

## சீதபித்தத்திற்கு

நல்லதோர் விபூதி யிந்து
நல்லெண்ணெய் மிளகுத் தூளும்
வெல்லுநற் கடுகு மோதம்
விலாமிச்சு வேரும் நெய்யுஞ்
சில்லெனுஞ் சந்தனங்கள்
சீந்திலி னிலையி தெல்லாஞ்
செல்லுடல் சீத பித்தத்
திரவிய நோய்க் காகுமே. 39

(அ. பொ.) ;—மோதம் — (அசமோதம்) அசமதா ஓமம் என வழங்கும்; சந்தனங்கள் — வெண் சந்தனம், செஞ்சந்தனம் என்ற இரண்டுமாம்; செல்லுடல்—அழிந்துசெல்லும் உடல் 'சீதபித்தத் திரவிய நோய்க்காகுமே என்னும் வரியைச் சீதபித்த நோய்க்காகுமே என்று அமைத்துப் பொருள் கொள்க.

## குட்ட நோய்க்கு (தொழு நோய்)

முந்துசார ணைவேம்பு கெந்தி மருக்காரை
மூங்கில்விதைக் கார்போகி யழிஞ்சி விதை
முத்தமணித் தக்காளி திரிபலையும் மஞ்சள்
மோதுமணிப்புங் குவிதை கரிசலாங் கண்ணிச்

சந்தனமுங் கற்பூர வல்லிப் பெருவாகைச்
சடைச்சிமஞ்ஞே சிலைவட்டக் கிலுகிலுப்பை வீழித்
தாளகமுங் குனிநாவ லிலந்தைவிதை வேங்கை
தகரைவிதை பாவட்டை யெருக்கொடு காஞ்சோரி

வந்தசிறு தும்மட்டி காக்கரட்டான் பூவும்
மரமஞ்சள் சேங்கொட்டை வசம்பொடு வாலுளுவை
வாய்விளங்க மிருவேலி கள்ளிகருங்காலி
வனமல்லி புடலாடா தோடை யிலாமிச்சம்

குந்துகரும்பனை யனிச்சை செருப்படை யொட்டறையுங்
கொடிவேலி யாவாரை கொன்றை திரிபுரத்தான்
கூறும்பேய்ப் பீர்க்கட்ட மூத்தரம் பேயத்தி
கொண்ட வெட்பாலை விதைக் குட்டத்தின் நோய்க்கே 40

(அ. பொ.) :— அனிச்சை— அனிச்ச மென்ற மூலிகை
(திருக்குறள் :—''மோப்பக்குழையும் அனிச்சம்'')
திரிபுரத்தான் — ஈசனின் பெயர் ஆகையால், இரசம், சிவனார் வேம்பு, ஈச்சுரமூலி என்ற மருந்து சரக்குகளைக் கொள்ளலாம்.

## வெண்குட்டத்திற்கு

நீலிவேர் கடுதாணி கண்டங் காலி
நெல்லியர சிலைக் கொன்றை பொன்னுவாரை
சீலநறுந் தாளி வெள்ளைக் காக்க ணனும்
செவ்வகத்தி விதையுள்ளிச் சேராங் கொட்டை
ஆலமறுங் கார்போகி மருதம் பட்டை
அரப்பொடியும் வெண்ணெயதி மதுரம் வேளை
மேலான காட்டெள்ளு செம்பருத்தி
வெண்குட்ட நோய்க்காக விளம்பி னாரே. 41

(அ. பொ.) :—நீலி—அவுரி; கடு—கடுக்காய். ஆலமறும்—விடம் தீரும்.

## கிருமி நோய்க்கு (நுண் புழு நோய்)

வனத்தினிற் புரசன் விதையொடு காயம்
வசம்புவெள் ளுள்ளியும் பரட்டை
வன்கொடு வேலி வேம்பதின் பருப்பும்
வாய்விளங் கங்கடுக் காயுஞ்

சினத்திடுந் தென்னம் பாளையு மவுரி
செருப்படிப் பிரண்டைவேப் பிலையுந்
திப்பிலி சேராங் கொட்டையும் பாகல்
செய்யமூக் குரட்டைச் சந்தனமும்

கனத்திடுங் கோவைக் கிழங்கொடு முத்தங்
கழல்விதைத் தகரையின் விதையும்
காட்டெரு மைப்பால் மூங்கிலின் குருத்துங்
கடுமெவச் சாரமா னதுவும்

அனத்திடு நொச்சில் கசப்பது கொடுக்கும்
அருமையாந் திராயிவை யெல்லாம்
ஆனதோர் வயிற்றிற் பூச்சிபு ழுக்கள்
ஆகியக் கிருமிநோய்க் காகுமே. 42

(அ. பொ.) :—புரசன்—பலாசு; பரட்டை— கீரை வகையில் ஒன்றென்பர் (இதன் வேறு பெயர்கள் கிடைத்திலது); கிருமி—புழு.

## வாத நோய்க்கு (வளி)

அரத்தையோ டிருமஞ்சள் கோட்ட மீந்தும்
அகில்தேவ தாரமுட னும்ப லிண்டும்
ஆயிலுடன் புங்கெருக்கு முதியார் கூந்தல்
அறுகன்வே ரட்டவர்க்கஞ் சதுரக் கள்ளி

உரத்தசிறு முட்டியுடன் பேரா முட்டி
உளுந்துடனே கொள்ளதுவின் குடிநீர் நொச்சி
ஓங்குமா விலங்கைதச மூலங்கள்ளி
உயர்குப்பை மேனிகரும் போளங்காயம்

பருத்திவிதை நல்லெண்ணெய் வேம்பி னெண்ணெய்
பகர்சிற்று மணக்கெண்ணெய் விளக்கினெண்ணெய்
பாரிலுறுந் தழுதாழைக் களறுழாயும்
பருங்கிரந்தி தகரமுடன் சரளங் குக்கில்

வருத்தமறு சதகுப்பை யிலந்தை வித்தும்
மருதணியுஞ் சாரணைகுங் கிலியம் வீழி
வாசமுறும் பூங்குழலாய் சொல்லக் கேளாய்
வாதத்தின் நோய்க்காக வகுத்த தாமே. 48

(அ. பொ.):-குப்பை—சதகுப்பை; விளக்கினெண்ணெய்—பேரா மணக்கெண்ணெய் என்று கொள்க. சரளம்—சரள தேவதாரு.

## பித்த நோய்க்கு (அழல்)

சீதையே சிறுநாணற் காவட்டம்புல்
தருப்பையொடு பெருநாணல் சீந்தில்சந்தந்
தேங்காய்ப்பா லறுகினநீர் முத்தம் பாலைச்
சிறுகீரை யிலுப்பைப்பூச் சிவந்த நெய்தல்

தாதுமா துளங்கனியு மதுரம் வேம்பு
சருக்கரையு முந்திரிகைப் பிச்சிப் பூவுஞ்
சம்புடனேக் கல்லாலு மரசோ டத்தித்
தாமரையுங் கோவைவரிக் கந்தத்தோடு

போதவே யிருவேலி யிலாமிச் சம்வேர்
புகழ்தோடை நன்னுரி யாலும் நெல்லி
பூமிசருக் கரைக்கிழங்கும் பாலுங் கன்னல்
பூசணிவெள் ளரியரம்பைக் கனிபே ரீந்து

பேதையெனுங் குமரிதுராய் முருங்கைப் பூவும்
பின்முசுக்கைப் பசும்பயறுந்தகர நெய்யும்
பேய்ப்புடலும் புங்குநிலக் குமிழ்கற் பூரம்
பித்தத்தின் நோய்க்காகப் பேசி னுரே 44

(அ. பொ.) :—சீதை—சீதேவிசெங்கழுநீர்; சந்தம்—சந்தனம்; மதுரம்—அதிமதுரம்; பிச்சிப்பூ— முல்லைப்பூ; சம்பு—வெண்ணுவல்; வரி—சதாவரி என்னும் தண்ணீர் விட்டான் கிழங்கு (வரி வரி என்பர் தேரையர்) தோடை—ஆடா தோடை; ஆல்—நல்லால்; கன்னல்—கரும்பு சாறு, அரம்பைக்கனி—வாழைக்கனி; குமரி—சோற்றுக்கற்றுழை;முசுக்கை—முசுமுசுக்கை; பசும்பயறு—பச்சைப் பயறு; தகரநெய்—வெள்ளாட்டின் நெய் (தகர்—வெள்ளாடு—அ—ஆறன் உருபு.

## சேத்தும நோய்க்கு (ஐயம்)

மாதுகேள் சுவாசகாச வகையதின் திரவியங்கள்
வாதசேத் துமத்துக்கான மருவுநற் றிரவியங்கள்
போதவே யிவைகளாலே பொருதுசேத்து மரோகங்கள்
ஆதியாய்க் கொடுக்கத்தீரும் நோய்களென்றறிந்திடாய் 45

(அ. பொ) :—சுவாசகாச வகையதின் திரவியங்கள்—பாடல் எண் 6-ல் காண்க; வாதத்துக்கான திரவியங்கள்—வாதநோய் -பாடல் எண் 43-ல் காண்க, சேத்துமத்துக் (கபத்துக்) கான திரவியங்கள்—பாடல் எண் 7 (இவைகளைச் சயத்துக்குத்) தீர்வளிக்குமென்று பாடல் கூறுவதை உணர்க.

## வாதசுரோணித நோய்க்கு

அரத்தையும் விழுதி மஞ்சளும் நாண
லதிமது ரம்தசமூலம்
ஆமணக்குடனே கோட்டமா தண்டை
அகிலொடு சிவந்தநன் னெருஞ்சில்

உரத்தவா காசத் தாமரை கடுக்காய்
ஓங்கிய மூங்கிலின் குருத்தும்
உயர்ந்திடுந் தாழை விழுதினிற்சாறு
முரத்திடுங் கழறுழாய்ச் சீந்தில்

விரைத்திடுஞ் சிற்று முட்டிகல் பூவும்
வெள்ளரி காடிநீர் முள்ளி
மேவிய நிலத்தின் குமிழ்சிலா சத்து
மென்சிறு வழுதலை யெள்ளும்

வருத்தமாந்தேவ தாரியின் சக்கை
வரப்பினின் முள்ளியீ தெல்லாம்
மருவிய வாத சுரோணித நோய்க்கு
வகுத்திடுங் கும்பமா முனியே. 46

(அ. பொ.) :—சிவந்தநல் நெருஞ்சில்—செப்பு நெருஞ்சில்—(இதில் முட்கள் இல்லாமையால் நல் நெருஞ்சில் என்றுர் போலும்) கழல்—கழற்சிப்பருப்பு; துழாய்—துளசி சக்கை கட்டையின் துண்டு கும்பமாமுனி—அகத்தியமா முனிவர்; சுரோணிதம்—இரத்தம்.

## ஆவரண பைத்தியத்திற்கு

விரவிய பாலைசீந்தில் வெள்ளுள்ளி முசுமுசுக்கை
மருவுதிப் பிலியுஞ் சுக்கு மதுரமு மரத்தைசெவ்யம்
வருமகில் சிறியமூலம் மகாபலங் கொடுவேலியாவும்
பரவுமா வரணமென்ற பயித்திய நோய்களாகுமே. 47

(அ. பொ.) :—செவ்யம்—செவ்வியம் (மிளகுக்கொடி) மகாபலம்—தெங்கு; கொளுஞ்சி சித்தம் (அ) கொளுஞ்சி நாரத்தை என்பாரும் உண்டு. ஆவரணம்—மூடுதல்; கப்புதல் பயித்தியம்—(பைத்தியம் பித்தத்தின் அடிப்படையில் தோன்றியமையால் வந்த பெயர் தத்திதாந்தம்)

## அதிஸ்தூல நோய்க்கு

கொண்டவாய் விளங்கங் கொள்ளுங்
கோதும்பை சக்க ளத்தி
விண்டநல் லெண்ணெய் குக்கில்
வேங்கையுங் கொடிய வேலி
கண்டிடுங் கடுக்காய் லோகங்
கற்புரச் சிலையுந் தேனும்
அண்டியே யெவச்சா ரந்தான்
அதிஸ்தூல நோய்க்காகுமே. 48

(அ. பொ.) :— கோதும்பை—கோதுமை என்பதன பரவை வழக்கு. கோதும்பை சக்களத்தி—கோதுமை போல உள்ள தானியம் (இதனை பொற் கோதுமை என்றும், வேறு சிலர் பார்லி என்று வழங்கும் தானியமென்றுங் கூறுவர்) கற்புரச்சிலை — கற்பூரசிலாசத்து; அதி(ஸ்)த்தூலம் — மிக்க பருத்தலென்னும் நோய்

## அதிக்குரு நோய்க்கு

நிலக்குமிழ் பூச ணிக்காய்
நெய்யும்பா லமுக்கு ராவும்
இலைக்குநீர் முட்டான் பாலை
எருமையின் றயிர்கற் றாழை
உலுக்குநல் லுளுந்து நீரும்
உடலிளைத் தவர்க ளுக்கும்
அலுக்கியே பிலனுண் டாக்கும்
அதிக்குரு நோய்க்களுக் காமே. 49

(அ. பொ.) :—பிலன்—பலம் (அ) வலிவு (பரவை வழக்கு) குரு—வன்மை ; கடினம்; பெருக்குந்தன்மை. கரங்கள்—செய்யக் கூடியதான சரக்குகள்.

## வந்திய நோய்க்கு (மலட்டு நோய்)

புளித்திடு மாரை கழற்பருப் பதுவும்
புகழ்சிறு மூலமுந் தாழிப்
பொருந்துமா தளையு முளுந்ததின் வேரும்
புளிக்கு மாதளையும் வெட் பூலாக்

களித்திடு மாலு மத்தியின் பாலுங்
கானக மல்லிசா ரணையுங்
கருதுநா கணமுந் தண்ணீர் முட்டானுங்
கனத்தநல் முக்குயம் பண்ணை

வெளுத்திடும் வசம்பு மாவதின் பாலு
மென்சிறு முட்டியின் வேரும்
மேவுபே யத்தி தன்னிலே மூளைத்த
மிகுந்தபுல் லுருவியீ தெல்லாம்

வளத்துடன் மின்னுள் முழுக்கது கண்டு
வன்றலை முழுகுநாள் பாலில்
வகையுடன் குடிக்க மலடது நீங்கும்
வந்திய ரோக நோய்க்கிதுவே. 50

(அ. பொ.) :-புளித்திடும் ஆரை—புளியாரைக் கீரை; தாழி—அரிதாரம், சிவதை வேர்ப்பட்டை. ஆலும் அத்தியின் பாலும்—ஆலமரத்தின் பாலும்; அத்திமரத்தின் பாலும் என்று பொருள் கொள்க; கானக மல்லி— காட்டுமல்லி; மூக்குய —மூவகைத் தருப்பை: சிறுதருப்பை, சரவணம், விசுவாமித்திரம் என்ற பெருந்தருப்பை என்பனவாம். குசமென்ற வடசொல்லின் தற்பவமாம்) மின்னுள் —மின்னல் போன்றவள் (பெண்) புல்லுருவி—செடி மேற் செடியாக வளரும் தாவரத்துக்குப் பெயர்.மூ முக்கது கண்டு-வீட்டு விலக்குத்தோன்றி; வந்திய ரோகம்—மலட்டு நோய்

குறிப்பு :—தாழி—ழ, ள பேதமாகக் கொண்டு தாளி என்னும் கொடிக்கீரையையும் கொள்வர் சிலர்.

## கருப்பிணி சுகத்திற்கு

வெண்ணெயுட னுவின்பால் நெய்யி னேடு
மேவியநற் பட்சிகளின் மாங்கிஷங்கள்
பண்ணவே சுகபோக மதுர மானப்
பண்டமுட னுகாரம் பண்ணப் பின்னுந்
தின்னுஞ்சாங் களதேசத் தட்ட வர்க்கத்
தித்திப்புத் திரவியமுங் குளிர்ந்த நீரும்
வண்ணமாஞ் சூலான மாத ருக்கு
மருவுசுக நோயகளென வகுத்த தாமே. 51

(அ. பொ.) :— கருப்பிணி —சூல்கொண்ட மங்கையர்; மாங்கிசங்கள் — மாமிசவகை; போகம் —துய்த்திடல்; மதுரம் —இனிப்பு பண்டம் —பொருள்; சாங்களதேசம்— காடும் காடு சார்ந்த இடமும்; குறிஞ்சி.

## சுகப்பிரசூதி நோய்க்கு

கோட்டமுங் கடுகும் பாம்பதின் றேலுங்
கொடுஞ்சிவ னார்கிழங் கதுவுங்
குய்யமா மிடத்திற் பூசவுந் தூபங்
கொடுத்தபின் மயிரதைப் பந்தாய்

வாட்டமாய்ச் சுருட்டி யிரண்டுகன் னத்தில்
வளம்பெறு தொண்டையிற் றேய்த்து
வகைமயிர் கழுத்திற் கட்டிக்கள் ளிப்பால்
வன்றலை யுச்சியிற் றடவிக்

காட்டமாந் தாளி பத்திரி கோட்டங்
கற்கமா யரைத்துச் சாராயில்
கன்னியின் றெளிவி லுழவுமண் குடிநீர்
கருதிமுன் ரேன்றினிற் குடிக்கச்

சூட்டியே கல்லுப் பரைத்துள்ளங் கால்கைத்
தோன்றவே பூசிக்கால் கையிற்
சூரிய காந்தச் செடியதைக் கட்டச்
சுகப்பிர சூதிய மிதுவே. 52

**(அ. பொ.)** :—சுகப்பிர சூதி—அதிக உடல் வருத்தமின்றி; இயல்பான பிள்ளைப்பேறு அடைதல்; காட்டமாம் —கார்ப்புள்ளதான; தாளிபத்திரி —தாளிசபத்திரி; சுகப்பிரசூதியம் —இயல்பாக மிக்க மெய்வருத்தமின்றிப் பிள்ளைப்பேறு தரும் மருந்துகளும் தந்திரங்களும் இதுவே —இதுவாமென்று அறிக.

## பால நோய்க்கு

அடுத்திடும் பால ருக்கே
யந்தந்த ரோகந் தன்னிற்
கொடுத்திடுஞ் சமம ருந்துங்
கொடூரமா மருந்து தானுந்
திடத்தில்மாத் திரைகள் செய்தே
தெளிர்ந்து பார்த்தேகொ டுத்தால்
படித்தகண் மொழியி னுளே
பால நோய்களுக் காகுமே. 53

(அ. பொ) :—பாலர் —சிறுவர் ; குழந்தைகள்; சமமருந்து சாந்தமான மருந்துகள்; கொடூரம் —மிக்க வீரியமுடைய (கொடிய

## பாலகிரகத்திற்கு

ஆடர வத்தோல் கோட்டமும் வசம்பும்
ஆவதின் கொம்புவால் மயிரும்
அரியநெய் சிவதை பருத்தியின் வித்தும்
அழகிய மஞ்சள்வேப் பிலையுந்

தேடுநற் கடுகு வெளுத்தகுங் கிலியந்
தேவதா ரம்புச பத்ரம்
திரமுடன் தூபங் காட்டிய பின்புச்
சீருள முழுக்கதின் வகைகேள்

நாடுறும் பாலை விளாவொடு நாவல்
நற்சிறு முட்டியும் புரசும்
நலந்தரும் பட்டை நீரதிற் காய்ச்சி
நங்கையார் பிள்ளைமேற் சொரியக்
கூடுமந் தந்த மாதமே யறிந்து
குணமுடன் பலிகளுஞ் செய்தால்
குழந்தையின் பால கிரகமே யகலுங்
கூறுநற் றிரவிய மிதுவே. 54

(அ. பொ.) :— ஆடரவத்தோல் —இச்சைக்கேற்ப ஆடும் பாம்பின் (நல்லபாம்பு) தோல்; அம்புசபத்ரம் —தாமரைஇலை. முழுக்கு குளியாட்டல், குளித்தல். நங்கை —பெண்; சொரிய —ஊற்ற; கூடு மந்தந்த பலிகளுஞ்செய்தால் — ஆதாயந்தரத்தக்க சமயமும் ஏற்ற பலிகளையும் அந்தந்தமாதங்களில்செய்து வந்தால் பாலக்கிரகம் —இது சிறுபிள்ளைகளுக்கு ஏற்படும் தோடமாம் பிள்ளையின் பேறுகாலத்தில் கிரகநிலைகளைக்கொண்டு கணிக்கப்படுவது. இதை ...றிய சோதிடக்கலையும அறிந்திருத்தல் வேண்டும்.

## பூதக்கிரக தோடத்திற்கு

புகையது காட்டக் காயமோ டுள்ளி
புகழ்சிறு வழுதலம் பழமும்
பொருந்து வேப்பிலையும் நெய்யொடு கடுகும்
பொங்குநல் வசம்பொடு மஞ்சள்
சிகையதின் மயிரும் யானையின் கொம்புஞ்
சிவனிரு மாலிய மதுவுஞ்
தேடிய மயிலினி றகுடன் குக்கில்
சேரவேப் புகைத்திடப் பின்னும்
வகைநிலக் கடம்புஞ் செருப்படி கோட்டம்
வன்கரு நொச்சிப்பூ நிம்பம்
மணந்தரு லவங்கப் பட்டைபேய் மிரட்டி
வகையறிந் திவைகளைக் குடிக்க
மகவெனும் பாலரா வலாய்க் கேட்ட
வஸ்துவா லவர்தமைச் சுற்றி
வன்பலி கொடுக்கப் பூதமாங் கிரகம்
வாங்குமென் றுரைத்தனர் முனியே. 55

(அ. பொ.) :-சிகையதின்மயிர்--மயிலிறகு; யானையின் கொம்பு— தந்தம்; சிவநிருமாலியம் — சிவபூசை செய்தானபின் மறுசமயம்

பூசை செய்யும் போது பூமுதலியவைகளைக் கழித்திடுவர், அவைகளே சிவ நிருமாலியங்களாகும்; பூநிம்பம் — நிலவேம்பு; மகவு — குழந்தை; வன்பலி — கொடியபலி (உயிர்ப்பலியாதலால் வன்பலி எனப்பட்டது). பலி — நிவேதனம். பிச்சை; பூதமாங்கிரகம் — சிறு பிள்ளைகளுக்குத் தோன்றும் பூதக்கிரக தோடமென்பர்.

குறிப்பு :—சிகாவளம் என்பது மயிலின் பெயர்; அது மருவி சிகையென்று ஆட்சி பெற்றது.

## உன்மத்தத்திற்கு

முந்திரிக் கனியுங் கரும்பதின் சாறும்
மிளகுபச் சரிசியின் கழுநீர்
முத்தமுங் கடுக்காய் தான்றியும் நெல்லி
முத்து கோரோசன மதுரஞ்

சந்தனம் முலைப்பால் பூசணைக் காயுந்
தண்ணிமுட் டான்சிறு கீரைத்
தாவியே பிடிக்கும் புலிச்சதை யுடனே
தனித்தநீ ருள்ளியின் சாறும்

அந்தமா முசுறு முட்டை வல்லாரை
அரியநன் மருந்திவை யெல்லாம்
அஞ்சன மிடவும் நசியஞ் செய்திடவும்
அதட்டியே பயமது படுத்தல்

வந்திடுஞ் சரத்தை யடக்கிடப் பண்ணல்
வலுமையா யடித்திடல் பலவும்
வருசமா தானம் பேசவுன் மத்த
மாறுமென் றுரைத்தனர் முனியே. 56

(அ. பொ.) : — கழுநீர் — கழுவிய நீர் (இதுகழுநீர் என்னும் நீரில் வளரும் செடியன்று) முத்து—முத்து, கொட்டைமுத்து எனப் படும் ஆமணக்கின் வித்து, எண்ணெய் முதலானவை; நீரடி முத்தென்றும் சிலர் கொள்வர். முசுறு முட்டை—இது ஒரு வகைக் கட்டெறும்பு, மாமரத்தில் சாதாரணமாகக் காணப்படும்; சரத்தை யடக்கிடப் பண்ணல்—பிராணுயாமம் செய்யப் பழக்குதல்; பூசுணை—பூசணிக்காய்; உன்மத்தம்—பைத்தியம் என்னும் புத்திக் கோளாறு கொண்ட நோய்.

**குறிப்பு** :—நெல்லிமுத்து என்று கொண்டு நெல்லியின் விதையைக் கொள்வாரும் உண்டு.

## அபஸ்மார நோய்க்கு (மனநோய்)

ஆவொடு பூனை யுடும்பொடு பாம்பு
மானையுங் கீரியும் நரியும்
அசுவமோ டிந்தப் பிச்சுக ளாலே
அறிந்திட நசியமும் பண்ணல்

பூவினி லுள்ளி திரிபலை யுடனே
புங்குவித் தொடுதிரி கடுகும்
பொருந்துமிவ் வகையால் நசியமும் பண்ணல்
போதவுந் தலைமுழுகிடுதல்

தாவிய வெள்ளைக் காக்கணம் பூவின்
சாறுடன் பஞ்சகவ் வியநெய்
தண்ணீர்முட் டானும் பிரமிபூ சுணைக்காய்
சார்ந்தநன் னரிவல் லாரைப்

பாவுமிவ் வகையால் மருந்தினை யருந்தப்
பட்சிக ளிறகிற் புகைக்கப்
பார்மிகு மபஸ் மாரங்க ளென்னும்
பைத்திய நோய்க்குப் பாரே. 67

(**அ.பொ.**) :—அசுவம்—குதிரை; பிச்சு—பித்தப்பையில் காணப் படும் பித்த நீர்; தாவிய— (கொடியாகப்) படர்தலையுடைய; பஞ்ச கவ்வியம்—பசுவின் பால், தயிர், நெய், சாணம், சிறுநீர் என்பன வாம்; அபஸ்மாரம் — புத்தித் தெளிவின்றி வலிப்புத் தோன்றும் நோய்; இதையும் பைத்திய நோயின் ஒருவகையாகக் கொள்வது சித்த மருத்துவர் வழக்கு என்று அறிக.

## கண் நோய்க்கு

மன்னுசெவ் வீரமஞ் சனந்துருசு துத்தமும்
வருமனோ சிலைதாரமும்
வாலுழுவை யப்பிரகஞ் சூதமுங் கெந்தகம்
மருக்காரையின் காயதும்

வலம்புரிக் காய்நெய்தல் பச்சைகற் பூரமும்
வசம்புவெண் காரமிந்தும்
வாசமிகுங் கோட்டமும் மஞ்சளிரு சந்தனம்
மரமஞ் சள்கரு வேலதும்

பொன்னுமிர தாஞ்சனந் துத்தநா கஞ்சீனம்
புட்பாஞ்சனஞ் செம்பதும்
புத்தரசு விதைசங்கு நாகனங் கடல்நுரையும்
புங்குவிதைச் சிறுமுட்டியும்

பொருந்து பித்தளை வெள்ளி வெண்கலமு மிருவங்கம்
புளியமலரின் சாறதும்
போற்றுநவ ரத்தினம் பலகறையு மிருலோகம்
பூலாவுடன் பளிங்கும்

சின்னமா னுங்கலையு மெருமைகாண் டாமிருகஞ்
செய்யகாட் டெருமையதுவுந்
தேடுங் கடம்பையும் யானையும் பன்றியுந்
திரமான பசுவாடதுந்

திடமான கொம்புகள் பல்லுடன் கஞ்சாவுந்
தேனுடன் முலைப்பாலதுஞ்
சீராங்குளத்துக் கிளிஞ்சிநீர் பனைமட்டைத்
திரிகடுகுச் சிறுகீரையும்

அன்னமே யிளநீரு முருங்கைவெண் சாரணையும்
அமுக்குரா விலவம்பிசின்
ஆனபே ராமுட்டி சுட்டபற் பங் கொள்ளும்
அரசன் பழுப்புசீனி

அதிமதுரம்பாலை திரிபலை வறட்பூலா
வரியுந்தேற்றான் கொட்டையும்
ஆகும் பழம்புளி வெண்ணெய் நெய் லோத்திரமு
மானபொன் னுங்காணியுங்

கன்னியே குங்குமங் குளிவேர் பிரமியுங்
கானகத்தின் கொள்ளதுங்
காதுக்கு நும்பியுஞ் சுரோதாஞ் சனம் வெள்ளைக்
காக்கணந் தலையோடதுங்

கருதுஞ் செருப்படை பேயத்தியின் பாலுங்
கனபீத ரோகணியதுங்
காவிக்கல் சிறுமூலம் நந்தியாவட்டமுங்
கருதுநா கேசுரமதும்

இன்னமெள் ளுப்பூ லவங்கமுஞ் சாதிக்கா
யெலுமிச்சை யின்பழமதும்
ஏற்றநசியம் பத்து வேது பிடிக்குதல்
இதமாங் கலிக்கமதுவும்

இனியகண் டவிழ்தமும் முன்னமே சொல்லிய
விலைகளாற் றயிலமதுவும்
எழிலான கண்களின் நோய்பல வற்றிற்கு
மியல்பா யுரைத்தபடியே. 58

(அ. பொ.) :— செவ்வீரம் — வீரம்; அஞ்சனம்—நீலாஞ்சனக் கல் (சுருமாக்கல் என்றும் வழக்கிலுள்ளது). தாரம்—அரிதாரம் (தாளகம்), இருமஞ்சள்--கறிமஞ்சள், கஸ்தூரிமஞ்சள்; இருசந்தனம்-வெண்சந்தனம், செஞ்சந்தனம்; சூதம்—இரசம்; இரதாஞ்சனம்—இரத்தாஞ்சன மென்னும் ஓர் வகைக்கல்; சீனம்—படிக்காரம்; புட்பாஞ்சனம் — புட்பாஞ்சனம் என்னும் கல்; இருவங்கம்—வெள்வங்கம், கருவங்கம் என்பன; நவரத்தினம்— வைரம், வைடூரியம், சோமேதகம், புட்பராகம்ப பச்சை, நீலம், மாணிக்கம், முத்து, பவழம் என்பன. இருலோகம்—பொன், வெள்ளி; பளிங்கு—படிகம் (ஸ்படிகம்) என்னும் கல்; சின்னமான் —(கிருஷ்ணும்ருகம் எனப் படும்) திருகுக் கொம்புள்ள மான்; கலை-கிளை கள் பலகொண்ட கொம்புள்ள மான்; கடம்பு--பருத்த உடலுடையஒருவகைமான்;குளத்துக் கிளிஞ்சில் நீர்—கும்பிடு கிளிஞ்சில் நீர்; குங்குமம்—குங்குமப்பூ; குளிவேர்—கப்பு மஞ்சள் (குளிப்பதற்கு உதவும் வேர்); கானகத்தின் கொள்ளு— காட்டுக்கொள்ளு;சுரோதாஞ்சனம்—அஞ்சனக்கல்லின் ஒருவகை; கலிக்கம்—கண்ணிலிடும் மருந்து.

குறிப்பு :— 1) "கன்னியே குங்குமங்குறிவேர்" என்று கூறினமையால் கன்னியர் குளிக்க உபயோகிக்கும் வேராக கப்பு மஞ்சளை எடுத்துக் கொள்ளப்பட்டது. 2) முதலடியில் மஞ்சளிரு சந்தனம்" என்ற விடத்து கறிமஞ்சளையும் கஸ்தூரிமஞ்சளையும் கூறிப்பின் ஈற்றடியில் குறிவேர் என்பதனைக் கப்பு மஞ்சளெனப் பொருள் கொடுத்துள்ளாம்"

## கன்ன நோய்க்கு (காதுநோய்)

சுத்தநல் முருங்கை யெருக் கொடு நொச்சி
துளசிமுள் ளங்கி யாமணக்குந்
தோடையும் வேளை நல்லிரு முட்டிச்
சொல்லிலை கள்ளி கஞ்சாவும்

பத்துமிவ் விலைகள் தேசியின் சாறும்
பலகறைப் பற்பமுங் குக்கில்
பருத்தியி னிளங்காய் மருளொடு லவங்கம்
பகர்சத குப்பையோ டுள்ளி

மத்த நல்லிஞ்சி திரிகடு கிந்து
வசம்பொடு கொன்றையின் பழமும்
மஞ்சளுஞ் சதுரக் கள்ளிநீ ருள்ளி
வனமருக் காரைகொள் ளுக்காய்
கத்து வெள்ளாட்டு நீரொடு தாரம்
கடுகெண்ணெய் வேம்பு நல்லெண்ணெய்க்
காய்ச்சியே வார்க்கக் காதினிற் பிறந்த
கன்னநோய் தீருமென் றறியே. 59

(அ. பொ.):— தேசி — எலுமிச்சம், பழம்; கொள்ளுக் காய்— சரபுங்கமென்னும் கொள்ளுக்காய் வேளை; தாரம் --தேவதாரம், சரள தேவதாரம், அரிதாரம்; கன்னம்— (கர்ணம்) காது.

## மூக்கு நோய்க்கு

சொன்னதா ளீசப் பத்திரி யுடனே
துளசியுங் கொள்ளொடு செவியந்
துய்யவல் லாரை யகத்தியும் நொச்சில்
சொற்றமு தாழை முள்ளங்கி
மன்னு சீரகமும் புங்கதின் வித்தும்
வனகரி சாலைவாய் விளங்கம்
வருகொடி வேலி திப்பிலி மூலம்
மஞ்சளுங் குக்கிலுங் கடுகும்
உன்னிய தேவ தாரமோ டுள்ளி
ஓங்கிய மிளகொடு லவங்கம்
உற்ற நாயுருவி கரிய சீரகமும்
உரைத்திடுஞ் சுக்கு திப்பிலியும்
நன்னய தான்றி நெல்லியுங் கடுக்காய்
நற்கரி திப்பிலி யெல்லாம்
நாசியின் நோய்க்குத் திரவிய மெனவே
நவின்றனர் கும்பமா முனியே. 60

(அ பொ.) :— கரிதிப்பிலி— யானைத்திப்பிலி; நாசி—மூக்கு.

## உதட்டு நோய்க்கு

வெள்ளைக்குங் கிலியந் தன்னில் மேவிய தயில மஞ்சள்
பள்ளத்தின் கீழ்க்காய் நெல்லிப் பருகடு தான்றி நெல்லி
விள்ளும் வேப்பிலையும் நொச்சில் மெழுகொடு தேவ தாரம்
அள்ளுந்தேன் மதுரங் குக்கில் அதரநோய்த் தீர்ப்ப தாமே.

(அ. பொ.) :— மெழுகு — மஞ்சள் (தேன்) மெழுகு; அதரம் — உதடு.

## கண்டமாலை நோய்க்கு

கண்டா லச்சி முத்து முன்னே
கடிய சோகை மருந்ததனைக்
கொண்டே யாட்டுப் பாலுடனே
கூறுஞ் செம்மறி யாட்டுப்பால்
டண்டே சத்ரங் கத்தியினற்
பருகஞ் செருப்படைக் கடலையிலை
கண்டந் தன்னில் மாலையதாங்
கண்டா லச்சி நோய்போமே. 62

(அ. பொ.) : — சத்ரங்கத்தியினல்—கத்தியாலும் கூர்மையான தகுந்த கருவியாலும் அறுவை செய்தல்; கண்டந்தன்னில்மாலை — கண்டமாலை என்னும் நோய்.

## பல் நோய்க்கு

அரத்தையுடன் கொள்ளுக்கா வேளை காயம்
ஆவாரைச் சாரணையு மகிழம் வித்தும்
உரத்தகரு வேலெருக்கு மருதம் பட்டை
உயர்குப்பை மேனியிந்து காட்டாத்திப்பூ
பருவிளநீர் துவரையிலை யெள்ளி னெண்ணெய்
பரிபளிக்குங் கற்பூரத்தயிலஞ் சுக்கும்
தரித்திருக்குங் கருங்காலி யோம மஞ்சள்
தந்தத்தின் மூலநோய்ப் போக்குமாமே. 63

(அ. பொ.) :— பரிமளிக்கும் — மணம்வீசும்; தந்தத்தின் மூலம் — பல்லின் வேர்; தந்தம்—பல்.

## நாவில் காணும் நோய்க்கு

மரமிகு மஞ்சள் சீக முடனே
மஞ்சளிந் துப்பொடு துளசி
வருமனோ சிலையுந் தேனரி தாரம்
வன்பொடு தலையுட னேலம்

வரமிகு வேம்பு நொச்சிலுங் கருவேல்
வன்கருங் காலியுங் கோட்டம்
மணியின்றக்காளி பாலையின் பட்டை
வருசிறு முட்டி வெள்வேலுந்

தருசிலாசத்துந் தோடை பேய்ப்புடலுந்
தாவிய மால் கிராந்தியதுஞ்
சாருநற் கடுக்கா யாவின் நெய்யுடனே
தங்கிய மிளகு திப்பிலியுந்

திருவெனுஞ் சுக்கு நல்லெவச் சாரஞ்
சேரவே வாயினுட் டாளிற்
செய்யநாக்கதனிற் பிறந்திடும் பிணியாஞ்
சிம்மநோய் போக்குமென் றறியே. 64

(அ.பொ.):--மரமிகு மஞ்சள்—மரமஞ்சள்; மஞ்சள்—கறிமஞ்சள் மால்கிராந்தி — விஷ்ணு கிராந்தி; வாயினுள் — வாய்க்குள் தாளில் — கீழ்தாடையில்; சிம்மநோய் — (ஜிஹ்வநோய்) நாவில் காணும் நோய்கள்

## முகத்தில் தோன்றும் நோய்க்கு

அருந்துநற் சாதில் பத்திரி காயும்
அதிமது ரங்கருங் காலி
அருஞ்சிறு சாதியிலை திரிபலையும்
அரியவேல் நாவல் சந்தனமும்

பரிந்தநற் கோட்டந் திரிகடு கதுவும்
பாலையும் வேம்புட னேலம்
பகர்மரமஞ்சள் கிராம்பு சீரகமும்
பண்ணுநா கேசுர முத்தம்

வருந்திய லவங்கப் பட்டையு மிலையும்
மருவிய துளசிகோ மயமும்
வருமெவச் சாரம் பச்சைக் கற்பூரம்
மாவதின் காயுட கீற்றுஞ்

சரிந்தகாட்டாத்தில் பூவுடன் றேனுஞ்
சாருதக் கோலமுந் துருசு
தயவுடன் முகத்தில் வினையெனச் சேருஞ்
சருவாசிய நோய்களுக் காகுமே. 65

(அ. பொ.) :— மாவதின் காயுட கீற்று—மாங்காய்த்துண்டு; சரு வாசியம் —முகம்.

## தொண்டை, குரல்வளை நோய்க்கு

சிவந்த சந்தனமும் வேங்கையின் மரமும்
தேவதா ரங்கொடு வேலிச்
செவ்விய முடனே வெட்டிவேர் சுக்குஞ்
செய்யநற் கோட்ட மொட்டறையும்

தவத்திரு லோத்ரந் திப்பிலி யுடனே
தாளிசப் பத்திரி யேலம்
தருமெவச் சாரம் மஞ்சளுங் கடுக்காய்
தாவிய நற்சிறு கீரை

நவமிகும் வாச கெந்தகமுடனே
நன்மர மஞ்சள் வெட்பாலை
நாடுமிந் துப்புத் திப்பிலி மூலம்
நலந்தருங் கோசல மதுவுங்

கவமறுந் தேனு மிளகுவா லுழுவைக்
கசப்புள நற்றிராயிவையுங்
காரெனுங் கூந்தல் மயிலெனும் பெண்ணே
கண்டநோய் தீர்க்குமென்றறியே. 66

(அ. பொ.) :—வாசகந்தகம்—மணமுள்ளகந்தகம்; கோசலம்—பசுவின் சிறுநீர்; கவமருந்தேன்—கபத்தை (கோழை) அறுத்து தள்ளும் தேன்; கண்டநோய்—(கண்டம்—கழுத்து) கழுத்தின் உள்ளுறுப்புக்களாகிய தொண்டை, குரல்வளை முதலானவைகளின் நோய்கள்.

## தலை நோய்க்கு

அதிமதுரஞ் சர்க்கரையுங் குங்குமப்பூக்கோட்டம்
அரியவிலா மிச்சின்வே ரேலமுடனிந்தும்
அகிலுடனே வாய்விளங்கஞ் சீந்தில் மருக்காரை
அருங்கிரந்தித் தகரமுடன் சந்தனமுங்காயம்

மதிவளரு மிலவங்கம் மஞ்சள் மரமஞ்சள்
மஞ்சிட்டித் திரிகடுகு திரிபலைக்கத்தூரி
வாசமுள்ளகச் சோலம் பெருங்கோரைக் கந்தம்
மங்கையர்பால் நல்லெண்ணெய் வருலவங்கப் பத்திரி]

துதிபெருகு நன்னாரி தாமரைப்பூக் கந்தந்
துய்யபசுங் கற்பூரஞ் சொற்கரியசாலைச்
சூட்டியவெண் ணெய்தலுடைக் கிழங்கு பிகுமுட்டி
சொற்கொடுவேலி முத்தமுடன் றுய்ய
சதகுப்பைக்]

கொதியமருங் கற்றாழை சாதிக் காயுடனே
கூகைநீறு நாகப்பூக் குருவேருந் தாரம்
கொஞ்சியநற் றலையதிலும் மூளையிலும் பிறந்த
கொடியசிர நோய்தீரும்கூறுமொழிப் படியே. 67

(அ. பொ.):— கச்சோலம்— கிச்சிலிக்கிழங்கு; பெருங்கோரைக் கந்தம்—முத்தக்காசு; குருவேர்—விலாமிச்சுவேர்சிலர் வெட்டிவே ரெனவுங் கூறுவர்; (இரண்டு வேர்களையும் சேர்க்கலாம்); தாரம்— தேவதார கட்டை; சிரநோய்—தலை நோய்கள்.

குறிப்பு :—''கிரந்தித்தகரம்''என்பதை கிரந்தி நாயகம் என்னும் பூண்டும், தகரமென்ற பூண்டுமாகக் கொள்வர்; சிலர் கிரந்திகர மென்னும் பூண்டென்பார். இருப்பொருளும் பொருந்துமென்க.

## இரண நோய்க்கு

கஞ்சியுங் காடியும் அன்னமும் நெய்யதுங்
கற்றாழையும் புங்கதும்
காட்டுமல் லிகைமிளகு மஞ்சள் மர மஞ்சளுங்
கடுக்காயுடன் தாணியும்
கடுகு ரோகணி நெல்லி சிறு கீரை வேருடன்
கருதுபாலைப் பட்டையும்
கண்டுரவி முன்னே திரும்புசூரிய காந்தி
கடியமஞ் சட்டியதுவும்
மிஞ்சு வேப்பம் பட்டை துருசியறு கன்வேரும்
மெழுக்குடன் நொய்யரிசியும்
வெண்கலம் பழங்கால்க் கட்டியும் பழவெல்ல
மிகுநிலக் குமிழ்வேரதும்
மேவு சதுரக் கள்ளிப் பாலுநல் லெண்ணெயும்
மிகுத்தபுளி யாரையதுவும்
வீசுங் குளிர்ந்த நீரிலந்தையின் கொட்டையும்
வேம்பாட லதிமதுரமும்

துஞ்சுபுளி கருணைக் கிழங்கு நன்னாரியுஞ்
சுத்ததேன் சுக்கி லெள்ளுஞ்
சூழ்ந்ததாழம் முளையு மரியசிறு சாதியின்
றுளிருமிரு வாட்சி யிலையுந்
துகையாம் பருத்தியிலை யரசுபுளியிலைக் கொன்றை
துய்ய பாவட்டை யிலையுஞ்
சுத்தகோடக சாலை யிலையுடன் முன்னமே
சொன்ன தோரிலைக ளெல்லாம்
வஞ்சுயே தண்ணீரிற் காய்ச்சி விரணத்து
வருந்தி மிகவேக் கழுவவும்
வகையான சுண்ணப் பழங் காரை நீரினால்
மைப்போல ரைத்து நன்றாய்
வசமாம் விளக்கெண் ணெய் விட்டுக் குழைத்ததை
வாங்கி இரணம் பூசவும்
மாயாத விரணங்கள் காயவே செய்யுமென்று
வனமா யுறைத்த படியே, 68

(அ. பொ.) :— அன்னம்—சோறு; ரவி—ஞாயிறு; துருசி—மயில் துத்தம்; வேம்பாடல்— வேம்பாடம்பட்டை; தாழம்முளை—தாழை விழுது; மாயாத—அழியாத.

## புதிதாய் அடிபட்ட புண்ணுக்கு

விஞ்சிய நல்லதிமதுர மிலவம் பட்டை
மேவுநந்தி யாவட்டத் தோலுந் தேனும்
அஞ்சனமும் மயிலிறகும் இச்சிப் பூவும்
அரியவெண் குங்கிலிய மரக்கும் பாலும்
கொஞ்சுநில வேம்புடனே நீரினுள்ளிக்
கூகைநீறு செந்நெருஞ்சில் கொல்லங் கோவைத்
தஞ்சமாம் நெய்கடுக்காய் சிறுகாஞ்சோரி
சத்திய விரணங்க ளாறிப்போமே. 69

(அ. பொ.) :—செந்நெருஞ்சில்=செப்பு நெரிஞ்சில்; கொல்லன் கோவை — ஆகாச கருடன்கிழங்கு. சத்தியவிரணம் — புதிதாய் அடிபட்ட புண்.

## தீப்பட்ட புண்களுக்கு

வெந்நீர லதைக்கழுவி மெழுகும் பாலும்
வெட்பாலை கற்பூரம் வழுவைக் கீரை
பண்ணியசெம் பருத்திப்பூப் பொன்னாங்காணிப்
பாலையதின் பட்டையிலை யறுகூ மத்தை

விண்ணியநீ ருள்ளியதி மதுரஞ் சந்தம்
வெட்டிவேர் கடுக்காயு மயிரும் நெய்யும்
அண்ணிய நாயுருவியர சிலை நெய்ச்சட்டி
அனற்பட்ட விரணங்கள் ஆறிப்போமே. 70

(அ. பொ.) : — வழுவைக்கீரை — சிறுபசலைக்கீரை; மயிர் — மயிர்மாணிக்கம் என்னும் கொடி; அனல்—நெருப்பு (தீ).

## எலும்பு முறிவுக்கு

வெளுத்தநற் கடுகும் ஆவதின் நெய்யும்
மெத்தெனப் பூசியே கட்டல்
மேவிய கடுக்கா யெண்ணெயில் வறுத்தே
விதமுடன் கட்டிய சீலை

தளத்தில் மண்பூசிக் கட்டவும் வேளைச்
சாறுபுளி விதையதின் றேலுந்
தாவுமெள் ளெண்ணெய் மூங்கிலின் புறணி
கனித்தவா லரசதின் பட்டை

வளத்துடன ண்டம் பாண்டப் புற்றேடு
மருதொடு நெல்லி குங்கிலியம்
வாழுமுந்திரிகை யத்தியின் நீரும்
வறுத்தநல் லுப்பொடு மிளகும்

பளித்திவை யல்லால் போனமு மரக்கும்
பாலுடன் குளித்திட மெய்யிற்
பருத்தகை காலி லெலும்பு களொடிந்த
பங்கநோய் கூடுமென் றறியே. 71

(அ. பொ.) :— வெளுத்தநற்கடுகு—வெண்கடுகு; அண்டம்—கோழி முட்டை; பங்கம்—முடம் (என்பு முறிவினால்).

## பவுத்திரப் புண்ணுக்கு

திரிபலையுங் கொடு வேலி வாய் விளங்கம்
திப்பிலியும் பாவட்டை விதையாவரை
வெரியரவத் தோல் பூனையெலும்பு மேலம்
மேவிய சாரணைவேரும் லவங்கப்பட்டை
மரியாலம் பழுப்புடனே யிதுவல்லாமல்
வகையான காரத்தாற் கருமஞ்செய்து
பரிவாக வாதிக்க வாசனத்திற்
பவுத்திரமாம் புண்களெல்லா மாறிப்போமே. 72

(அ. பொ.) : —காரத்தால் கருமஞ்செய்து — மிக்க காரமுள்ள மருந்துகளைக் கொண்டு புறமருத்துவம் தக்கபடி செய்தல்; ஆசனம் — எருவாய்ப்பகுதி.

## மூளை இரணத்திற்கு

சொல்லிய வசம்பும் முள்முருக் கதுவுந்
　　சய்யவெண் காக்கணன் சீந்தில்
துஞ்சு பேயத்தி யுத்தம தாளி
　　சொற்சிறு தந்தியின் செடியும்

வெல்லமும் புங்கும் ஆமணக் கெண்ணெய்
　　மேவுமற மச்சையுங் கோட்டம்
வேகமாங்கள்ளிக் கொழுந்துசேங் கொட்டை
　　மிகுத்தநன் முருங்கையின் வேரும்

வல்ல சாரணையுங் கத்தரி வேரும்
　　வன்சிவ னார்கிழங் கலரி
வாழையின் கிழங்கும் பாலொடு துருசு
　　வருகொடு வேலியும் நாகம்

முல்லையின் நகையாய் சங்கதின் பற்பம்
　　முயல்பெறு மன்ன பேதியதும்
முத்தினிற் சிப்பி யிவையெலாந்தலையில்
　　மூளையின் இரணநோய் போக்குமே. 73

(அ. பொ.):—உத்தம தாளி—உத்தாமணி (அ) வேலிப்பருத்தி உத்தமகாணி என்பதும் அதுவே. சிறுதந்தி—நேர்வாளம்; கத்தரி—கண்டங் கத்தரி; கொடுவேலி—சித்திரமூலம்; நாகம்—துத்த நாகம், நாவல்.

## அற்புத விரணத்திற்கு

கோவின்நீர் கடுக்காயும் முருங்கைவேருங்
　　கொன்றையோடு சேங்கொட்டை சிவனார்மூலம்
பாவியநற் புங்குடனே ஆயிற்பட்டை
　　பஞ்சலவ ணத்துடனே யெருக்குமஞ்சள்
தாவிய நற்றிரி கடுகு வசம்புங்கள்ளி
　　சாரணையு மொட்டரையுங் கொடியதுவேலி
ஆவியெனு மெய்யதிலேச் சகலமான
　　அற்புதமாம் விரணங்களற் றுப்போமே. 74

(அ. பொ.): — அற்புதவிரணம்—இது வாதம், பித்தம், கபம் என்ற முத்தோடங் காரணமாகவும், தசை,(கொழுப்பு,

குருதி என்ற தாதுக்களின் தோடபேதத்தாலும் ஆறு வகைக் கிரந்திகள் உண்டாகி அவை உடைந்து விரணமாகும் என்பதை யறிக. இதன் குறிகுணங்களைச் சீவரட்சாமிர்தம் (உயிர் ஓம்பும் அமுதம்) யூகிசிந்தாமணி என்ற நூல்களில் கண்டுகொள்க. இவை ஒன்பது வகையெனவும் சில நூல்கள் கூறும்.

### யானைக்கால் நோய்க்கு

கொண்டவெட்பாலை விதையொடு கடுக்காய்
கோசலஞ் சிவதையுங் கடுகுங்
கொத்தமல் லிகையுஞ் சீந்திலி னிலையுங்
கொடியநன் முருங்கையின் வேரும்

மண்டுமா மணக்கின் வேரொடு காயம்
வழுதலை வேர்மர மஞ்சள்
மருவுமே ரண்டத் தெண்ணெயுஞ் சுக்கும்
வாழ்மரு தாரையு மெருக்கும்

பண்டுநல் லயமுந் தேவதா ரத்தின்
பலவகை மருந்திவை யல்லால்
பாவையே சிவனார் கிழங்கொடு வசம்பும்
பழத்தின் சாறதனிலே யரைத்துச்

செண்டெனு முலையாய் கூட்டியே பூசத்
திறமுடன் பிடிக்குதல் பலவுஞ்
செப்பிய முழங்கால் பொருமியே வீங்குஞ்
யானைக்கால் நோயும் போமே. 75

### வாய், உள்நாக்கு நோய்களுக்கு

முருங்கையும்புங்கும் பேயதின் பீர்க்கும்
முந்துகார் போகி முள்ளங்கி
மொழிந்தன வைந்தும் வித்து களாகும்
முயல்சிவ னார்கிழங் கரத்தை

வரங் கொளுஞ் சதுரக் கள்ளியு மெருக்கின்
மருவுபால் நொச்சிலும் மாஞ்சில்
வருமிரு வேலி சிறியதும் மட்டி
வன்னியுந் தாமணிக் கொழுந்தும்

பரங்கொளுந் தேவதார முஞ் சுக்கும்
பசுமுதற் கொம்பொடு குளம்பும்
பாங்குடன் சுட்ட கரியுட னுரித்தும்
பரவிய சாரணை வேரும்
உறங் கொளுங்குமரி வரப்பினில் முள்ளி
உயர் புளிக்கருணை பாவட்டை
உன்னிய வாயுண ணுக்கினில் தோன்றும்
இரணங்கள் யாவும் போமே. 76

(அ.பொ.) :—மாஞ்சில்—சடா மாஞ்சில்; வன்னி—வன்னிமரம் (சமிவிருட்சம்), சேராங் கொட்டை, பசுமுதல் ...... சுட்டகரி—பசு முதலான (எருமை, ஆடு, மான், காண்டா மிருகம் முதலியவை களையும் கொள்க) வைகளின் கொம்பு குளம்பு முதலியவைகளைச் சுட்டகரி; குமரி—கற்றாழை.

குறிப்பு :—இருவேலி என்ற விடத்து-வெண்சித்திர மூலத்தை யும், செஞ்சித்திர மூலத்தையுங் கொள்க; ஏனென்றால் அந்த அடியிலேயே "வன்னியுத்தாமணிக்கொழுந்து" என்று வ துள்ளமையால் எங்க.

## புரையோடிய புண்ணுக்கு

எள்ளுடனே யிருமஞ்சள் காட்டு வாகை
எருக்கம்பால்-வச்சிரப்பால் காஞ்சோரிக்காய்
கள்ளமருக் காரையுட னுயிற் பத்ரி
காய்ச்சுப்பு மஞ்சட்டிக் கல்லினுப்புந்
துள்ளியவேம் பொட்டறையும் புனலிமாக்கல்
சொற்பரட்டை நாயுருவி கமுகிந்துப்பும்
உள்ளநரம் பதிலிருக்கும் வினை களான
உயர்நாடி விரணங்களற் றுப்போமே. 77

(அ. பொ. ) : —வச்சிரப்பால்—சதுரக்கள்ளிப்பால்; காய்ச்சுப்பு — பலதடவை காய்ச்சிய வெடியுப்பு; (காய்க்சுலவணமென்று கடையில் கிடைக்கும் உப்பு) ; புனலி — புனல்தண்டு; மாக்கல் — இது மிக்க நயப்பான கல்வகையிலொன்று; சேலம் மாவட்டத்தில் மலை யாக உள்ளது. கமுகு—பாக்கு; நாடி விரணம்--புரையோடியப்புண்

குறிப்பு :—வச்சிரம் — சதுரக்கள்ளி; வச்சிரவல்லி — பிரண்டை என்பதறிக.

**குறிப்பு :** —வேப்பொட்டறை—இந்த வேப்பமரத்தில் படிந்து உள்ள ஒட்டரையாகவும் சிலர் கொள்வர் சிலர்;வேம்பு—ஒட்டறை என்று கொண்டு இரண்டு சரக்குகளாகவுங் கொள்வர். இவ்விரண்டில் முன்னதே நாடிவிரணத்துக்கு மிகவும் நலம் பயப்பதாக மருத்துவர் கூறுவர்.

## கிரந்திப் புண்ணுக்கு

துட்டவசக் கள்ளியா திரணத் துக்குஞ்
சொற்கசப மென்னுமொரு விரணத் துக்கும்
பட்டபா டாணத்தின் விரண மென்னும்
பருகியமூ விரணத்தின் மருந்துங்கேளு
கட்டமெனு மணிப்புக்குந் தேவ தாரம்
கொடியமஞ்சே சிலையிந்துப் பிவைக ளெல்லாம்
அட்டமிகும் பருவத்தேப் பூசத் தீரும்
அசக்கள்ளி யாதிரண நோய்க்காமே. 78

**(அ. பொ. ):—** அசக்கள்ளிகா—இது ஒருவகை அற்ப விரணம்; கச்சவிகாவிரணம்—ஆமை முதுகுபோல மழுங்கலாக உப்புஇன்றி கிரந்தி வழிப்பிறந்த புண்;பட்டபாடாணத்தின் விரணம்—கற்களைப் போலக் கடினமாய்த் தோன்றி விளைவிக்கும் விரணம்; இவைகளின் விரிவை சீவரட்சாமிர்தம் போன்ற நூல்களில் கண்டு கொள்ளவும்; மணிப்புங்கு—பூந்திக்கொட்டை என்பர்; அட்டம்—இகும்—பழுத்து உடையும் பழம் (அட்டம்—வினை முற்றிய தருணம். இகும்—உடைதல்; ஒழிதல்) என்று கொள்க.

## முகப்பருக்களுக்கு

உரைத்த நல்வசம் பெருக்குட னுரியநா கணமுந்
திருத்தும் வெள்ளறு காலிலைச் சிரட்டையினோடும்
அரைத்துப் பூசமுகத்தினில் நாற்றமானதுவும்
விருத்த மாமுகப் பருக்களின் விரண மும்போமே. 79

**(அ. பொ.):—** சிரட்டை—தேங்காய் ஓடு. முகதூஷணவிரணம் முப்பருக்களின் பேதம்.

## பதுமகண்ட விரணத்திற்கு

கொன்றையின் பட்டை நெய்தேன்
கோதிலா வேம்பின் பட்டை
நன்றதாயரைத்துப் பூச
நாடுமிப் பிணியைந் கேளாய்

இன்றுதாமரைநாளத்தி
விருந்திடுங் கருக்குப்போலக்
கன்றமெற் றென்றும் பத்ம
கண்டக நோய்களாமே. 80

(அ. பொ.) : —நாளம் —தண்டு; கருக்கு —முள், பத்ம—பதும தாமரை (தவளைச் சொரிபோன்று காணும் ஒரு பிணி.)

## பொட்டக விரணத்திற்கு

திரண்டுமுகங் கொண்டிருக்கும் விரணத் துக்குஞ்
சேர்ந்துருண்டு மின்னல்தரும் விரணத் துக்கும்
செப்புநடு மார்புதனி லக்குள் தன்னிற்
றிறமாகப் பருத்திருக்கும் விரணத் துக்கும்

மருண்டவுடல் தனிலெரிவாய் வசூரி போலும்
வருவிரண மல்லாமல் வசூரி கட்கும்
வந்தெழும்பி மூன்றுமுக மாயுருண்ட
வல்லிரணம் பித்தத்தின் விசற்பியாலும்

அருங்கடகு கதுபோலு மநேகங்கண் கொண்டு
அக்கினிரோ கணி நான்காம் விரணத்துக்கும்
ஆகியநற் சில்லதுபோல் விரணத்துக்கும்
அநேகரணங் கணக்கில்லா விரணத்துக்கும்

வரண்டிடச் சுக்கிலம் வாங்க லுதிரம் வாங்கல்
மருவியலங் கணம்போடல் குளிர்ச்சி செய்தல்
மருந்துகளாற் பலவகையாற் காங்கை யேற்றல்
மருவியபொட் டகவிரண நோய்க்காமே. 81

(அ. பொ.) : — இன்னல்— துன்பம்; வசூரி—அம்மைக் கொப்பு ளங்கள் வல்லிரணம்—வலிந்தஇரணம்; சுக்கிலம்—விந்து; உதிரம் — குருதி; லங்கணம்— பட்டினி; காங்கை—வெம்மை; பொட்டகம் — பாட்டில் கூறியபடி சிறு சிறு விரணங்களின் கூட்டம் என்று கொள்க. இவற்றின் விரிவை சீவரட்சாமிர்தமென்னும் நூலிலும் யூகி வைத்திய சிந்தாமணி என்ற நூலிலும் கண்டு தெளிக.

## தலைமுளை இரணத்திற்கு

சிவந்திருக்குஞ் சிற்றிவழு தலையின் வேருஞ்
செய்யநிலப் பூசணியின் கிழங்கு மாகும்
வந்தசேத் துமகிரந்தி மருந்து செய்யல்
தலைமுளை விரணத்தின் மருந்து செய்யல்

அவன்றலையிற் பிறந்தரண மூளை பற்றி
அக்கினிநெய் போலுருகி வரம்புகட்டுஞ்
சவந்தபர கிதமாக நிதானஞ் சொன்னர்
சக்காரற் புதவிரணநோய் தீர்க்குமே. 82

(அ. பொ.) :—சிறிய வழுதலை—சிறுவழுதுணை (இது சிறுபஞ்ச மூலத்தில் ஒன்ருகும்.)

## ஏருவாய்ப் புற்று நோய்க்கு

புற்றுப்போ லெழுந்துடனே தினவுண் டாகும்
பொருந்தியவன் குத்தலுமா யெரிவுண்டாகும்
புகலுமிது வல்மீக விரணமாகும்
பூண்டதலை மூளையதின் சிகிச்சை செய்யல்

சத்தியென்னும் புற்றுடைய மண்ணுஞ் சேர்த்து
தந்திசெடி யிந்துப்பு நாணல் சீந்தில்
சாருமிது வல்லாமல் ரத்தம் வாங்கல்
தாவுகின்ற ரவுத்திர மாம் விரணங்களும்

பெத்தவனலகிலம் போல் கொதுறல் செய்யும்
பெருகுநரம் பதிலேசத் திரமும் பண்ணல்
பேசிய குதக்கிரந்தி குணமுஞ் சொல்வேன்
பின்னுங்கால் விரல்கீழும் விரணமாகும்

வத்தையதை யறுக்குதலு மிரட்சை கர்மம்
வகையான மணிவிதியுஞ் செய்யத் தீரும்
வல்மீக ருத்தகுத நோய்களென்று
மருவுகுறு முனியுகந்து வகுத்திட் டாரே. 83

(அ. பொ.):—தந்தி செடி; நேர்வாளச்செடி; ரவுத்திரவிரணம்—மிக்க (சினம்போன்று) சிவந்து நொந்துண்டாகும் விரணம்) பெத்த வனலகிலம் — பெரிய எரிமலை யடுத்த நிலம்போல்; கொதுறல்; வெந்து புண்ணுகிப் புண்ணீர் மிகப் பாயப் பரவி நிற்றல்; சத்திய மும்பண்ணல்—அவைக்கான ஆயுதம் செலுத்தல் அல்லது சூடிடல்; இரட்சை — சூடிடல்; ருத்தகுத — நோதலை உடைய குதம் (ஆசன வாய்). வல்மீகம் — புற்று.

## நகத்தில் காணும் நோய்க்கு

சத்திரமாம் விதிபண்ணல் தெங்கின் கந்தம்
சம்பழம் வெண் குங்கிலியத் தயிலம் பூசல்
சித்திரமூ லத்துடனே அரக்கோ டெள்ளின்
செடியதனைச் சாரமதாய்ச் செய்து பூசல்

பத்திவரும் பிணியதனைச் சொல்லக் கேளாய்
பழுப்பாகும் நகமெல்லாங் கருப்பு மாகுங்
குற்றமுடன் விரணமதாய் நகத்திற் றேன்றுங்
குணக்கநோய்ப் பிணிகளெனக் கூறினரே. 84

(அ. பொ.) :—எள்ளின் செடியதனைச் சாரமதாய்ச் செய்து பூசல் —எள்ளின் சமூலத்தை நன்ருய் உலரத்தி நன்ருகச் சாம்பலாகும் வண்ணம் கொளுத்தி எரியச்செய்து அச்சாம்பலை முறைப்படி சுத்த நீரில் கரைத்து வடிகட்டிக் காய்ச்சி உப்பெடுத்தல். இந்த உப்பு மிக்ககாரமுள்ளதாய் இருக்கும் இதுவே எள் சாரம் எனப் படும். குணக்கநோய்—நகத்தில் தோன்றும் நோயாம்.

## சேற்றுப் புண்ணுக்கு

எள்ளுடைய பொடியுடனே வேம்பின் வேரும்
இய்யமுடன் சுட்டபுளி பேய்ப்பு டோலுந்
தெள்ளியநற் கொத்துமல்லிக் கழுநீ ரோடுந்
தேங்காயி னெண்ணெயுடன் காய்ந்த சுண்ணங்
கொள்ளுதற்கு நெல்லியுடன் பழைய காடிக்
கொடுமையுட னக்கினியின் கருமஞ் செய்யக்
கள்ளனெனுங் கால்தனிலே சேற்றுப் புண்ணுங்
கரதமாம் விரணங்கள் தீர்ப்பதாமே. 85

(அ. பொ.) :—இய்யம்(விகாரம்)ஈய செந்தூரம் என்னும்கடைச் சரக்கு ;கரதம விரணம்—சேற்றுப்புண். கொள்ளுதற்கு— உள்ளுக் குச்சாப்பிடுவதற்கு.

## மங்கு நோய்க்கு (தோல்நோய்)

தேனெடு பாலைப் பட்டையுந் துளிருஞ்
சீரகம் நாணலின் பட்டை
செய்யதிப் பிலியும் நெல்லி சந்தனமுஞ்
சிறந்திடு மஞ்சளு மறுகுங்
காஞெடு முசலி னிரத்தமுங் கோட்டங்
காட்டெரு மைக்கடாக் குளம்புங்
கருதுபத்திரிக்காய் நிம்பமும் பிச்சிக்
கடியபூ வெள்ளிலோத் திரமும்
ஈனமாம் பங்கம் பாளையின் சாம்பல்
இலந்தைவித் தெள்ளுடன் பாலும்
எழில்மனே சிலையும் வன்னி மஞ்சட்டி
யிலவதின் பிசினெடு வெல்லம்

வேரெனும் லவங்கப் பட்டைவெள் ளாட்டின்
மேவுபால் வடிந்திடுஞ் சாதம்
மிகுமருந் ததன்றேல் மங்குக ளான
வெங்கலாஞ்சிய விரண நோய்க்கே. 86

(அ. பொ.) :—அறுகு—வெள்ளறு சமூலம்; அறுகம்புல். கான்—கான்மரம்—ஆலமரம்; பத்திரிக்காய் — சாதிபத்திரி, சாதிக்காய் ஆகிய இரண்டும், பங்கம் பாளே — ஆடு தின்னுப்பாளே; சாதம்—சோறு; மங்குகள்—தோலின்மேல் கருப்பாகப் படரும் ஒரு வகைநோய்.

## கோட்ட விரணத்திற்கு

எரிவினுற் புடைத்தலுண் டாமெழும்பித்த சேத்து மத்துக்
குரியக ரகுரொட் டார்வா முத்தநல் நோய்க்குப்
பரியுநற் சிச்சைபோலப் பண்ணுத லிவைக ளெல்லாம்
விரிவிலா நீண்ட கோட்ட விரணத்து நோய்க் காமே. 87

(அ. பொ.) :—புடைத்தல்—வீங்குதல்.

## காமிய விரணத்திற்கு

இண்டிலையுடனே துத்தமுந் துருசும்
ஏலமும் பாண்டப்புத் தோடும்
எள்ளொடுதேனும் நெய்யதி மதுரம்
இந்துடன் நெல்லியின் காயும்
தண்டுடை வளேமண் தான்றியின் காயும்
நன்மஞ்சு சிலையொடு வீரம்
நாட்டினிற் கொடிதாம் வெளுத்தபாடாணம்
நயந்தரு மாலதின் செடியுஞ்
சுண்டுநற் கடுக்காய்க் காவியின் கல்லுஞ்
சொற்கருங் காலியின் பிசினுந்
தொடர்ந்த முந்திரிகைக் கனிரசாஞ் சனமுந்
தோகையே பூசுநீறதுவும்
கண்டுமுன் சொன்ன சோகையின் மருந்துங்
கருத்துட னிவ்வகையதனுற்
காணவேகோச விரணத்தின் நோய்க்குக்
கருத்துட னுரைத்தனர் முனியே. 88

(அ. பொ.) :—இண்டிலை—ஈயக்கொழுந்து; மாலதின் செடி—துளசி, விட்டுணுக்கிராந்தி, முந்திரிகைக்கனி-- திராட்சை; சோகையின் மருந்து—இவைகளேப்பா எண்—೨೯ல் காண்க.

## அல்குல் நோய்க்கு

அரத்தை யிந்துப்புப் பஞ்சகோலத்தோ டழகிய
மிளகுதேள் கடையும்
ஆவதின் நெய்பால் வசம்பொடு காய
மசமதா கமுமிரு சீரம்

உரத்தமா விலங்கை யிலைமரமஞ்சள்
ஓங்கிய சீதளம்பழமும்
உயர்ந்திடுந் தேங்கா யெண்ணெயே ரண்டம்
உற்றநல் லெண்ணெயிம் மூன்றுந்

தரித்தநல் முத்தங் கோவையின் கந்தஞ்
சர்க்கரை வேலைவேர் கொன்றைச்
சார்குருந்தக்கல் கூகையின் நீறுந்
தாழ்ந்தநன் னெருஞ்சியின் காயும்

வருத்தமாம் வட்டத் திருப்பியுந் தாரம்
மஞ்சளும் நல்லெவச் சாரம்
மானனை யார்கள் குய்யமாம் ரோக
வகையதின் நோய் தீரும் பாரே. 89

(அ. பொ.) :—தேள்கடை தேள்கொடுக்கிலை; சீதளம்பழம்—கொடிமா துளைப்பழம்; சர்க்கரை—பூமி சர்க்கரைக்கிழங்கு; குய்யம்—பெண்குறி; குருந்தக்கல்—வச்சிரக்கல்.

## தாவர நஞ்சுகளுக்கு

முத்துநல் வட்டத் திருப்பி சந்தனமும்
மிளகொடு சுக்குதிப் பிலியும்
முத்தமுங் கடுக்காய்ப் பேய்ப்புடல் சீந்தில்
முந்திரி கையுங் கொடு வேலி

வத்துநற் கோட்டம் நெய்யிரு மஞ்சள்
மருளொடு கிரந்தியின் றகரம்
வசம்புழக் குரட்டை யாம்பலும் வங்கம்
மருவிய வெள்ளியும் பொன்னுஞ்

சுத்தபேய்ப் பீர்க்குஞ் செம்பையின் பட்டை
துய்யவெண் சாரணை லோத்ரஞ்
சொற்சிறு கீரை செவியமுந் தேனுஞ்
சூழ்பெரு வாகையி னிலையுந்

தத்துகாவிக்கல் சாரணை விளங்கந்
தாவுமட் டாங்கொடி யுடனே
தையலே செடிகள் தன்னிலே பிறக்குந்
தாவர விடங்களின் நோய்க்காமே. 90

(அ. பொ.) :—விளங்கம்—வாய்விடங்கம்

## சருவ நச்சு நோய்க்கு

கண்டங்கத் திரிமருளும் வெண்காக்க ணுன் சீந்தில்
கருதிளங் கஞ்சாணமும்
கார்போகி யொட்டறை குன்றிசிறு நொச்சிலுங்
கண்மழையு நீருள்ளியும்

கருது காட்டுக்கருணைப் பெருவாகைப் பஞ்சகங்
கரிசாலைப் பண்ணை கோட்டங்
காதுக்கு றும்பியும் வச்சிரம் பாலைவிதைக்
காயமொடு தூது வளையும்

மண்டெருக் கன்விதையும் புங்குபா கல்சாறும்
வசம்புதிரி கடுகு நாணல்
வட்டத் திருப்பி சிறு கொம்மட்டிப் பேய்ச்சுரையும்
மஞ்ச ளிலைப் பழு பாகலும்

மருக்காரை யிருமஞ்சள் வெள்ளறுகு வெங்காரம்
மயூரசிகியும் பாலையும்
மகிழம் விதைப் புத்தரசு வித்துமீச்சுரமூலி
வாழ்மணித் தக்காளியும்

அண்டர்தேன் திரிபலையு மரத்தையதி மதுரமும்
ஆம்பலிலுப் பைக்கட்டியும்
ஆமணக் கூமத்தைத் துளசிபுளி யந்துளிரும்
ஆட்டுப் புழுக்கைவெல்லம்

அருலவங்கப் பட்டை பிரண்டையும் பேய்ப்பீர்க்கும்
அன்னிலப் பனை தாரமும்
ஆகாசக் கெருடனுந் தாயைக்கொன்றுர் பூண்டும்
அரியதா ளிப்பனங்காய்த்

தண்டுநற் றிருமேனி தும்பிலி சிறுகீரைச்
சாரணையும் மூக்குரட்டைத்
தாவுசென் னெரிஞ்சிலும் விளங்கமுத்
தாமணியுந் தருசிவர் நிருமாலியந்

தருகிரந் தித்தகர மாவின் நெய்ப் பூசவுந்
தாவிக் குடிக்க நிதமுந்
தயவுடன் புகைபோட நசியமுஞ்செய்திடச்
சருவவிட நோய் தீரும்மே. 91

(அ. பொ.):—இளங்கண்சாணம்-பசுவின் இளங்கன்றின் சாணம். (கன்று என்பதைக் கண்ணு என்பது பரவை வழக்கு) கன்மழை-ஆலங்கட்டி மழை; பெருவாகைப் பஞ்சகம் — வாகையின் வேர், பட்டை, இலை, பூ, காய் ஆகிய ஐந்து. மயூரசிகிமயிலிறகு; தாயைக் கொன்றூர் பூண்டு-வாழை; தும்புலி—ஓர்மரம். தருசிவர் திருமாலியம் சிவனுடையசிறந்த திருமாலியம், வில்வபத்திரம் ஆகும்; சர்வ விடம், எல்லாவகை நஞ்சு.

## நுண்புழு நச்சு நோய்க்கு

சீரகங் காயம் நற்சிறுகீரைச் சிவதையிந்
துப்பொடு கோட்டந்
திரிகடுகேலம் நெய்யெவச் சாரஞ்
சீர்பெறுங் குன்றியும் வசம்புங்

காருறுந்துளசி கிரந்தியின் றகரங்
காட்டினில் வாகை முள்ளங்கிக்
காவியின் கல்லுஞ் சந்தன மதுரங்
கருதுமஞ் சட்டிநா கேசம்

பேருறுவட்டத் திருப்பி நன்னாரி
பெரியநற் றுளசிவாய் விளங்கம்
பின்னிரு மஞ்சள் றகரையின் வித்தும்
பெருகியக் கோரையின் கந்தம்

போருறுஞ்சீனி பாலையின் பட்டைப்
பூச்சிகள் புழுக்களின் விடமாம்
பூசவுங் குடிக்கக் கீட்டக விடங்கள்
போகுமென் றுரைத்தனர் முனியே. 92

(அ.பொ.) :— காருறுந்துளசி — கருந் துளசி; கீட்டகம்—புழுச்சிகள்.

## சிலந்திப்பூச்சி நஞ்சு நோய்க்கு

இலந்தையொடு நாயுருவி நெய்யிந் துப்பு
ஏலமொடு சாணப்பாலி லவங்கத் தோல்
சலந்தருநல் லாம்பலொடு மதுரஞ்சந்தந்
தான்றிக்காய் செஞ்சந்தஞ் சடாமாஞ் சிற்றூன்

மலந்தடுக்கும் பொன்முசுட்டை பாலைப் பட்டை
மஞேசிலையு மிருமஞ்சள் வருநன்ஞரித்
தலந்தனிலே லூத்தையெனும் விடங்களானத்
தருசிலந்திப் பூச்சிகளின் நோய்க்காமே. 93

## தேள்நஞ்சு நோய்க்கு

கழல் விதையு மெருக்கம்பால் வச்சிரப்பால்
காயமுடன் புரசினுட பிசினும் புங்கும்
காதுக்கு ளாங்குறும்பி காய்ச்சுங் காடி
கருதியநல் லரசினுட பிசுனிந்துப்பும்

அழலுறுகஞ் சாங்கோரை யாயில் மஞ்சள்
அரிதகியுஞ் சீதளையு மொட்டைப் பல்லும்
ஆம்பலுடன் நல்லெண்ணெய் நெய்யும் நாபி
அரும்புரசுப் பெருவாகைச் சிவஞர் மூலர்

தழலுருக்கும் நாகப்பு தேள் கொடுக்குத்
தகரைவிதைக் கதியிலம் வெண்காக் கட்டானுஞ்
சாற்றிய நற் றிரிகடுகு புருவினெச்சந்
தையலே முதலாம் பட்சிகளி னெச்சம்

வழலருக்கும் பசுமுதலாய்ச் சாண மாகும்
வல்மிருகம் பலவகையின் லத்தியாகும்
மாயுதற்கு வெடுக் கென்று கொட்டுந் தேளின்
வல்விடத்து நோய் த்தீருமென்வகுத்திட் டாரே.

(அ. பொ.):--கஞ்சாங் கோரை—நாய்த்துளசி; அரிதகி—கடுக்காய்; சீதளை-பொன்ஞங்காணி; தழல்—நெருப்பு; அருக்கு—எருக்கு; நாகப்பு— (குறுக்கல்) சிறுநாகப்பூ; இலம்—(இல்லம்) இடைக்குறையாக ஆளப்பட்டு தேற்ருன் விதையை உணர்த்தியது; லத்தி — மலம்;

## எலிநஞ்சு நோய்க்கு

எருக்கு தூதளையும் மஞ்சளிந் துப்பு
மீச்சுர மூலிநற் பீர்க்கும்
இனிய பேய்ப்பீர்க்கும் விளாவதின் பிசினும்
இயல்மர மஞ்சளும் புங்கும்

கருக்குள நொச்சில் பூளையினெலும்புங்
காட்டினில் வாகையின் விதையுங்
கன்னியர் முலைப்பால் சீந்தி லொட்டறையுங்
கருது பாவட்டைச் சாரணையும்

மருக்கொளுந் தேவ தார மஞ்சட்டி
வன்சிறு கீரைச்செங் குன்றி
மருவுநல் லழிஞ்சில் விதைநறுந் தானி
வரப்பினில் முள்ளியின் வேரும்
எருக்கொடு நிலத்திற் படர்முடக் கொத்தான்
இவை யெலா மெலிய நு கடித்தால்
இனிய நல் மருந்தா யுரைத்தனன்
முனிவனினிய எலிவிட நோய்க் காகுமே. 95

குறிப்பு : — இப்பாடலில் எருக்கு என்று இருமுறை வந்துள்ள மையால் இருவகை எருக்கையும் கொள்க :-அவை வெள்ளெருக்கு, இள நீல நிற எருக்கு எனும் இரண்டாம்.

## இரைப்பு நச்சு நோய்க்கு

கடிபடு மிடத்தை யறிந்து நன்குகக்
கண்டுதோல் செருப்பினு லடித்தல்
காட்டினில் வாகை யிலையு மொட்டைறையுங்
கருது நல் லழிஞ்சியின் விதையும்
வடிவுளமயிலுங் கோழியி னெச்சம்
வாயினிற் றம்பல மதுவும்
வகையுடன் பங்கம் பாளையி னிலையும்
மருவுமூ மத்தையி னிலையுந்
துடியுள மின்னர் குளித்திடு மஞ்சள்
சொற்பெரு மெருக்கதின் பாலுந்
துய்யகற் சுட்ட புதிய சுண்ணம்புஞ்
சொல்லுநல் லமுக்கு ராக் கொள்ளும்
அடியுள நோயால் வெறியது மிகுந்து
அழலுறக் கடித்திடு மெலிகள்
அரியதாம் விடமா மிரைப்புடன் மிகுந்த
வளாகமாம் விடங்களின் நோய் தீருமே. 96

(அ. பொ.):—வடிவு—அழகு; தம்பலம்—தாம்பூலம் (வெற்றிலைப் பாக்கு சுண்ணம்புடன் வாயிலிட்டது.)

## நகம் பல் நச்சு நோய்க்கு

ஆலம்பாலொடு தற்பையும் நாணலும்
அரிய வன்னியின்பட்டை செருப்படைக்
கோலநல்லிரு மஞ்சளும் வெட்டிவேர்
கூடுநிம்பிலை காக்கட்டான் பட்டையுஞ்

சீலமாம்பெரு வாகையின் பஞ்சகஞ்
செய்யுமா கனப் பிராயதின் பட்டையும்
மாலங்கொள்நக தந்த விடங்களின்
நோயாக வகுத்தனர் மாமுனியே. 97

(அ.பொ.) : — பிராய் — குட்டிப்பலா; நகதந்த — (உம்மைத் தொகை) நகமும் பல்லும் (படுதலாலான)

## நரை திரை முதுமை நோய்க்கு

மருவுபொன் னப்பிரகங் காந்தமுங் கெந்தகம்
மஞ்சள் திரிபலை யுள்ளியும்
வல்லாரைப் பிரமியுங் கொட்டைக் கரந்தையும்
வசம்புகற் றாழையதுவும்

வாய்விளங்கம் பாலை நிலப் பூசணிக் கந்தம்
வாழை சேங் கொட்டைகுக்கில்
மருதணியிலந்தைவிதை முள்முருக்கவுரியும்
வாலுழுவை நொச்சி முத்தங்

கருவுசங்கன் குப்பி யட்டவர்க்கஞ் சீந்தில்
காரெள்ள விச்சை சந்தங்
காரையுஞ் சிறுகீரை கூத்தன் குதம்பையுங்
கழல் விதை யழிஞ்சி வித்துங்

கருங்காலி யாகாச கெருடனூ மத்தைவிதைக்
காட்டா மணக்கு மருளுங்
கார்போகி சாரணையும் வேம்புவெண் காக்கணன்
கரிசாலை கொடி வேலியும்

அரிவையே சிறுமூல மரசுபங்கம் பாளை
யமுக்குரா வதிவிடை யமும்
ஆவாரை தகரையின் வித்து முக்காவேளை
அழுகண்ணி மாவிலங்கை

அரியகற்பூரச் சிலாசத்து சிறுமல்லி
அம்மான் பச்சரிசி பூலா
ஆகுமிரு திப்பிலியுஞ் சிறுபூளை குனிநாவல்
அருமணித் தக்காளியுந்

திருவுநீர் முட்டானும் நெருஞ்சிலு மனோசிலை
செருப்படை நிலக்கு ராவுந்
தேவதாரஞ் சுக்கு புரசொடு நிலப்பனை
சிவனார் கிழங்கு நெய்பால்

தேனுடன் முடக்கொத்தான் சீனி வெண்
குங்கிலியஞ் சேர்த்திடு ரசாயன மதாய்த்
தின்னவே முதுமையும் நரைதிரைகள்
தீருமென்று செப்பிய மொழிப் படியிதே. 98

(அ. பொ.) : —இரசாயனம்—உடல்தேற்றி. உடலுரமாக்கி—சித்தர்கள் கூறுங்கற்பங்களாக ஒரோ வகை கூறலாம்.

## விந்து இழப்பு நோய்க்கு

கூறுமிர தங்கெந்தி பொன்னுட னப் பிரகங்
கோட்டமரப் பொடி சுக்கதுங்
குளிரிவேர் செந்நெய்தல் நிலப்பனை யமுக்குரா
கோதுமைச் சக்களத்திக்

கூகைநீறு கச்சோல மிலவுநீரும் பிசினுங்
குங்குமங் கடுக்காயதுங்
கொத்துமலி யிலுப்பையின் மலருநீர் முட்டானுங்
கோதும்பை யுள்ளி சந்தம்

ஆறு மாதத்தையின் நெல்லு மோரிதழ்த் தாமரையும்
அமுத சர்க்கரை நெல்லியும்
அதிமதுரம் நன்னாரி நெரிஞ்சிலிரு வேலியும்
அபினி தூதுளை பாலையும்

ஆல்விழுது மரமஞ்சள் வங்கமிள நீரெள்ளும்
ஆனபே ரீந்து மகிழும்
அரியமுந் திரிவாழை தும்பிலி யிலந்தையதும்
ஆறுவகையும் பழ மதாய்க்

காறு திப்பிலி யிஞ்சி சாரணை முசுட்டை விதை
கண்டு சர்க்கரை யுளுந்து
கஞ்சமலருங் கெந்தமும் முருங்கை யிலையும் பிஞ்சுங்
கருதுமல ரும் பிராயுங்

கார்போகி சாதிக்காய் நெல்லொடு சிலா சத்துக்
காஞ்சோரி வித்தேலமுங்
கற்கடக மிருவேலி வெண்காக்க ணனிலையுங்
கடுநிலக் குமிழ்சீந்திலும்

வேறுமில வங்கத்தோல் சீதையுஞ் சிறுகீரை
மேவுவள் ளிக்கிழங்கும்
வெள்ளறுகு முடக்கொத்தான் வித்துநீர் முள்ளி
விதைவெண் கருப்பஞ்சாறதும்

மேவுதேங் காய்ப்பாலும் நிலப் பூசணிக் கந்தம்
வெண்ணெய்பால் நாகேச்சுரம்
மிஞ்சுநெய் தேன் சீனி யனுபான மொடுநட்ட
வீரிய நோய்த் தீருமே. 99

**(அ. பொ.)** :—ஆறுமாதத்தையின் நெல்—ஆடிமுதல் தைவரை வளர்ந்து பயன் தரும் நெல் (இதுசம்பா நெல் என்பர்; அறுபதாங் குறுவை என்னும் ஒருவகை நெல்லென் பாரும் உண்டு.

தற்காலத்தில் 3 மாதங்களிலும் அதற்குள்ளும் பயிராகிப்பலன் தரும் நெற்களெல்லாம் சத்து முழுமையாக உடையதாகக் கருத இடமில்லை. இது ஆராய்ச்சிக்குரியது. கற்கடகம்—நண்டு(இறைச்சி) சிலர் கற்கடகசிங்கியைக் கொள்வர் (துவர்ப்பிச்செய்கையால் விந்து நட்டம் ஓரளவு குணமாகலாம்)

## பயன்படுத்தும்வகை

சொற்சத சுலோகத்தின் மருந்து தன்னைத்
தூபமுட னாக்கிராண நசியம் பண்ணல்
கற்கமொடு சுரசங்கள் குடிநீராகக்
கனமான லேகியமுந் தயிலம் பண்ணல்
நற்கிருத மஸ்தியொடு சிரத்தி லஸ்தி
நன்முழுக்கு மேற்பூசல் சிரத்திற் றப்பல்
முற்படவே மூலிதனை யரைத்துக் கூட்டல்
மொழிந்தனரா யுள்மறை முற்று முற்றே. 100

**(அ.பொ.)** :—தூபம்—புகையிடல். ஆக்கிராணம் —முகர்தல்; நசியம்—மூக்கில் வலியப்புகும்படி மூச்சுக்காற்றுடன் உள்ளுக்கு இழுத்து நிறுத்துதல்; கற்கம் :- பச்சையாகவாவது உலர்ந்ததாக வாவது உள்ள மருந்தை அம்மியில் தக்க சாறே அல்லது நீரோ விட்டரைத்து வைத்துக் கொள்ளும் ஒருவகை உள் மருந்து. சுரசம் —சாறுகளை எடுத்து இரும்புக் கரண்டியைக்காய்ச்சி அதில் ஊற்றிச் சிடுசிடுப்பு அடங்கியபின் சுத்தமான துணியில் வடிகட்டி வந்த உள் மருந்து; (இரசம்—சாறு); லேகியம்—இளகமெனக் கூறுவர்; கிருதம்—நெய்.

ஆரியமாம் வாகடத்தி னுசான் சொன்ன
அருங்கிரந்தம் நூறுமே சுலோகந் தன்னைச்
சீரியநற் றமிழாலே கவிநூறுகச்
செப்பினேன் படிக்கின்ற பெயர்களுக்கு
வீரியமா யிந்நூலைக் கற்றோ ரெல்லாம்
விளங்கவே உத்தமபண்டிதருமாகிக்
கூறியநோய்ப் பிணிநீக்கி வணக்க மாகிக்
குறையில்லாப் பூமிதனில் வாழ்வ தாமே. 101

**(அ. பொ.)** :—ஆரியம்—மேன்மையான; வாகடம்—மருத்துவ நூல், வணக்கமாகி—(பிணிகளைத்தீர்த்தமையால் முனைப்பு கொள்ளாமல்) கற்றுணர்ந்தடங்கலென்ற கொள்கையால் அடக்கம் மிகக் கொண்டு;

வைத்திய சதகம் என்னும் சதசுலோகம் முற்றிற்று.

## வைத்திய சதகத்திலுள்ள பொருட்களின்

# அகராதி

இந்த நூலில் ஒரு நோய்க்குப் பல சரக்குகள் சொல்லப் பட்டிருக்கின்றன; அவைகளே வேறு சில நோய்களுக்கும் சொல்லப் பட்டிருக்கின்றன. அதனால், ஒரு சரக்கானது எந்தெந்த நோய்களுக்குப் பயன்படுகிற தென்பதைத் தெரிந்து கொள்ள வேண்டுமானால் இந்நூலிலுள்ள செய்யுட்களை யெல்லாம் ஆராய்ந்து தேடியெடுக்கநேரிடும்; அப்படிக் குறுகிய நேரத்தில் செய்வது அசாத்தியமான காரியம்; ஆகையால் நினைத்த நேரத்தில் இன்னின்ன சரக்குகள் இன்னின்ன நோய்களுக்குப் பயன்படு மென்பதைத் தெரிந்து கொள்ளுமுகத்தான் நூலிலுள்ளபடியே அச்சரக்குகளை யெல்லாம் அகராதிக்கிரமமாக இங்கே யெழுதிச் சேர்த்திருக்கின்றோம். அந்தச் சரக்குகளில் ஆங்காங்கே சில முக்கியக் குறிப்புகளையும் எழுதியிருக்கின்றோம்.

இன்னும் தொகையாக இருப்பவைகள் விரித்தெழுதப் பட்டிருக்கின்றன. சில அரும்பதங்களுக்கும் அருத்தங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. தேவையானவர்கள் இந்த அட்டவணையைப் பார்த்தால் மேற்கண்ட செய்திகளை யெல்லாம் தெளிவாகத்தெரிந்து கொள்ளக் கூடும்.

**அகத்தி** :— நாசி (மூக்கு) ரோகத்தைத் தீர்க்கும்.

**அகில்** : —<br>**அகிற் கட்டை** : — } சுரசாதம் (குரற்கம்மல்), வாதநோய், வாத சுரோணிதம். ஆவரணப் பைத்தியம், சிரோ ரோகம், மகோதரம் ஆகியவற்றைக் கண்டிக்கும்.

**அசமதாகம்** (ஓமம்) : — அல்குல் நோய் தீரும்.

**அசமோதகம்** (ஓமம்) :— அதிசாரம், செரியாமை ஆகியவை தீரும்,

**அஞ்சனம்**: — சத்தியவிரணம் தீரும்.

**அஞ்சிலைத்துளிர்** (அஞ்சிலைநொச்சித்துளிர்) :— பெருங்கழிச்சல் மந்தாக்கினி ஆகியவை தீரும்.

* **அட்டமூத்திரம்** : — குட்டம் நீங்கும்.

* சிறுநீர், பசுநீர், எருமைநீர், வெள்ளாட்டுநீர், யானைநீர், ஒட்டகை நீர், கழுதைநீர், குதிரைநீர், ஆகியவை,

† **அட்டவர்க்கம்:** —சயநோய், வாதநோய்; கருப்பிணிநோய், நரை திரை, முதுமை ஆகியவை தீரும்.

**அண்டம் (கோழிமுட்டை)** :—பங்கநோய் தீரும் (அஃதாவது எலும்பு முறிவு குணப்படும்.)

**அதிமதுரம்** :— விதாக நோய்; மதமூர்ச்சை, மூத்திரக்கிரிச்சரம் அசுமரிநோய், சோமநோய் தனவிப்புருதி, காமாலை, விசற்பி, பித்தம், ஆவரண பைத்தியம், உன்மத்தம், வெண் குட்டம் அதரநோய், கீட்டகவிடம், வாதசுரோணிதம் நேத்திரநோய் சருவாசியநோய், சிலந்திப்பூச்சி விரணம்; தலையின் நோய்கள் விரணம்சத்திய(அப்போதே அடிப்பட்டதான) விரணம், அனற் பட்ட விரணம், காமியவிரணம், சர்வவிடம், விந்து இழப்பு ஆகியவை தீரும்,

**அதிவிடயம்** : — அதிசாரம், மந்தாக்கினி, நரை, திரை, முதுமை யிவை நீங்கும்.

**அத்தி** : — தனவிப்புருதி, பித்தநோய் அழல் தீரும்.

**அத்திநீர்** : — பங்கநோய் தீரும்.

**அத்திப்பால்:** — வந்தியாநோய் தீரும் (மலட்டுநோய்)

**அபினி** : — விந்து இழப்பு தீரும்.

* **அப்பிரகம்:** — பிரமேகம், கண்நோய், நரை, திரை, முதுமை; விந்து இழப்பு ஆகியவை நீங்கும்.

**அமுக்குரா:** — சயநோய், விப்புருதி, உடலிளைப்பு, நேத்திரநோய், அரைகடிவிடம், நரை, திரை, முதுமை, விந்து இழப்பு ஆகியவை தீரும்.

**அமுதசர்க்கரை** (*சீந்தில்சர்க்கரை*) — விந்து இழப்பு நீங்கும்.

**அம்மான்பச்சரிசி** :— நரை, திரை, முதுமை நீங்கும்.

‡**அயம் (இரும்பு அரப்பொடி)**: — சிரிபத விரணம், வெண்குட்டம், விந்து இழப்பு தீரும்.

---

† சீரகம், கருஞ்சீரகம், சுக்கு, மிளகு, திப்பிலி, இந்துப்பு, பெருங்காயம், ஓமம் ஆகிய இவ்வெட்டுமாம்.

* இதனைத் தனியாக உபயோகிப்பதில்லை; பற்பமாக அல்லது செந்தூரமாகச் செய்து உபயோகிக்க வேண்டும். இதன் முறைகளெல்லாம் நமது அனுபோக வைத்திய நவநீதத்திற் சொல்லப்பட்டிருக்கின்றன!

‡ இதனைப் பெரும்பான்மையும் தனியாகப் பயன்படுத்துவதில்லை; பற்பம் செந்தூரம். இளகம், வடகம், திராவகம் முதலியவைகளாகச் செய்து உபயோகிப்பது வழமை. இம்முறைகள் எல்லாம் நமது அனுபோக வைத்திய நவநீதத்திற் சொல்லப்பட்டிருக்கின்றன.

**அரக்கு :** — உருத்திரநோய், சித்தியாவிரணம், என்பு முறிவு நோய் தீரும்.

**அரக்குச்சாரஞ் செய்து பூசல் :** — * குணக்கு நோய் தீரும்.

**அரசந்தோல் (பட்டை) :** — தனவிப்புருதி, பங்கநோய் தீரும்.

**அரசம்பழுப்பு :** — கண்நோய் தீரும்.

**அரசம்பிசின் :** - தேள் நஞ்சு தீரும்.

**அரசிலை :**— வெண்குட்டம், அனற்பட்டவிரணம் நீங்கும்.

**அரசு(வேர்):**— பித்தநோய், விரணம், நரை, திரை, முதுமை தீரும்.

**அரத்தை :** — சுரசாதம் (குரற்கம்மல்); உருத்திரநோய், சோகை, வாதநோய், வாதசுரோணிதம், ஆவரணபைத்தியம், பல்நோய் உபசிம்மகவிரணம், அல்குல்நோய், சகலநஞ்சுகள் ஆகியவை தீரும்.

**அரப்பொடி :** — (அயத்தைப் பார்க்கவும்)

**அரம்பைக்கனி (வாழைப்பழம்) :** — பித்தநோய் தீரும்.

†**அரவத்தோல் :** —பவுத்திரவிரணம், பாலக்கிரகம் தீரும்.

**அரிதகி கடுக்காய் :** — கடுக்காயைப் பார்க்கவும்.

‡**அரிதாரம் :** — சிம்மரோகம், குட்டம், நேத்திரநோய், காதுநோய், சிரோரோகம, அல்குல்நோய், சகலநஞ்சு தீரும்.

**அலரி :** —மூலை இரணம் தீரும்.

‡‡**அல்லிவிதை :** — பிரமேகந் தீரும்.

††**அவரையிலை :** — விசூழி (வாந்திபேதி) தீரும்.

---

* குணக்குநோய்: நகங்கருத்து புண்ணுகும் நோய்.

†அரவத்தால்: பாம்புசட்டை இதனைக்கொண்டு புகை கொடுக்க வேண்டும்; பிள்ளைகளுக்குக் குளிசங் கட்ட வேண்டும்.

‡இதனைப் பெரும்பான்மையும் தனியாகப் பயன் படுத்துவதில்லை. பற்பம் செந்தூரம் முதலிவைகளாகச் செய்து யோகமுறையோடு சேர்த்தும் உபயோகப்படுத்தவேண்டும் இம்முறைகள் நமது அனுபோக வைத்திய நவநீதத்திற் சொல்லப்பட்டிருக்கின்றன.

‡‡இது நச்சுத்தன்மை (இயற்கைதன்மை) உள்ளது; விழிப்புடனுபயோகிக்க வேண்டியது முறைமை.

†† இதனைக் கறுக்கி கொஞ்சம் மேற்றோல் நீக்கின சுக்கைக் தட்டிப்போட்டுக் குடிநீர்ச் செய்து கொடுக்க வேண்டும்,

அவுரி (இலை) : — நுண்புழு (கிருமி) நோய் தீரும்.

**அவுரிவேர் :**— வெண்குட்டம் தீரும்.

***அழிஞ்சி வேர்ப்பட்டை :** — கிராணி, மந்தாக்கினி தீரும்.

***அழிஞ்சிவிதை :** — குட்டம், எலிநஞ்சு, அரைகடிவிடம், நரை திரை, முதுமை தீரும்.

**அழுகண்ணி :** — நரை, திரை, முதுமை தீரும்.

**அறுகம்வேர்:** — வாதநோய், விரணம்; வசூரி, விசற்பி, பித்தநோய், அனற்பட்ட விரணம், வெங்கலாஞ்சிய விரணம் ஆகியவை தீரும்.

**அனிச்சை :** — குட்டம் தொழுநோய் தீரும்.

**அன்னபேதி :** — பவுத்திர புண் தீரும்.

**அன்னம் ;** — விரணம் தீரும்.

**ஆகாசகெருடன்(கிழங்கு):**-சருவநஞ்சு. நரை, திரை, முதுமை தீரும்; சத்தியாவிரணம் நீங்கும்.

**ஆகாசத்தாமரை (இலை) :** — வாதசுரோணிதம் தீரும்.

**ஆடாதோடை:** — பித்தநோய், கன்னரோகம், சிம்மரோகம், குட்டம், சுரசாதம் (குரற்கம்மல்) வசூரி தீரும்.

**ஆட்டங்கொடி :** — தாவரவிடங்கள் தீரும்.

**ஆட்டுக்கொம்பு, பல் :** — கண்நோய் தீரும்.

**ஆட்டுப்புழுக்கை :** — சருவநஞ்சும் தீரும்.

**ஆட்டுமூத்திரம் :** — உதரவாதநோய் (பெருவயிறு) தீரும்.

**ஆதண்டை :** — வாதசுரோணிதந் தீரும்.

**ஆத்திப்பூ :** — அதிசாரம், மந்தாக்கினி (செரியாமை) தீரும்.

**ஆமணக்கு (இலை):** —வாதசுரோணிதம், அல்குல்நோய், கன்னரோகம் (அஃதாவது காதுநோய்) சர்வவிடந் தீரும்.

**ஆமணக் கெண்ணெய்:**— விளக் கெண்ணெய்

**ஆம்பல்:**— தனவிப்புருதி, வாதம், தாவரநஞ்சு, சிலந்திப் பூச்சி விரணம், தேள் நஞ்சு தீரும்.

---

* இவைவிடத்தருமமுள்ளது

**ஆயில் (வேர்)**:— கிரஎணி, மந்தாக்கினி' விப்புருதி, வாதம் தேள் நஞ்சு தீரும். சுகப் பிரசூதி தரும்.

**ஆயிற்பட்டை** : — குன்மம், இரத்த குன்மம், அற்புத விரணம் தீரும்

**ஆயிற்பத்திரி(இலை)**:— நாடி இரணந் தீரும்.

**ஆரையிலை**:—கிராணி, மந்தாக்கினி தீரும்.

**ஆலம்பட்டை** : — தனவிப்புருதி, பங்கநோய் தீரும்.

* **ஆலம்பழுப்பு**:— பவுத்திர புண் தீரும்.

**ஆலம்பால்**:—நகம் பல் நஞ்சுகள் தீரும்.

**ஆலம்விழுது**:— விசற்பி, நட்ட வீரியம் தீரும்.

**ஆலிலை** : — முகதூஷக விரணந் தீரும்.

**ஆல்(வேர்)**: பித்தநோய், வந்தியாநோய் தீரும்.

**ஆவாரம்பட்டை** :— மந்தாக்கினி தீரும்.

**ஆவாரை(வேர்)** : — குட்டம், கிராணி, மந்தாக்கினி, பிரமேகம், பல் நோய், நரை, திரை, முதுமை, தீரும்.

**ஆவாரையிலை**:— தனவிப்புருதி தீரும்.

**ஆறுமாதத்துநெல்**:— விந்துஇழப்பு தீரும்.

## இ

**இச்சிப்பூ**;— சத்திய விரணந் தீரும்.

**இஞ்சி**:—அரோசகம், சோகை, விந்துஇழப்பு, கன்னநோய், (காது நோய்) தீரும்.

**இண்டிலை**:—காமிய விரணம் தீரும்.

**இண்டு(வேர்)**:— வாதந் தீரும்.

**இந்துப்பு**:— சன்னுச நோய், இரத்தமூலம், கிராணி, மந்தாக்கினி, சீதபித்தம், வாதம், கண்நோய், காதுநோய், பல் நோய், தலைநோய்கள் உபசிம்மகவிரணம், காமியவிரணம், செரியாமை, கருப்பவிப்புருதி, சிம்மநோய், கண்டரோகம், நாடிஇரணம், அசக்கள்ளியாதிரணம், வல்மீகருத்தகுதம், அல்குல் நோய், கீட்டகநஞ்சு, சிலந்திப்பூச்சி நஞ்சு, தேள்நஞ்சு, எலிநஞ்சுதீரும்.

---

* இதனைக் கொண்டு புகை கொடுக்கவேண்டும்.

12 * **இரசம் :** — நட்டவீரியம், கண்நோய் தீரும்.

**இரசாஞ்சனம் :** — கண்நோய், காமிய விரணந் தீரும்.

**இரத்தம் வாங்கல்:** —வன்மீககருத்தகுதந் தீரும்.

**இருசந்தனம்**(வெண்சந்தனம், செஞ்சந்தனம்) : — கண்நோய் தீரும்.

**இருசீரகம்**(பெருஞ்சீரகம், நற்சீரகம்) : — அல்குல்நோய் தீரும். சிலர் கருஞ்சீரகமும் நற்சீரகமும் என்பர்.

**இருதிப்பிலி** (அரிசித்திப்பிலி, யானைத்திப்பிலி) : —நரை, திரை, முதுமை தீரும்.

**இருமஞ்சள்** (கறிமஞ்சள், கத்தூரிமஞ்சள்) : — பிரமேகம், பாண்டு வாதம், நாடிவிரணம், தாவர நஞ்சு சருவநஞ்சு, கீட்டகநஞ்சு சிலந்திப்பூச்சி விரணம், நகதந்தநஞ்சு ஆகியவை தீரும்.

**இருமுட்டி** (சிற்றுமுட்டி, பேராமுட்டி) : — கன்னரோகம், தலைநோய் தீரும்.

**இருலோகம்**(பொன், வெள்ளி) : — தலைநோய் தீரும்.

**இருவங்கம்**(கருவங்கம், வெள்வங்கம்) . — கண்நோய்கள் தீரும்.

**இருவாச்சியிலை:**—இரணந் தீரும்.

**இருவேலி :** — கக்கல்நோய், விதாகநோய், தனவிப்புருதி, காமாலை குட்டம், பித்தம், உபசிம்மகவிரணம், விந்து இழப்பு ஆகியவை தீரும்.

**இருவேயிலை** (வெள்வேல், கருவேல்): — விந்துஇழப்பு நீங்கும் .

**இலங்கணம்போடல் :**— † பொட்டகவிரணம் தீரும்.

**இலந்தை** (வேர்) :—சிலந்தி பூச்சி நஞ்சு போம்.

**இலந்தைப்பழம்:** —விந்துஇழப்பு தீரும்.

**இலந்தைவிதை :** — கக்கல்நோய், மதமூர்ச்சை, குட்டம், வாதம், வெங்கலாஞ்சியவிரணம், நரை, திரை, முதுமை போம்.

**இலவங்கத்தோல்** (பட்டை) :—சிலந்திப்பூச்சிவிரணம், நட்டவீரியம் சுரசாதம் (குரற்கம்மல்) பூதகிரகம், சருவாசியநோய் பவுத்தர நோய், வெங்கலாஞ்சிய விரணம், சருவநஞ்சு தீரும்.

---

* இதனைப் பெரும்பான்மையும் தனியாக உபயோகிப்பதில்லை. பற்ப-செந்தூரங்களாகவும்யோகமுறைகளாகவும் செய்து உபயோகிக்க வேண்டும், இம்முறைகளெல்லாம், நமது அநுபோக வைத்திய நவநீதத்திற் சொல்லப் பட்டிருக்கின்றன.

† பொட்டகவிரணம் :-கட்டிகள்

**இலவங்கப்பத்திரி:**— சுரசாதம் (குரற்கம்மல்) மேகக்கட்டி சருவாசிய நோய், தலைநோய் நீங்கும்.

**இலவங்கப்பூ (இலவங்கம் அல்லது கிராம்பு):**— அதிசாரம், மந்தாக்கினி சருவாசிய நோய், சுரசாதம், (குரற்கம்மல்) கண்நோய், காது நோய், மூக்குநோய், தலைநோய் தீரும்.

**இலவம்பட்டை:**— சத்திய விரணம் நீங்கும்.

**இலவம்பிசின் :** — கண்நோய், அதிசாரம், மந்தாக்கினி, வெங்கலாஞ்சிய விரணம், விந்துஇழப்பு நீங்கும்.

**இலவுநீர் :**— நட்டவீரியம் தீரும்.

**இலுப்பைக்கட்டி :** — (இலுப்பைப்பிண்ணாக்கு) அனைத்து நஞ்சு நீங்கும்.

**இலுப்பைப்பூ :** — சயநோய், விதாகநோய், மதமூர்ச்சை, பித்தம், நட்டவீரியம் நீங்கும்.

**இலைக்கள்ளி:**—காதுநோய் தீரும்.

**இளங்கன்றின் சாணம்:**— சருவ நஞ்சு நீங்கும்.

**இளநீர் :** — கண்நோய், வாந்திநோய், விதாகநோய், மதமூர்ச்சை, மூத்திரக்கிரிச்சரம், குன்மம், பித்தம், தந்தநோய், விந்துஇழப்பு நீங்கும்.

## ஈ

‡ ஈசுரமூலி (பெருமரப்பட்டை என்பர் ஹக்கீம் பா. மு. அப்துல்லா அவர்கள்) :— சர்வநஞ்சு, எலிநஞ்சு தீரும்.

**ஈயம் :**— வங்கத்தைப்பார்க்க.

## உ

**உடும்பிறைச்சி :**—சயநோய் தீரும்.

**உதிரம் வாங்கல் :** — கட்டியாக வரும் புண் தீரும்.

**உத்தாமணி :** — சருவநஞ்சு நீங்கும்.

**உத்தாமணிக்கொழுந்து :**—உபசிம்மகவிரணந் தீரும்.

**உருத்திராட்சம் :**— (சுரசாதம்) குரற்கம்மல் தீரும்.

**உலோகம் :** — அதித்தூலம் நீங்கும்; (உடல் பருத்தல்).

---

‡ ஈசுரமூலி என்பது பெருமருந்து என்னும் தராசுக் கொடியாம், பெருமரமல்ல என்பதறிக.

**உலோத்திரம் (வெள்ளிலோத்திரம்) :**— கண்டரோகம், கண்நோய் அதிசாரம், மந்தாக்கினி, மகோதரம், தாவரநஞ்சு தீரும்.

**உழமண் :**— சுகக்கருவுயிர்த்தல் தரும்.

**உழவூறுநீர்(உழமண்நீர்):** —குன்மந்தீரும்.

**உளுந்து :**—சோமநோய், வாதநோய், விந்துஇழப்பு தீரும்.

**உளுந்துநீர் :**—அதிக்குருசம் உடலிளைத்தலாகிய நோய் நீங்கும்.

**உளுந்துவேர் :**—வந்தியாநோய் நீங்கும்.

**உள்ளி (பூண்டு) :**— சன்னிசநோய், குன்மநோய், வெண்குட்டம், பூதக்கிரகம், காதுநோய், மூக்குநோய், நரை, திரை, முதுமை, நட்ட வீரியம், அபஸ்மாரம், வாதசூலை தீரும்.

## ஊ

**ஊமத்தை(இலை):**— அழற்பட்ட விரணம், காதுநோய், மூளையிரணம் சர்வநஞ்சு, அரைகடிநஞ்சு நீங்கும்.

† **ஊமத்தைவிதை :**—நரை, திரை, முதுமை, நீங்கும்.

## எ

**எருக்கம்பால்:** —கேர்நஞ்சு, நாடிவிரணம், அளாகநஞ்சு நீங்கும்

**எருக்கிலை:** —சர்வநஞ்சு நீங்கும்.

**எருக்கு(வேர்):**— குட்டம், வாதம், காதுநோய், பல்நோய், அற்புத இரணம, சிலிபதவிரணம், உபசிம்மக விரணம், முகதூடக இரணம், எலிவிடம் ஆகியவை தீரும்.

**எருமைக் குளம்பு** —காமாலை தீரும்.

**எருமைக்கொம்பு, பல் :** — கண்நோய் தீரும்.

**எருமைத் தயிர்;**—அதிக்குரு (பருமன்) தரும்.

**எருமைமூத்திரம் :**—உதரவரதம் தீரும்.

**எருமைமோர் ;**—பாண்டு, காமாலை தீரும்.

**எலுமிச்சம் பழச்சாறு :**—காதுநோய், சிலிபத விரணம் தீரும்.

**எலுமிச்சம்பழம் :** — கண்நோய் தீரும்.

**எவச்சாரம்:**—அல்குல்நோய் தீரும்.

**எள்ளு :** — எருவாய்நோய், தனவிப்புருதி, இரத்தகுன்மம், விசற்பி வாதசுரோணிதம், விரணம், வெங்கலாஞ்சியவிரணம், காமிய விரணம், விந்துஇழப்பு, நாடிஇரணம் ஆகியவைநீங்கும்.

† இது நச்சுத்தன்மை உடையது

**எள்ளுச்செடிசாறம்:**—குணக்குநோய் தீரும்.

**எள்ளுப்பூ :** — கண்நோய் நீங்கும்.

**எள்ளுப்பொடி:**— கரதமவிரணம் நீங்கும்.

**எள்ளெண்ணெய் :**— அல்குல்நோய், உருத்திரநோய், அதிசாரம், மந்தாக்கினி, பிரமேகம், கருப்பவிப்புருதி, குன்மம், வாதசூலை மகோதரம், சீதபித்தம், வாதம், அதித்தூலம், காதுநோய், பல் நோய், தலைநோய், விரணம், பங்கநோய், தேள் நஞ்சு ஆகியவை நீங்கும்.

## ஏ

**ஏரண்டத்தெண்ணெய்:**—(ஆமணக்கெண்ணெய் பார்க்க)

**ஏரண்டம் :**—(ஆமணக்கைப்பார்க்க)

**ஏலம் :** — (சுரசாதங்) குரற்கம்மல், மூத்திரகிரிச்சரம், மேகக்கட்டி சோமநோய், சிம்மகநோய், சருவாசியரோகம், கண்டநோய் தலைநோய், பவுந்தரவிரணம், காமியவிரணம், கீட்டகவிடம், சிலந்திப்பூச்சிவிடம், நட்டவீரியம் ஆகியவை நீங்கும்.

## ஒ

**ஒட்டறை :**— இரத்தமூலம், குன்மம், குட்டம், கண்டநோய், அற்புத விரணம், சருவநஞ்சு, எலிநஞ்சு, அளாகநஞ்சு ஆகியவை தீரும்.

**ஒட்டைப்பல் :**—தேள் விடந் தீரும்.

**ஒட்டைமூத்திரம் ;**—உதரவரதன் தீரும்.

**ஒதியம்பட்டை :**—விப்புருதி நீங்கும்.

## ஓ

**ஓமம் :** — சீதபித்தம், பல்நோய், அல்குல்நோய், அதிசாரம், மந்தாக்கினி தீரும்.

**ஓரிதழ்த்தாமரை:** — பிந்துஇழப்பு தீரும்.

## க

**கசப்புதிரா :**—நுண்புழுநோய் தீரும்.

**கச்சோலம் :** — தலைநோய், நட்டவீரியம் நீங்கும்.

**கஞ்சமலர் :**—(தாமரைப்பூவைப்பார்க்க).

**கஞ்சா :** — கண்நோய், காதுநோய் தீரும்.

**கஞ்சாங்கோரை :**—தேள்நஞ்சு தீரும்.

**கஞ்சி** :—இரணம் நீங்கும்.

**கடப்பம்பட்டை** :—அதிசாரம், மந்தாக்கினி தீரும்.

**கடம்பைக்கொம்பு, பல்** : — கண்நோய் தீரும்.

**கடலழிஞ்சிப்பட்டை** :—பிரமேகம் தீரும்.

**கடலையிலை** :—கண்டாலச்சிய விரணம் நீங்கும்.

**கடல்நுரை** : — கண்நோய் தீரும்.

**கடாக்குளம்பு** :—வெங்கலாஞ்சிய விரணந் தீரும்.

**கடித்த விடத்தில்செருப்பாலடித்தல்** :— அளாகநஞ்சு தீரும்.

**கடு** :—கடுக்காயைப்பார்க்க.

**கடுகு** :—சுகக்கருவுயிர்த்தல், சீதபித்தம், உண்டாம். பாலகிரகம், பூதகிரகம், மூக்குநோய், சிலிபதவிரணம் ஆகியவை நீங்கும்.

**கடுகு ரோகணி** :— விரணந் தீரும்.

**கடுகெண்ணெய்** : — காதுநோய் நீங்கும்.

**கடுக்காயெண்ணெய்** :— பங்கநோய் (என்புமுறிவு) நீங்கும்,

**கடுக்காய்** :— மூலம், உதரவரதன், அதிசாரம், மந்தாக்கினி, விப்புருதி, குன்மம், காமாலை, சோகை, கிருமிநோய், வாத சுரோணிதம், அதித்தூலம், உன்மத்தம், நாசிநோய், சிம்ம நோய், கண்டரோகம், விரண ரோகம், சத்தியாவிரணம் அனற்பட்ட விரணம், மதமூர்ச்சை. வெண்குட்டம், அற்புத விரணம், சிலிபதவிரணம், காமியவிரணம், தாவர விடங்கள், நட்டவீரியம், தேன்விடம், அதரநோய், கிருமிநோய், பாண்டு ஆகியவைகள் தீரும்.

**கட்டுவித்தல்** : — விசூழி நீங்கும்.

**கண்டகாரி** ;— (கண்டங்கத்திரியைப்பார்க்க.)

**கண்டங்கத்தரி** : — சருவநஞ்சு, சுரசாதங் குரற்கம்மல், குன்மம் இரத்தகுன்மம், வெண்குட்டம், விப்புருதி (அகக்கட்டி) தீரும்.

**கண்டங்காலி** : —(கண்டங்கத்தரியைப்பார்க்க).

**கண்டுபாரங்கி (சிறுதேக்கு)** : — (சுரசாதம்) குரற்கம்மல் நீங்கும்.

**கண்ணஞ்சனமிடல்** : — சன்னுசநோய் நீங்கும்.

**கதலிபழம் (வாழைப்பழம்)** : — மதமூர்ச்சை நீங்கும்.

**கத்தியிலை** : — விசற்பி தீரும்.

**கத்தரிவேர் :** — மூளைஇரணம் தீரும்.

**கஸ்தூரி :** — தலைநோய் நீங்கும்.

**கமுகு :** — நாடி இரணம் தீரும்.

**கம்பிப்பிசின் :** — மேகக்கட்டி நீங்கும்.

**கரந்தை :**— குன்மம் நீங்கும், கருப்பவிப்புருதி நீங்கும்.

**கரிகருமை (கரிசலாங்கண்ணி) :** — கரிசலாங்கண்ணியைப் பார்க்க.

**கரிசலாங்காணி:**— (சுரசாதம்) குறற்கம்மல், காமாலை, மூலம், மூக்கு நோய், சருவநஞ்சு, தலைநோய், நரை, திரை, முதுமை தீரும்.

**கரிசாலை :** — (கரிசாலாங்கண்ணியைப்பார்க்க.)

**கரிசாலைச்சாற்றால் மூக்கில் நசியம் பண்ணல் :**—விசூழி தீரும்.

**கரிதிப்பிலி :** = (யானைத் திப்பிலியைப் பார்க்க.)

**கரியசாலை :** — (கரிசலாங்காணியைப் பார்க்க.)

**கரியவேப்பிலை (கருவேப்பிலை) :** — பிரமேகம் தீரும்.

**கரிபாலைநீர் :** — மதமூர்ச்சை நீங்கும்.

**கருங்காலி :** — அதிசாரம், மந்தாக்கினி, குட்டம், பல்நோய், நரை, திரை, முதுமை, சிம்மரோகம், சர்வாசியநோய் நீங்கும்.

**கருங்காலிப்பிசின் :** — பிரமேகம், காமியவிரணந் தீரும்.

‡ **கருஞ்சிவதை :** — உதரவரதன் தீரும்.

**கருஞ்சீரகம் :** — குன்மம், மூக்குநோய் தீரும்.

**கருணைக்கிழங்கு :** —எருவாய்நோய், உபசிம்மகவிரணம், விரணம்' குன்மம் தீரும்.

**கருத்தமுந்திரிகை :** — அசுமரிரோகந் தீரும்.

**கருநொச்சிப்பூ :** — பூதகிரகம் தீரும்.

**கருந்துளசி :** — கீட்டகநஞ்சு தீரும்.

**கரும்பனைக்கந்தம் :** — (நிலைப்பனையைப் பார்க்க).

**கரும்புச்சாறு :** — மூத்திரக்கிரிச்சரம், உன்மத்தம், பித்தம் தீரும்.

**கரும்போளம் :** — மேகக்கட்டி, கிருமிநோய், இவை தீரும்.

**கருவேம்பு (கருவேப்பிலை) :** — கிராணி, மந்தாக்கினி, (சுரசாதம்)

---

‡ இது நச்சுத்தன்மை உடையது

குரற்கம்மல், எருவாய்நோய், குன்மம் தீரும்.

**கருவேல்** : — கண்நோய், பல்நோய், சிம்மரோகம் தீரும்.

**கருவேற்பிசின்** : — பிரமேகந் தீரும்.

**கர்க்கடகம் (நண்டு)** : — நட்ட வீரியந் தீரும்.

**கற்பூரச்சிலாசத்து** : — அசுமரி ரோகம், (மனநோய்) விப்புருதி நரை, திரை, முதுமை தீரும்.

**கற்பூரத்தைலம்** : — பல்நோய் தீரும்,

**கற்பூரம்** : — பித்தநோய், தலைநோய், அனல் பட்டபுண் நீங்கும்.

**கற்பூரவல்லி** : — வசூரி, குட்டம் நீங்கும்.

**கலைக்கொம்பு, பல்** : — கண்ணோய் தீரும்.

**கல்பூ** : — வாதசுரோணிதந் தீரும்.

**கல்மதம்** : — மதமூர்ச்சை அசுமரிநோய் (மனநோய்) தீரும்.

**கல்லால்** : — பித்தநோய் தீரும்.

**கல்லுப்பு**:— கிராணி, மந்தாக்கினி, மதமூர்ச்சை, நாடிஇரணந்தீரும், சுகக்கருவுயிர்த்தல் உண்டாம்

**கவிழ்தும்பை** :—மூத்திரக்கிரிச்சரம் தீரும்.

**கழல்விரை**:— கருப்பவிப்புருதி, குன்மம், வாதசூலை, நுண்புழுநோய். தேள்நஞ்சு, வந்தியாரோகம், வாதசுரோணிதம், நரை, திரை, முதுமை தீரும்.

**கழுதை மூத்திரம்** : — உதரவரதன் தீரும்.

**கழுநீர்** : — கரதம விரணந் தீரும்.

**கள்ளி** : — குட்டம், கிருமிநோய், அற்புதவிரணந் தீரும்.

**கள்ளிக்கரி** : — மகோதரம் தீரும்.

**கள்ளிக்கொழுந்து** ; — மூளை இரணந் தீரும்.

**கள்ளிப்பால்** : — சுகக்கருவுயிர்த்தல் தரும்.

**கறி (மிளகு)** : — சயம் தீரும்.

**கற்கண்டு** : — நட்ட வீரியத்தீரும்.

**கற்பூரச்சிலை** : — (கற்பூரசிலாசத்தைப் பார்க்க,)

**கற்றாழை** : — அதிக்குரகருமாகும் (இளைத்த உடலைப்பலப்படுத்தும் என்க,) கண்நோய், விரணம், பித்தம், உபசிம்ம விரணம், நரை, திரை, முதுமை, தலைநோய் ஆகியவைகள் தீரும்.

**கன்மழை** (ஆலங்கட்டி) : — சருவநஞ்சு தீரும்.

**கன்னல்** : — கரும்புச்சாறு பார்க்க.

**கள்ளி** : — கற்றாழையைப் பார்க்க.

## கா

**காக்கட்டான்பட்டை** : — நகம், பல் நஞ்சுகள் தீரும்.

**காக்கணன்** (காக்கட்டான்வேர்) சோகை தீரும்.

**காக்கட்டானபூ** : — குட்டந் திரும்.

**காக்கைமுங்கில்** :— உதரவரதன் தீரும்.

**காஙகையேற்றல்** : — அகக்கட்டிகள் தீரும்.

**காஞ்சொரிவேர்** :— குட்டம் தீரும்.

**காஞ்சொரிக்காய்** : — நாடிவிரணந் தீரும்.

**காஞ்சொரிவித்து** : -- நட்டவீரியந் தீரும்.

**காடி** : — வாதசுரோணிதம்; தேள் நஞ்சு, விரணந் தீரும்.

† **காட்டாத்திப்பூ** : — சருவாசிய ரோகம் தீரும்.

**காட்டாமணக்கு** : — குன்மம், நரை, திரை, முதுமை தீரும்.

**காட்டுக்கருணை** : — எருவாய் நோய், சருவ நஞ்சு தீரும்.

**காட்டுமல்லிகை** : இரணந் தீரும்.

**ாட்டுவாகை(வேர்)** : — நாடி இரணம், கீட்டகவிடந் தீரும்.

**காட்டுவாகையிலை** : — அளாகவிடந் தீரும்.

**காட்டுவாகைவித்து** : — எலிவிடந்தீரும்.

**காட்டெருமைக்குளம்பு** . — வெங்கிலாஞ்சியவிரணந் தீரும்.

**காட்டெருமைக்கொம்பு, பல்** : — கண்ணோய் தீரும்.

**காட்டெருமைப்பால்** : — (கூகைநீறு)

**காட்டெள்ளு** : — வெண்குட்டந் தீரும்.

**காண்டாமிருகம் கொம்பு, பல்** :—கண்ணோய் தீரும்.

**காதுக்குறும்பி** : — நேத்திரரோகம், சர்வவிடம், தேள்விடந் தீரும்,

‡ **காந்தம்** : பிரமேகம், நரை, திரை, முதுமை தீரும்.

---

† இது விடதரும முள்ளது

‡ இதன் செந்தூரம் பற்பமுறைகளெல்லாம் நமது அனுபோக வைத்திய நவநீதத்திற் சொல்லப்பட்டிருக்கின்றன.

**காயம் :**—(பெருங்காயத்தைப் பார்க்க).

**காய்ச்சுப்பு :** — கிராணி, மந்தாக்கினி, நாடிவிரணந் தீரும்.

**காய்ந்த சுண்ணம் (தாளித்தசுண் ணம்பு) :** — கரதமவிரணந் தீரும்.

**காரம் வைத்தல் :** — பவுத்திர புண் நீங்கும்.

**காரெள் :** நரை, திரை, முதுமை, தீரும்.

**காரை (வேர்) :** — நரை, திரை, முதுமை தீரும்.

**கார்புளி (புளிநறளை) :** —எருவாய் நோய் தீரும்.

**கார் போகரசி :**—நரை, திரை, முதுமை, குட்டம், வெண்குட்டம், சருவ நஞ்சு, நட்டவீரியம், உபசிம்மகவிரணந்தீரும்

**கால் கைக்கணுவில் துணியால் கட்டுவித்தல் :** — விசூழி தீரும்.

**காவட்டம்புல் :** — பித்தநோய் தீரும்.

**காவிக்கல் :** — நேத்திரரோகம், காமியவிரணம், தாவரவிடங்கள், கீட்டகவிடம் நீங்கும்.

**காற்குதியை காய்ச்சுதல் :** — விசூழி நீங்கும்.

**கானகமல்லி (காட்டுமல்லிகை) :** —வந்தியாநோய் நீங்கும்.

**கானகத்தின் கொள்ளு (காட்டுக்கொள்ளு):** — கண்ணோய் தீரும்.

## கி

**கிரந்தி (கிரந்திநாயகம்) :** — தலை நோய் நீங்கும்.

**கிரந்தி தகரம் :** — மேகக்கட்டி, வாதம், பித்தநோய், தலைநோய் தாவரவிடங்கள், சருவ நஞ்சு, கீட்டக நஞ்சு நீங்கும்.

**கிராம்பு :** — (இலவங்கத்தைப்பார்க்க).

**கிளிமூக்கிலை :**— விசற்பி நீங்கும்.

## கீ

**கீரிப்பித்து :** — அபஸ்மாரம் நீங்கும்.

**கீழக்காய் நெல்லி :** — அதிசாரம், மந்தாக்கினி, காமாலை, விசற்பி, அதரநோய் நீங்கும்.

## கு

**குக்கில்**— பிரமேகம், விப்புருதி, மேகக்கட்டி, வாதம், அதிஸ்தூலம், பூதகிரகம், காதுநோய், மூக்கு நோய், உதட்டு நோய், இரணம், நரை, திரை, முதுமை தீரும்.

குங்கிலியம் :—வாதம், பங்கநோய் நீங்கும்.

குங்குமப்பூ :—தலை நோய் நீங்கும், கண்ணோய், நட்டவீரியம் தீரும்.

**குங்குமம்:**—(குங்குமப்பூபார்க்க).

**குதிரைப்பித்து :**—அபஸ் மாரந் தீரும்.

குதிரை மூத்திரம் :—உதரவரதன் தீரும்.

**குந்திரிக்கம் :**—மேகக் கட்டி நீங்கும்.

**ப்பைமேனி :**—குன்மம், சருவ நஞ்சு வாதம், பல் நோய் தீரும்.

**குப்பைமேனிக்குடிநீர்:**— குன்மம் நீங்கும்.

**குமரி:**— (கற்றாழையைப் பார்க்க)

குமரிமஞ்சள் (கஸ்தூரிமஞ்சள்):— தனவிப்புருதி தீரும்.

**குமிழ்வேர்:** — குன்மம் தீரும்.

**குருந்தக்கல்:**— அல்குல் நோய் தீரும்.

குருவேர்:— தலைநோய் தீரும்.

குழம்புமோர்: —கிராணி, மந்தாக்கினி, மதமூர்ச்சை, எருவாய் நோய் பிரமேகம், சோகை நீங்கும்.

**குளத்துக்கிளிஞ்சி:**—கண் நோய் தீரும்.

குளிநாவல்: — நரை, திரை, முதுமை நீங்கும்.

குளிரிவேர்— நட்டவீரியம் நீங்கும்.

குளிர்ந்தநீர்: —கெற்பிணி சுகம்.

குளிவேர் :—கண் நோய் நீங்கும்.

குளித்திசெய்தல்: —பொட்டக விரணந் (அகக் கட்டி) தீரும்.

**குன்றி(வேர்):** —சருவநஞ்சு நீங்கும்.

**குன்றிவிதை:**— பிரமேகந் தீரும்.

## கூ

கூகைநீர்:— கிருமிநோய், உருத்திரநோய், விப்புருதி, குன்மம், தலைநோய், சத்தியவிரணம். அல்குல் நோய், நட்டவீரியம் நீங்கும்.

கூத்தன்குதம்பை:— நரை' திரை, முதுமை நீங்கும்.

## கெ

‡ **கெந்தகம்:**—நேத்திர நோய்,கண்டகரோகம், நரை, திரை, முதுமை, குட்டம், நட்டவீரியம் தீரும்.

## கொ

**கொச்சைமுந்திரிகை (கொட்டை முந்திரிகை):** விதாக நோய் தீரும்.

**சொடிக்கழல் வித்து:**— அதிசாரம், மந்தாக்கினி, நீங்கும்.

17- இதன் மருந்துகளை நமது அநுபோகவைத்திய நவநீதத்திற் பார்க்கவும்.

† **கொடிக்கள்ளிப் பால் ;**—மகோதரம்தீரும்.

**கொடி வேலி :**— கிராணி, மந்தாக்கினி, குன்மம், சுரசாதங் குரற்கம்மல், மூலம், விப்புருதி, கெற்ப விப்புருதி, இரத்த குன்மம் வாதசூலை, மகோதரம, பாண்டு, சோகை, விசற்பி, குட்டம், கிருமிநோய் ஆவரணபைத்தியம், அதித்தூலம் மூக்குநோய், கண்டநோய், தலைநோய், பவுத்தர விரணம், மூளையிரணம், அற்புதவிரணம், தாவரநஞ்சுகள், நரை, திரை, முதுமை நீங்கும்.

**கொட்டைக் கரந்தை ;** — மூலம், நரை, திரை, முதுமைநீங்கும்.

**கொத்துமல்லி :** — சயநோய், வாந்திநோய், விதாகநோய், சிலிபத விரணம், கர்த்தம விரணம், நட்டவீரியம் தீரும்.

**கொருக்கை :** — உதவரதன் நீங்கும்.

**கொல்லன் கோவை :** — (ஆகாசக் கருடன்)

**கொள்ளின் குடிநீர் ;** — உதரவாதன், அஸ்மரிநோய், வாதம் நீங்கும்.

**கொள்ளு :**—இரத்தகுன்மம், வைசூரி, வாதம், அதித்தூலம் நேத்திர ரோகம், மூக்குநோய், அளாகவிடம் நீங்கும்.

**கொள்ளுக்காய் (கொள்ளுக்காய் வேளை)**— காது நோய், பல்நோய் தீரும்.

**கொன்றை (வேர்)**—குட்டம், வெண்குட்டம், விரணம், அற்புதவிரணம், அல்குல் நோய், இரத்தமூலம் தீரும்.

---

‡இதன் மருந்துகளை நமது அநுபோகவைத்திய நவநீதத்திற் பார்க்கவும்.

† இது மிக வேகமான மருந்து.

**கொன்றைப் பட்டை** :— பதுமகண்டகவிரணந் தீரும்.

**கான்றைப்பழம்** :— காதுநோய் நீங்கும்.

## கோ

**கோசலம்** :— கோமயம்

**கோடகசாலேயிலே** :—விரணம் நீங்கும்

**கோட்டம்** :— பிரமேகம், மேகக்கட்டி, காமாலே, விசற்பி, வாதம், வாதசுரோணிதம், பாலக்கிரகம், பூதகிரகம், கண்நோய் சிம்மகரோகம், சருவாசிய நோய், கண்டநோய், தலேநோய் மூளேயிரணம், வெங்கலாஞ்சிய விரணம், தாவர நஞ்சுகள் சருவநஞ்சு, கீட்டகவிடம், நட்டவீரிய ஆகியவை நீங்கும், சுகப்பிரசூதியாகும்.

**கோதும்பை** :— நட்டவீரியம் நீங்கும்.

**கோதும்பை சக்களத்தி** :—அதித்தூலம், நட்டவீரியம் நீங்கும்.

**கோமயம்** ;—மூலம், கண்டநோய், சிலேபதவிரணம், உதரவரதன் மகோதரம், பாண்டு, சோகை அற்புதவிரணம், சருவாசிய நோய் நீங்கும்.

**கோரைக் கந்தம்** ;—(கோரைக் கிழங்கு)

**கோரைக் கிழங்கு** :—அல்குல்நோய், பிரமேகம், சயம், விசற்பி, கீட்டகவிடம் நீங்கும்.

**கோரோசனம்** : — உன்மாதம் நீங்கும்.

**கோவினீர்** : (கோசலம்) இதனேக் கோமயம் என்பர்.

**கோவை** (இலே) — பித்தநோய் நீங்கும்.

**கோவைக்கிழங்கு** : — பித்தநோய், பிரமேகம், நுண்புழு நோய், அல்குல் நோய் தீரும்.

**கோழியெச்சம்** : அரைகடிவிடம் நீங்கும்.

## ச

**சக்கரவர்த்தியிலே** : — விசற்பி தீரும்

**சங்கங்குப்பி** : நரை; திரை, முதுமை, நீங்கும்.

**சங்கம்வேர்** : — சோகை நீங்கும்.

**சங்கு** : — கண்ணேய் தீரும்.

**சங்கு பற்பம்** : — மூளேயிரணம் நீங்கும்.

**சடச்சி :** — குட்டம் நீங்கும்.

**சடாமாஞ்சில் :** — உபசிம்மக விரணம், சயநோய், சிலந்திப்பூச்சி விரணம் நீங்கும்,

**சடைக்கஞ்சா :** அதிசாரம், மந்தாக்கினி நீங்கும்.

**சதகுப்பை :** — வாதம், காதுநோய், தலை நோய் தீரும்.

**சதாவரி :** (தண்ணீர்முட்டான்).

† **சதுரக்கள்ளி :** — உதரவரதன், குன்மம், வாதம், காதுநோய், விரணம் உபசிம்ம விரணம் நீங்கும்.

**சத்திச்சாரம் :** — வாதசூலை, கிராணி, மந்தாக்கினி, குன்மம், மகோதரம் தீரும்.

**சத்திரம் பண்ணல் :** — குணக்கநோய் தீரும்.

**சந்தனத் தண்ணீர் :** — விதாகநோய் தீரும்

**சந்தனம் :** — வாந்திநோய், பித்தநோய், அனற்பட்ட விரணம், சிலந்திப்பூச்சிவிரணம், நட்டவீரியம், மூத்திரக்கிரிச்சரம், சோமரோகம், காமாலை, விசற்பி, சீதபித்தம், குட்டங், கிருமிநோய் உன்மத்தம், சருவாசியம், கண்டரோகம், தலை நோய் வெங்கலாஞ்சியவிரணம், தாவரநஞ்சு, கீட்டகநஞ்சு ஆகியவை நீங்கும்.

**சம்பு :** — (நாவலைப் பார்க்க).

**சரளம் (அகில்) :** — வாதம் நீங்கும். (சரளதேவதாரு என்பாரும் உண்டு.)

**சர்க்கரை :** —அரோசகம், வாந்திநோய், மதமூர்ச்சை, மூத்திரகிரிச்சரங், பித்தநோய், சிரோரோகம், யோனிரோகம், நட்டவீரியம் நீங்கும்.

## சா

**சாணப்பால் :** — சிலந்திப்பூச்சி விரணந்தீரும்.

**சாதிக்காய் :** — அதிசாரம்; மந்தாக்கினி, நேத்திரரோகம், சிரோரோகம், வெங்கலாஞ்சியவிரணம், நட்டவீரியம் நீங்கும்.

**சாதித்துளிர்:**— விரணம் நீங்கும்.

**சாதிப்பத்திரி:**— சருவாசிய நோய், வெங்கலாஞ்சிய விரணம், தீரும்.

† இது வேகமான மருந்து பொருள்.

**சாரணை(இலை)** மூலநோய், அசுமரி ரோகம், விப்புருதி குன்மம்

இரத்தகுன்மம், வாதசூலை, குட்டம், வாதம், வந்தியாநோய், தந்தநோய், மூளையிரணம், அற்புத விரணம், தாவரவிடங்கள், சர்வவிடம், எலிவிடம், நரை, திரை, முதுமை நீங்கும், வீரியம் ஓங்கும்.

**சாரணை வேர் :—** உருத்திர நோய், கெர்ப்ப விப்புருதி, சோகை, பவுந்தரநோய், உபசிம்மக விரணம் நீங்கும்.

**சாராயம்:—** மதமூர்ச்சை நீங்கும்.

## சி

**சிகைமயிர்:—**(மயிலிறகு) பா. எண். 55.

**சித்திரமூலச் சாரம் (கொடிவேலிச் சாரம்) :—** குணக்க நோய் தீரும்.

**சித்திரமூலம்:—** (கொடிவேலி)

**சிரட்டை (கொட்டங்கச்சி) :—** முகதூஷக விரணந் தீரும்.

**சிரம்:—** (சீரகம்பார்க்க) (பா. எண் 8)

**சிலாசத்து:—** வாதசுரோணிதம், சிம்மக நோய், நட்டவீரியம் நீங்கும்.

**சிவதை:—**மூலநோய், உதரவரதன், அசுமரி, மகோதரம், சோகை, பாலக்கிரகம், சிலிபத விரணம், கீட்டக விடம் தீரும்.

**சிவனார்கிழங்கு:—** சுகப் பிரசூதியாகும், மூளையிரணம், சிலிபத விரணம், உபசிம்மக விரணம், நரை, திரை, முதுமை நீங்கும்.

**சிவனார்மூலம்:—** அற்புத விரணம், தேள் நஞ்சு தீரும்.

**வன்னிருமாலியம்:—** பூதகிரகம், சருவநஞ்சு தீரும்.

**சிறியதும்மட்டி:—** (ஆற்றுத்தும்மட்டி அல்லது சிறுதும்மட்டி)

**சிறியமூலம்:—** (சிறுமூலம்).

**சிறுகாஞ்சொறி;—** மதமூர்ச்சை, அதிசாரம் மந்தாக்கினி, சத்திய விரணம் தீரும்.

**சிறுகொம்மட்டி:—** (சிறுதும்மட்டி)

**சிறுகீரை:—**மூத்திரக் கிரிச்சரம், காமாலை, பித்தநோய், உன்மத்தம், கண்நோய், கண்டநோய், தாவரநோய்கள், சருவநஞ்சு, கீட்டகவிடம், எலிவிடம், நரை, திரை, முதுமை நீங்கும் வீரியம் உண்டாகும்.

**சிறுகீரைவேர்:**— விரணம் தீரும்.

**சிறுசாதியிலை:**— சருவாசிய நோய் தீரும்.

**சிறுதந்திச்செடி:**— மூலையிரணம் நீங்கும்.

**சிறுதும்மட்டி:**— இரத்தமூலம், குட்டம், உபசிம்மக விரணம், குன்மம், சர்வவிடம் தீரும்.

**சிறுநாணல்** —மூத்திரக் கிரிச்சரம், பித்தநோய் தீரும்.

**சிறுநெருஞ்சிவித்து:**— பிரமேகம் தீரும்.

**சிறுநொச்சில்:**— சருவநஞ்சு தீரும்.

**சிறுபயறு:**— காமாலை (மஞ்சள்நோய்) தீரும்.

**சிறுபயற்றுநீர்:**— பிரமேகம் தீரும்.

**சிறுபூளை:**— அசுமரி, நரை, திரை, முதுமை நீங்கும்.

**சிறுமல்லி:**— குன்மம், நரை, திரை, முதுமை நீங்கும்.

**சிறுமுட்டி (வேர்)** — வாதம், உருத்திர நோய், வாதசுரோனிதம் பாலக்கிரகம் கண்நோய், சிம்மகநோய், வந்தியா (மலட்டுநோய்) தீரும்.

**சிறுமூலம்** :— அரோசிகம், மலட்டுநோய், கண்நோய், நரை, திரை முதுமை, கிராணி, மந்தாக்கினி, ஆவரண பைத்தியம் தீரும்

**சிறுவழுதலை வேர்:**—குன்மம், இரத்தகுன்மம், சக்காரற்புத விரணந் தீரும்.

**சிற்றுமணக்கெண்ணெய்:**—வாதம், தீரும்.

**சிற்று முட்டி** :— (சிறுமுட்டி).

## சீ

**சீதனம்பழம்** :— அல்குல் நோய் நீங்கும்.

**சீதளை** :— தேள் நஞ்சு, நீங்கும்.

**சீதை(செங்கழுநீர்):**—பித்தநோய் நீங்கும், வீரியம் ஓங்கும்.

**சீந்தியிலை:** —சீதபித்தம், சிலிபதவிரணம், நீங்கும்.

**சீந்தில் (கொடி)** சயநோய், விதாகநோய், மூத்திரக் கிரிச்சரம், பிரமேகம், குன்மம், விசற்பி; பித்தநோய், வாதசுரோணிதம், ஆவரணபைத்தியம், தலைநோய் மூலையிரணம், வன்மீகருத் தகுதம், தாவரநஞ்சுகள், சருவநஞ்சு, எலிநஞ்சு, நரை, திரை, முதுமைதீரும், நட்டவீரியம், நீங்கும் சீந்திற்சத்து, (சீந்திற்சர்க் கரை) சோமநோய் தீரும்.

**சீரகம் :—** சுவையின்மை, கக்கல்நோய், மிகுகழிச்சல், பசியின்மை, செரியாக்கழிச்சல், கருப்பையில்கட்டி, குன்மம், காமாலை, மூக்கு நோய், நாக்கு நோய், முகநோய், வெங்கலாஞ்சிய விரணம், பூச்சி புழுக்களின் நஞ்சு, குரற்கம்மல் தீரும்.

**சீலைமண் :—**எலும்புநோய் தீரும்.

**சீனம் (படிகாரம்) :** — கண்நோய் தீரும்.

**சீனி :-** எரிச்சல், மனநோய், பிரமேகம், மிகுமூத்திரம், கண்நோய், பூச்சிபுழுக்களின் நஞ்சு, நரை, திரை, முதுமை தீரும். வீரியம் ஓங்கும்.

சு

**சுக்கு :—** குரற்கம்மல், கக்கல்நோய், மாரடைப்புநோய், எருவாய் நோய், மிகுகழிச்சல், மஞ்சள்நோய், அறிவுமயக்கப்பைத்தியம், மூக்குநோய், பல்நோய், நாக்குநோய், கண்டநோய், முழங் கால்வாதம், உண்ணாக்குப்புண், தாவரநஞ்சுகள், நரை, திரை, முதுமை, விந்திழப்பு தீரும்.

**சுக்கு, மிளகு, திப்பிலி இவைகளால் கலிக்கமிடல் :** — வாந்திபேதி தீரும்.

**சுட்டசுண்ணாம்பு :** — கலப்புநஞ்சு தீரும்.

**சுட்ட புளி :** — ஆமைக்கட்டி, இரணம் தீரும்.

**சுட்டிகையிடல் :** — மகளிர் திடீர் மயக்கம் தீரும்.

**சுண்ணப் பழங்காரை நீர் :** — இரணம் நீக்கும்.

**சுத்தலோகப் பொடி :** — சோகை நீக்கும்.

**சுரோதாஞ்சனம் :** — கண்ணோய் தீரும்.

சூ

**சூதம் :** — (இரசத்தைப் பார்க்கவும்).

**சூரியகாந்திச் செடி :** — சுகக்கருவுயிர்ப்பாகும், இரணம் தீரும்.

செ

**செங்கரும்பு :** — காங்கைநோய் தீரும்.

**செங்கழுநீர் :** — அகப்புறகொப்புளங்கள் (விசற்பி) தீரும்

**செங்குன்றி :** — எலிக்கடிநஞ்சு தீரும்.

**செஞ்சந்தனம் :** — விசற்பி, சிலந்திப்பூச்சி இரணம் தீரும்.

**செங்நெய்தல் :** — விந்திழப்பு தீரும்.

**செந்நெருஞ்சில் :** — அடிபட்டகாயம், அனந்துநஞ்சு தீரும்.

**செம்பருத்தி (இலை) :** — வெண்குட்டம் நீங்கும்.

**செம்பருத்திப்பூ :** — அனற்பட்ட புண் நீங்கும்.

* **செம்பு :** — கண்ணோய் தீரும்.

**செம்பைப்பட்டை :** — தாவரநஞ்சு தீரும்.

**செம்மறியாட்டுப்பால் :** — கண்டமாலை இரணம் நீங்கும்.

**செருப்படி :** — (செருப்படை)

**செருப்படை :** — நுண்புழுநோய், பூதக்கிரகம், வைசூரி, குட்டம், கண்ணோய். கண்டமாலை இரணம், நகம், பல் நஞ்சு; நரை, திரை, முதுமை நீங்கும்.

**செவியம் :** — (செவ்வியம்)

**செவ்வகத்தி விதை :** — வெண்குட்டந் தீரும்.

**செவ்வியம்:**—வாதசூலை, மூக்குநோய், குரற்கம்மல், சுவையின்மை, செரியாக்கழிச்சல், பசியின்மை, குன்மம், ஆவரண வெறிநோய் கண்டநோய், தாவரநஞ்சு நீங்கும்.

**செவ்வீராஞ்சனம் :** — கண்நோய் தீரும்.

## சே

**சேங்கொட்டை :**— வெண்குட்டம், நுண்புழுநோய், எருவாய்நோய், வெட்டை, குட்டம், மூளை அகப்புண், குருதிக்கட்டி, நரை, திரை, முதுமை நீங்கும்.

**சேராங்கொட்டை :** — (சேங்கொட்டையைப் பார்க்க.)

## த

**தகரம் :** —(கிரந்தி தகரம்)

**தகரவிதை :**— குட்டம், நுண்புழுநோய், புழுப்பூச்சிநஞ்சு, தேள் நஞ்சு, நரை, திரை, முதுமை நீங்கும்.

**தக்கோலம்:** — செரியாக்கழிச்சல், பசியின்மை, முகநோய்தீரும்.

---

* செம்பு—தாமிரம்; இதன் கூட்டு முறைகள் நமது அனுபோக வைத்திய நவநீதத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன.

† **தசமூலம் :** — தமரகநோய், சோகை, வாதம், வாதசுரோணிதம் தீரும்.

**தண்ணீர்விட்டான்:**— மஞ்சள்நோய், காங்கைநோய், நீர்ச்சுருக்கு, கல்லடைப்பு, வெள்ளைப்பாடு, மலட்டுநோய், உன்மத்தம், மனநோய் நீங்கும்.

**தந்திசெடி :** — எருவாய்க்கறும்புற்று தீரும்.

**தலையழுந்தச்சொரிதல் :**—மகளிர் திடீர் மயக்கம் தீரும்.

**தலையோடு (மண்டைஓடு) ;**—கண்ணோய் தீரும்.

**தவசிமுருங்கை:**— அகக்கட்டி (விப்புருதி) நீங்கும்,

**தழுதாழை:**—குன்மம், வாதம், மூக்குநோய் நீங்கும்.

## தா

**தானி :**—(தான்றியைப்பார்க்க)

**தாமரைக்கந்தம்:**—தலைநோய், மதமூர்ச்சை, வெள்ளைப்பாடு, அகப்புற கொப்புளங்கள் (விசற்பி) நீங்கும்.

**தாமரைப்பூ:**—பித்தம், குருதிஎருவாய்முளை, விந்திழப்பு நீங்கும்.

**தாமரவளையம் :**— எருவாய்நோய் தீரும்.

**தாமரைவித்து :**—வெட்டை தீரும்.

**தாயைக்கொன்றுர்பூண்டு :**— அனைத்துநஞ்சும் தீரும்.

**தாரம் :**— அரிதாரம்.

**தாழமுளை :** — தாழைவிழுது.

**தாழி :** — (பா. எண். : 50) மலட்டுநோய், வெண்குட்டம், எலிநஞ்சு, மூளை அகப்புண் தீரும்.

**தாழைவிழுதுச் சாறு :** — வாதசுரோணிதம், இரணம் தீரும்.

**தாளகம :** — அரிதாரம்.

**தாளிசப்பத்திரி :** — செரியாமை, கக்கல்நோய், சுகக்கருவுயிர்ப்பு உண்டாம். மூக்குநோய், கழுத்துநோய்கள் தீரும்.

**தாளிப்பனங்காய்த் தண்டு :** — அனைத்துநஞ்சும் தீரும்.

**தாளீசம் :** — (தாளிசப்பத்திரி)

---

† வாகைவேர், முல்லைவேர், பாதிரிவேர், நெருஞ்சிவேர், பேராமுட்டிவேர், வில்வவேர், சிற்றுமுட்டிவேர், சிறுவழுதளைவேர்' கண்டங்கத்தரிவேர், குமிழ்வேர், (வேறுவகையாக - முதற்பாட்டின் அ- சொ. ரையில் கூறியபடியும் சில நூல்கள் கூறும்.)

**தான்றிக்காய் :** — எருவாய்நோய், குன்மம், நீராம்பல், பாண்டு, உன்மத்தம், மூக்குநோய், உதட்டுநோய், இரணம், அகக்கட்டி, வெண்குட்டம், மதமூர்ச்சை, ஆண்குறிபுண், சிலந்திபூச்சி இரணந் தீரும்.

## தி

**தித்திப்புத் திரவியம் :** —கருப்பிணி நோய்.

**திப்பிலி (அரிசித்திப்பிலி) :** — குரற்கம்மல், மதமூர்ச்சை, எருவாய் நோய், மிகுகழிச்சல், பசியின்மை, வாதசூலை, பெருவயிறு, நுண்புழுநோய், ஆவரணவெறிநோய், மூக்குநோய், நாக்கு நோய், கண்டநோய், பவுத்திரப்புண், வெங்கலாஞ்சியஇரணம், தாவரநஞ்சுகள், விந்திழப்பு நீங்கும்

**திப்பிலிமூலம் :** — குரற்கம்மல், வாதசூலை, மூக்குநோய், கண்ட நோய் தீரும்.

* **திரிகடுகு :** — சுவையின்மை, சன்ஞசநோய், செரியாக்கழிச்சல், பசியின்மை, வாதசூலை, பாண்டு, வலிப்புநோய், கண்நோய், காதுநோய், முகநோய், தலைநோய், அடிபட்டகாயம், அனைத்துநஞ்சு, சிறுநஞ்சு, தேள்நஞ்சு தீரும்.

† **திரிசாதீகம் (திரிசாதம்) :** — சுவையின்மை தீரும்.

‡ **திரிபலை :** — வெட்டை, குட்டம், வெறிநோய், கண்நோய், முகநோய், தலைநோய், பவுத்திரப்புண், அனைத்துநஞ்சு, நரை, திரை, முதுமை தீரும்.

**திரிபுரத்தான் :** — குருதிஎருவாய்முளை, குட்டம் நீங்கும்.

* **தில்லை :** — மகோதரம், அகட்டுவாயு, மிகுகழிச்சல், பசியின்மை தீரும்.

## து

**துத்தநாகம் :** — குருதிஎருவாய்முளை, கண்ணோய் தீரும்.

**துத்தம் :** — கண்ணோய், ஆண்குறிபுண் தீரும்.

**துத்தி விதை :** — வெட்டை தீரும்.

**தும்பி, தேனீயிவற்றை கடிக்கச்செய்தல் :** — சன்ஞசநோய் தீரும்.

**தும்பிலிப்பழம் :** — அனைத்துநஞ்சும், விந்திழப்பும் நீங்கும்.

---

* சுக்கு, மிளகு, திப்பிலி

† இலவங்கப்பத்திரிப்பட்டை, இலவங்கப்பட்டை, நாகேசுரம்.

‡ கடுக்காய், தான்றிக்காய், நெல்லிமுள்ளி.

* நச்சுத்தன்மையுள்ளது.

**துராய் :—** நீர்சுருக்கு, கழுத்து நோய்கள், சுவையின்மை, வைசூரி, அழல்நோய் தீரும்.

**துருசு :—** கண்ணோய், முகநோய், இரணம், மூளைஅகப்புண், ஆண் குறிபுண் தீரும்.

**துவரையிலை :—** பல்நோய் தீரும்.

**துழாய் :—** (துளசியைப் பார்க்க)

**துளசி :—** விசற்பி, காதுநோய், மூக்குநோய், நாக்குநோய், முகம் நோய், அனைத்துநஞ்சு, வாதசுரோணிதந் தீரும்.

## தூ

**தூதுவளை :—** அனைத்துநஞ்சு, எலிநஞ்சு, விந்து இழப்பு, சுவையின்மை தீரும்

## தெ

**தெற்பை :—** நீர்ச்சுருக்கு, பித்தநோய், நகம், பல் நஞ்சு தீரும்.

**தென்னம்பாளை :—** நுண்புழுநோய் தீரும்.

**தென்னம்பூ :—** மிகுகழிச்சல், பசியின்மை, வெட்டை, விசற்பி தீரும்.

## தே

**தேங்காயெண்ணெய் :—** வெட்டை, சேற்றுப்புண், அல்குல்நோய் தீரும்.

**தேங்காய்ப்பால் :—** அழல்நோய், விந்திழப்பு தீரும்.

**தேசிச்சாறு .—** (எலுமிச்சம் பழச்சாறு)

**தேவதாரம் :—** வாதசுரோணிதம், மேகக்கட்டி, தமரகநோய், குன்மம், சோகை, வாதம், பாலக்கிரகம், மூக்குநோய், உதட்டு நோய், கழுத்துநோய், யானைக்கால்புண், எலிநஞ்சு, நரை, திரை, முதுமை நீங்கும்.

**தேவதாரியின் சக்கை :—** (தேவதாரி) (ப. எண்: 43.)

**தேள்கடை :—** (தேள்கொடுக்கு)

**தேள்கொடுக்கு :—** அல்குல்நோய், தேள் நஞ்சு தீரும்.

**தேற்றான்கொட்டை —** நீர்சுருக்கு, வெள்ளைப்பாடு, வெட்டை, கண்ணோய் தீரும்.

**தேன் :—** உடல்பருத்தல், என்புருக்கிநோய், குரற்கம்மல், சுக்கல் நோய், காங்கைநோய், மிகுகழிச்சல், பசியின்மை, வெட்டை,

கண்ணோய், உதட்டுநோய், நாக்குநோய், மூக்குநோய், கண்ட நோய், இரணம், அடிப்பட்டகாயம், பழமகண்டகஇரணம், வெங்கலாஞ்சியவிரணம், ஆண்குறிபுண், தாவரநஞ்சு, நரை, திரை, முதுமை, விந்திழப்பு, பாண்டு, அனைத்துநஞ்சு தீரும்.

தோ

**தோடை** : — (ஆடாதோடை)

ந

**நகங்களில் ஊசியேற்றல்** : — மகளிர்திடீர்மயக்கம் தீரும்.

**நசியம் பண்ணல்** : — மகளிர்திடீர்மயக்கம் தீரும்.

**நண்டுவளைமண்** : — ஆண்குறிப்புண் தீரும்.

**நந்தியாவட்டம்** : — கண்ணோய், அடிபட்டகாயம் தீரும்.

**நரம்பில் சத்திரம் பண்ணல்** : —எருவாய்க்கறும்புற்று தீரும்.

**நரிப்பித்து** : — மனநோய் தீரும்.

**நவச்சாரம்** : — செரியாக்கழிச்சல், பசியின்மை தீரும்.

**நவரத்தினம்** : — கண்ணோய் தீரும்.

**நன்னாரி** : — தனவிப்புருதி, காங்கைநோய், மகமூர்ச்சை, விசற்பி, புழுப்பூச்சி நஞ்சு, சிலந்திப்பூச்சிஇரணம், விந்திழப்பு தீரும்.

நா

**நாகச் செந்தூரம்** : — வெட்டை தீரும்,

**நாகணம்** : — மேகக்கட்டி, பெறுவயிறு, சோகை, மலட்டுநோய், கண்ணோய், முகப்பரு தீரும்.

**நாகத்துளிர்** : — நாவற்றுளிர்.

**நாகப்பூ** : — நாவற்பூ.

**நாகமல்லிகை வேர்** : — என்புருக்கிநோய் தீரும்.

**நாகம்** : — மூளை அகப்புண் தீரும்.

**நாகேசுரம்** : — சிறுநஞ்சு, கண்ணோய், முகநோய், விந்திழப்பு, நீங்கும்.

**நாணல்** :— வெங்கலாஞ்சியவிரணம், வாதசுரோணிதம், எருவாய்க் கறும்புற்று, அனைத்துநஞ்சு, நகம் பல் நஞ்சு தீரும்.

**நாபி** : — தேள்நஞ்சு தீரும்.

**நாயுருவி** : —கருப்பைவிப்புருதி, குருதிஎருவாய்மூளை, மூக்குநோய், அறற்பட்ட புண், புரையோடியபுண், சிலந்திப்பூச்சி நஞ்சு தீரும்.

**நாரத்தம்பழம் :** —குன்மம் தீரும்.

**நாவல் :** — குட்டம், பாலக்கிரகம், முகநோய், மதமூர்ச்சை, பித்தம் தீரும்.

**நாவற்பட்டை :** — விப்புருதி, மிகுகழிச்சல், பசியின்மை, வெட்டை, தீரும்.

**நாவற்பூ :** — கலைநோய், தேள்நஞ்சு தீரும்

**நாவற்றுளிர் :** — கக்கல், மிகுகழிச்சல், பசியின்மை தீரும்.

## நி

**நிம்பம் :** — வேம்பு.

**நிம்பிலை :**— வேப்பிலை.

**நிலக்கடம்பு :**— பூதக்கிரகந் தீரும்.

**நிலக்குமிழ் :** — அழல்நோய், வாதசுரோணிதம், விந்திழப்பு, கொப்புளம் தீரும்.

**நிலக்குமிழ் வேர் :** — சயநோய், உடலெரிவுநோய், இரணந் தீரும்.

**நிலக்குரா :** நரை, திரை, முதுமை தீரும்

**நிலப்பனை :** — அனைத்துநஞ்சு, குட்டம், நரை, திரை, முதுமை, விந்திழப்பு நீங்கும்.

**நிலப்பனைக் கந்தம் (நிலப்பனைக் கிழங்கு) :** — வெள்ளைப்பாடு, வெட்டை நரை, திரை, முதுமை தீரும்.

**நிலப்பூசணிக்கிழங்கு :** — விந்திழப்பு, மூளையின்அகப்புண் தீரும்.

**நிலவேம்பு :** — உடலெரிவுநோய், அடிப்பட்டகாயம் தீரும்.

**நிலையாவரை (நிலாவாரை என்பதும் இதுவே) :**— பிரமேகந்தீரும்.

## நீ

**நீர்இலந்தைக் கொட்டை :**— இரணம் நீங்கும்.

**நீரில் உப்பைக் கரைத்துக் குடித்தல் :** —கக்கற்கழிச்சல் நீங்கும்.

**நீருள்ளி :** — அடிப்பட்ட காயம், குருதிஎருவாய்முளை, காதுநோய், அனற்பட்டபுண், அனைத்துநஞ்சு தீரும்.

**நீருள்ளிச்சாறு :** — உன்மத்தந் தீரும்.

**நீர் :** — கண்ணோய் தீரும்.

**நீர்ப்பூலா :** —மிகுகழிச்சல், பசியின்மை, கல்லடைப்பு நீங்கும்.

**நீர்முட்டான்** : — என்புருக்கிநோய், விசற்பி, நரை, திரை, முதுமை, அதிக்குருகரம் நீங்கும்.

**நீர்முள்ளி** : — நீர்சுறுக்கு, சோகை, வாதசுரோணிதம், எலிநஞ்சு இரணம் தீரும்.

**நீர்முள்ளி வித்து** : — மிகுகழிச்சல், பசியின்மை, வெட்டை, விந்திழப்பு நீங்கும்.

**நீலிவேர்** : — (அவுரிவேரைப் பார்க்கவும்.)

## நெ

**நெய்** : — தமரகநோய், மதமூர்ச்சை, மிகுகழிச்சல், பசியின்மை, மஞ்சள்நோய், வைசூரி, சீதப்பித்தநோய், மனநோய், கண்ணோய், இரணம், அடிபட்டகாயம், அனற்பட்டபுண், ஆண்குறிப்புண், தாவரநஞ்சு தீரும். சூல்மகளிர்க்குச் சுகமுண்டாம்.

**நெய்ச்சட்டி** :— அனற்பட்டபுண் தீரும்.

**நெய்தல்** : — கண்ணோய் தீரும்.

**நெய்தல் (சிவப்பு)** : — அழல்நோய் தீரும்.

**நெய்தற் கிழங்கு** : — அகப்புற கொப்புளங்கள் (விசற்பி) தீரும்.

**நெருஞ்சில்** : — நீர்சுறுக்கு, நரை, திரை, முதுமை, விந்திழப்பு தீரும்.

**நெருஞ்சில் (சிவப்பு)** : வாதசுரோணிதந் தீரும்.

**நெருஞ்சில் வேர்** : — வெள்ளைப்பாடு, குன்மம் தீரும்.

**நெருஞ்சிற் காய்** : — அல்குல்நோய் தீரும்.

**நெல்** : — விந்திழப்பு தீரும்.

**நெல்லி** : — அகக்கட்டி, உடலெரிவுநோய், மதமூர்ச்சை, நீர்ச்சுறுக்கு, குன்மம், பாண்டு, மஞ்சள்நோய், வைசூரி, வெண்குட்டம், அழல்நோய், மூக்குநோய், உதட்டுநோய், இரணம், விந்திழப்பு தீரும்.

**நெல்லிக்காய்** : — எருவாய்நோய், மகோதரம் தீரும்.

**நெல்லிமுத்து** : — உன்மத்தம் நீங்கும்.

**நெற்பொரி** : – உடலெரிவு நோய், மதமூர்ச்சை, மிகுகழிச்சல், பசியின்மை நீங்கும்.

**நே**

‡ நேர்வாளம் : — எருவாய்நோய், மகோதரம், சோகை தீரும்.

**நொ**

நொச்சில் : — குன்மநோய், வாதசூலை, நுண்புழுநோய், வாதம், காதுநோய், மூக்குநோய், உதட்டுநோய், நாக்குநோய், எலிக் கடிப்புண் தீரும்

நொய்யரிசி : — இரணந் தீரும்.

**ப**

**பங்கம்பாளை :** நரை, திரை, முதுமை தீரும்.

**பங்கம்பாளையிலை :** — அரைக்கடி நஞ்சு தீரும்.

**பங்கம் பாளையின் சாம்பல் :** — வெங்கலாஞ்சிய இரணந் தீரும்.

**பசு நெய் :** — என்புருக்கி, நீர்ச்சுருக்கு, தனவிப்புருதி, விசற்பி, நாக்குநோய், என்புமுறிவுநோய், அல்குல்நோய், அனைத்து நஞ்சு தீரும்.

**பசு முதலியவைகளின் சாணம் :** — தேள் நஞ்சு நீங்கும்.

**பசும் பயறு :** —அழல்நோய் நீங்கும்.

**பசுவின் குளம்புசுட்டகரி :**—உள் நாக்குப்புண் தீரும்.

**பசுவின் கொம்பு:**— கண்ணோய் நீங்கும்.

**பசுவின் கொம்பு சுட்டகரி:**— உள்நாக்குப்புண் தீரும்.

**பசுவின் தயிர் :** —மிகுகழிச்சல் நீங்கும்.

**பசுவின் பல் :** — கண்ணோய் நீங்கும்.

**பசுவின் பால் :**—நீர்ச்சுருக்கு, குன்மம், மகோதரம், மலட்டுநோய், அல்குல்நோய் தீரும். சூல்மகளிர்க்குச் சுகமுண்டாம்.

**பசுவின் பித்து :**— மனநோய் தீரும்.

**பசுவின் வால் மயிர் :**— குழந்தை நோய் நீங்கும்.

**பசுவெண்ணெய்:** —என்புருக்கிநோய், குருதிஎருவாய்முளை நீங்கும்

**பச்சரிசிக் கழுநீர் :** — மதமூர்ச்சை, உன்மத்தம் நீங்கும்.

**பச்சைக் கற்பூரம் :** — உடலெரிவு, மதமூர்ச்சை, கண்ணோய், முகநோய் நீங்கும்.

---

‡ இது நச்சுத்தன்மையுடையது.

**பச்சைப்பயற்று நீர் :** — உடலெரிவு நீங்கும்.

**பச்சைப்பாக்கு :** —கல்லடைப்பு தீரும்.

**பஞ்சகம் :** — அனைத்துநஞ்சு, நகம், பல் நஞ்சு நீங்கும்.

* **பஞ்சகவ்வியம் :** — மனநோய் தீரும்.

† **பஞ்சகோலம் :** — சோகை, அல்குல்நோய் தீரும்.

‡ **பஞ்சலவணம் :**—தமரகநோய், குன்மம், வாதசூலை, மகோதரம், குருதிக்கட்டி தீரும்.

**பட்சிகளிறகு :** — மனநோய் நீங்கும்.

**பட்சிகளின்எச்சம் :** — தேள்நஞ்சு தீரும்.

**பட்சி மாமிசங்கள் :** — சூல்மகளிக்குச் சுகமுண்டாம்.

**பண்ணை :** —குரற்கம்மல் தீரும்.

**பரட்டை :** — நுண்புழுநோய், புரையோடியபுண் நீங்கும்.

**பருங்கிரந்தி :** — வளிநோய் நீங்கும்.

**பருத்தியிலை :** — இரணம் நீங்கும்.

**பருத்திப்பிஞ்சு :** — காதுநோய் நீங்கும்.

**பருத்திவித்து :**— வெட்டை, வாதம், பாலக்கிரகம் தீரும்.

**பலகறை:**— கண்நோய் தீரும்.

**பலகறைப்பற்பம்:**— காதுநோய் தீரும்.

**பலவகை மிருகங்களின் லத்தி:**— தேள் நஞ்சு நீங்கும்.

**பலாசம்பட்டை:**— வெட்டை தீரும்.

**பலாசம்பிசின்:**— வெட்டை தீரும்.

**பழங்காசுக்கட்டி:**— இரணம் தீரும்.

**பழம்புளி :**— கண்ணோய் தீரும்.

**பழையவெல்லம் :**— இரணம் தீரும்.

**பழுபாகல் :**— எருவாய்நோய், அனைத்துநஞ்சு நீங்கும்.

**பழைய காடி :** — சேற்றுப்புண் நீங்கும்.

---

* பசுவின்பால், தயிர், நெய், கோமியம், சாணம்.

† சுக்கு, திப்பிலி, திப்பிலிமூலம், செவ்வியம் சித்திரமூலம்

‡ வளையலுப்பு, கல்லுப்பு, மரவுப்பு, அமுரியுப்பு, அட்டுப்பு.

பளிங்கு :— கண்ணோய் தீரும்.

பற்படாகம்:—செரியாக்கழிச்சல், பசியின்மை, உடலெரிவு, கருப்பை அகக்கட்டி நீங்கும்.

பனம்பூச் சாம்பல் :— குன்மம், மகோதரம் நீங்கும்.

பனைக்கந்தம(பனங்கிழங்கு):—வெள்ளைப்பாடு தீரும்.

பனை மட்டை :— கண்ணோய் தீரும்.

பன்றிக்கொம்பு, பல் :— கண்ணோய் தீரும்

## பா

பாகல் :—நுண்புழுநோய் தீரும்.

பாகல் சாறு :— அனைத்துநஞ்சு தீரும்.

பாண்டப்புத்தோடு:— ஆண்குறிபுண் நீங்கும்.

பாதிரிவேர் :— குன்மம், மகோதரம் தீரும்.

பாம்பின் தோல் :— சுகக்கருவுயிர்ப்பு (பிரசவம்) உண்டாகும்.

பாலை : —என்புருக்கிநோய், கல்லடைப்புநோய், வெட்டை, அழல் நோய், ஆவரண வெறிநோய், கண்ணோய், முகநோய், அனைத்துநஞ்சு, விந்திழப்பு, அதிக்குருகரம் நீங்கும்.

பாலைத்துளிர் :— வெங்கலாஞ்சிய இரணம் நீங்கும்.

பாலைப்பட்டை : — மேகக்கட்டி, விசற்பி, நாக்குநோய், இரணம், அனறப்பட்ட இரணம், வெங்கலாஞ்சிய இரணம், புழுப்பூச்சி நஞ்சு, சிலந்திப்பூச்சி இரணம், மிகுகழிச்சல், பசியின்மை நீங்கும்.

பாலையிலை : — அனற்பட்ட இரணம் நீங்கும்,

பால் : — கக்கல்நோய், உடலெரிவு, மதமூர்ச்சை, மஞ்சள்நோய், அழல்நோய், இரணம், அடிப்பட்ட காயம், அனற்பட்டபுண் வெங்கலாஞ்சிய இரணம், மூளைஅகப் புண், விந்து இழப்பு, மிகுகழிச்சல், பசியின்மை தீரும்.

பாவட்டை :— குருதிஎருவாய்முளை, கருப்பை அகக்கட்டி, குட்டம், உள்நாக்குப்புண், பவுத்திரப்புண், எலிநஞ்சு நீங்கும்.

பாவட்டையிலை : — இரணந் தீரும்.

## பி

பிச்சிப்பூ: — அழல்நோய், வெங்கலாஞ்சியஇரணம் நீங்கும்.

‡ **பித்தளை** : — கண்ணோய் தீரும்.

**பிரண்டை** :—எருவாய்நோய், கருப்பை அகக்கட்டி, அனைத்துநஞ்சு நீங்கும்.

**பிரண்டைவேர்** : — நுண்புழுநோய் நீங்கும்.

**பிரமி** : — சோகை, மனநோய், கண்ணோய், நரை, திரை, முதுமை தீரும்.

**பிராய்** : — விந்துஇழப்பு நீங்கும்.

**பிராயன்பட்டை** : — நகம், பல்நஞ்சு நீங்கும்.

## பீ

**பீதரோகணி** : — கண்ணோய் தீரும்.

**பீர்க்கு** :— எலிநஞ்சு தீரும்.

## பு

**புங்கஞ்சாறு** : —அனைத்துநஞ்சு தீரும்.

**புங்கம்வேர்** := தனவிப்புருதி, இரத்தகுன்மம் நீங்கும்.

**புங்கு** :—செரியாக்கழிச்சல், பசியின்மை, எருவாய்நோய், அகக்கட்டி, குன்மம், குட்டம், வாதம், அழல்நோய், இரணம், மூளை அகப்புண், குருதிக்கட்டி, தேள்நஞ்சு, எலிநஞ்சு நீங்கும்.

**புங்குவித்து** : — மனநோய், கண்ணோய், மூக்குநோய் தீரும்.

**புசபத்திரம்** : — பாலக்கிரகம் தீரும். (அம்புசமென்பதின் மூதற் குறை)

**புடல்** :— மஞ்சள்நோய், குட்டம் தீரும்.

**புட்பாஞ்சனம்**: —கண்ணோய் தீரும்.

**புதுப்பாண்டத்திஞேடு**: — என்புமுறிவுநோய், கக்கல் தீரும்.

**புத்தரசு விதை** : — கண்ணோய், அனைத்துநஞ்சு தீரும்

**புரசம் பிசின்** : — தேள்நஞ்சு தீரும்.

**புரசம் வித்து** : — நுண்புழுநோய் தீரும்.

**புரசு** : — வாதசூலை, தேள்நஞ்சு தீரும்.

**புரசம் பட்டை** : — பாலக்கிரகந் தீரும்.

---

‡ இதன் முறைகள் நமது அனுபோக வைத்திய நவநீதத்திற் சொல்லப்பட்டிருக்கிறது.

புளிச்சதை: — உன்மத்தம் நீங்கும்.

புளி :— குன்மம், மகோதரம், இரணம், உள்நாக்குப்புண் தீரும்.

புளிப்பு மாதுளை : — மலட்டுநோய் தீரும்.

புளியந்துளிர் : அனைத்துநஞ்சு நீங்கும்.

புளியம் புறணி : — மிகுகழிச்சல், பசியின்மை தீரும்.

புளியாரை :—செரியாக்கழிச்சல், குன்மம், மகோதரம், மலட்டு நோய், இரணந் தீரும்.

புளி விதைத்தோல் :— என்புமுறிவுநோய் தீரும்.

புளி வித்து : — மிகுகழிச்சல் தீரும்.

புரு வெச்சம் : — தேள் நஞ்சு தீரும்.

புற்று மண் : — எருவாய்க்கரும்புற்று தீரும்.

புனலி : — புரையோடியப்புண் தீரும்.

## பூ

பூசனி : — மூத்திர எரிச்சல், அழல்நோய் தீரும்.

பூசனிக்காய் : — என்புருக்கிநோய், மூர்ச்சை, உன்மத்தம், மன நோய், கொப்புளம் தீரும்.

பூமிசர்க்கரைக் கிழங்கு : அழல்நோய் தீரும்.

பூலா : — மிகுகழிச்சல், பசியின்மை, கண்ணோய், நரை, திரை, முதுமை தீரும்.

பூவரசம் பூ : — வெட்டை தீரும்.

பூவரசு : — அகப்புற கொப்புளங்கள் நீங்கும்.

பூனைப்பித்து : — மனநோய் தீரும்.

பூனையெலும்பு : —பவுத்திரப்புண், எலிநஞ்சு தீரும்.

## பெ

பெருங்காயம் :— செரியாக்கழிச்சல், பசியின்மை, தமரகநோய், மகோதரம், கருப்பை அகக்கட்டி, குன்மம், வாதசூலை, நுண்புழு நோய், வளிநோய், பூதக்கிரகம், பல்நோய், அனைத்துநஞ்சு, சிறுநஞ்சு, அல்குல்நோய், தேள் நஞ்சு, வாதசூலை தீரும்.

பெருங்கிரந்தி : —மேகக்கட்டி தீரும்.

**பெருங்கோரைக் கந்தம்** (பெருங்கோரைக் கிழங்கு) :— தலைநோய் தீரும்.

**பெருஞ் சிவிறி** : —குருதி எருவாய்முளை தீரும்.

**பெருஞ் செங்குன்றி** : — வைசூரி தீரும்.

**பெருநன்னாரி** : அகப்புற கொப்புளங்கள் (விசற்பி) தீரும்.

**பெருநாணல்** : — அழல்நோய் தீரும்.

**பெருந்துளசி** : — சிறுநஞ்சு தீரும்.

**பெருமரப்பட்டை** (ஈசுரமூலி) : — மிகுகழிச்சல், பசியின்மை தீரும்.

**பெருமல்லி** : — குன்மந் தீரும்.

**பெருவாகை** : —குட்டம், அனைத்துநஞ்சு, தேள்நஞ்சு, நகம், பல் நஞ்சு தீரும்.

**பெருவாகையிலை** : — தாவரநஞ்சுகள் தீரும்.

## பே

**பேயத்தி** : — குட்டம், மூளை அகப்புண் தீரும்.

**பேயத்திப்பட்டை** : — வெட்டைதீரும்.

**பேயத்திப்பால்** : — கண்ணோய் தீரும்.

**பேயத்திப்புல்லுருவி** : — மலட்டுநோய் தீரும்.

**பேய்ச்சுரை** : — அனைத்துநஞ்சு தீரும்;

**பேய்ப்பீர்க்கு** :—குருதிஎருவாய்முளை, சோகை, குட்டம், தாவரநஞ்சுகள், அனைத்துநஞ்சு, எலிநஞ்சு தீரும்.

**பேய்ப்பீர்க்கு வித்து** :—உள்நாக்குப்புண் தீரும்.

**பேய்ப்புடல்** : — உடலெரிவு, அகக்கட்டி, வைசூரி, அழல்நோய், நாக்குநோய், சேற்றுப்புண், தாவரநஞ்சுகள் தீரும்.

**பேய்மிரட்டி** : — பூதக்கிரகந் தீரும்.

**பேராமுட்டி** : — பிரமேகம், வளிநோய் தீரும்.

**பேராமுட்டி சுட்ட பற்பம்** : — கண்ணோய் தீரும்.

**பேரீஞ்சு** : — என்புருக்கிநோய், உடலெரிவு, மதமூர்ச்சை, மிகுகழிச்சல், பசியின்மை, அழல்நோய் தீரும்.

**பேரீந்துப்பழம்** : —விந்து இழப்பு தீரும்.

## பொ

**பொடுதலை** : — நாக்குநோய் தீரும்.

**பொடுதலைக்காய்** : — செரியாக்கழிச்சல், பசியின்மை தீரும்.

**பொட்டிலுப்பு** : — செரியாக்கழிச்சல் தீரும்.

**பொரி** : — மலட்டுநோய் தீரும்.

**பொரிமா** : — மலட்டுநோய், உடலெரிவு தீரும்.

**பொன்** : — கண்ணோய், தாவரநஞ்சுகள், விந்திழப்பு தீரும்.

**பொன்முசுட்டை** : — சிலந்திப்பூச்சிஇரணந் தீரும்.

**பொன்னுங்காணி** : — நீர்ச்சுருக்கு, வெட்டை, மகோதரம், கண்ணோய், அனற்பட்டவிரணம் தீரும்.

**பொன்னுவாரை** : — மதமூர்ச்சை, வெண்குட்டந் தீரும்,

## போ

**போளம்** :— மேகக்கட்டி, என்புமுறிவுநோய் தீரும்.

## ம

**மகிழம்பழம்** : — விந்து இழப்பு தீரும்.

**மகிழம்பூ** : — நீர்ச்சுருக்கு நீங்கும்.

**மகிழம்வித்து** : — பல்நோய், அனைத்துநஞ்சு நீங்கும்,

**மஞ்சட்டி** :—தலைநோய், இரணம், புரையோடியபுண், வெங்கலாஞ்சியஇரணம், சிறுநஞ்சு, எலிநஞ்சு நீங்கும்.

**மஞ்சளிலை** :— அனைத்துநஞ்சு தீரும்.

**மஞ்சள்** : — மேகக்கட்டி, சோகை, வைசூரி, குட்டம், வாதசுரோணிதம், கண்ணோய், காதுநோய்,மூக்குநோய். உதட்டுநோய், பல்நோய், நாக்குநோய், குருதிக்கட்டி, வெங்கலாஞ்சிய இரணம், அல்குல்நோய், தேள்நஞ்சு, எலிநஞ்சு, கலப்புநஞ்சு நரை, திரை, முதுமை நீங்கும்.

**மணலி** : — நீர்ச்சுருக்கு நீங்கும். (இது ஒருவகைக் கீரை.)

**மணித்தக்காளி**: —குரற்கம்மல், குட்டம், நாக்குநோய், அனைத்து நஞ்சு நீங்கும்.

**மணிப்புங்கு** :—அகட்டுவாயு, அகக்கட்டி, வைசூரி, ஆட்டதரநோய் நீங்கும்.

**மணிப்புங்கு வித்து :** —மகோதரம், சோகை, குட்டம் தீரும்.

‡ **மண்டூரம் :** — வெட்டை, பாண்டு தீரும்.

**மதுரம் :** — அதிமதுரம்.

**மத்தம் :** — ஊமத்தை.

**மயிர் :** — அறப்பட்டபுண் தீரும்.

**மயிர்மாணிக்கம் :** — என்புருக்கிநோய் தீரும்.

**மயிலடி :** — மஞ்சள்நோய் தீரும்.

**மயிலடி மரம் :** — குருதிஎருவாய்முளை தீரும்.

**மயிலிறகு :** — குருதிஎருவாய்முளை, பூதக்கிரகம், அடிபட்டகாயம் தீரும்.

**மயிலெச்சம் :** — வெறிஎலிநஞ்சு தீரும்.

**மயூரசிகி (மயிலிறகு) :** — அனைத்துநஞ்சு தீரும்.

**மரமஞ்சள் :** — தமரகநோய், நீர்ச்சுறுக்கு, குட்டம், கண்ணோய், நாக்குநோய், முகநோய், கண்டநோய், இரணம், யானைக்கால் புண், அல்குல்நோய். எலிநஞ்சு விந்திழப்பு நீங்கும்.

**மரல் :** — எருவாய்நோய் தீரும். (பா. எண். 15ல். மரல் என்னும் சொல் கண்டிலது.)

**மருக்காரை:**— குட்டம், காதுநோய், கழுத்துநோய்கள், புரையோடிய புண், அனைத்துநஞ்சு நீங்கும்.

**மருக்காரைக்காய்:**— கண்ணோய் தீரும்.

**மருக்கொழுந்து.**— எலிநஞ்சு தீரும்.

**மருதாணி (மருதோன்றி):**— நரை, திரை, முதுமை தீரும்.

**மருதம்பட்டை:**— வெட்டு, வெண்குட்டம், வெங்கலாஞ்சிய இரணம், பல்நோய் தீரும்.

**மருதாணிப் பட்டை (மருதோன்றி) பட்டை :** — தனவிப்புருதி நீங்கும்.

**மருதாணியிலை (மருதோன்றிலை);**— தனவிப்புருதி தீரும்.

**மருதாரை:**— யானைக்கால்புண் தீரும்.

**மருது:**— என்புமுறிவுநோய் தீரும்.

**மருதோன்றி:**— வளிநோய் தீரும்.

---

‡ இதன் முறைகள் நமது அனுபோக வைத்திய நவநீதத்திற் சொல்லப்பட்டிருக்கின்றன.

மருள் : — காசநோய், தாவரநஞ்சுகள், அனைத்து நஞ்சு, நரை திரை, முதுமை தீரும்.

மலைவேப்பம் பிசின் : — மேகக்கட்டி தீரும்.

மனிதர் மூத்திரம் :— அகட்டுவாயு தீரும்.

* மனோசிலை :—குட்டம், கண்ணோய், நாக்குநோய், ஆட்டதர்நோய், வெங்கலாஞ்சியவிரணம், ஆண்குறிப்புண், சிலந்திப்பூச்சிப்புண், நரை, திரை, முதுமை தீரும்.

மா

மாக்கல் : — புரையோடிய புண் தீரும்.

மாங்காய் : — முகநோய் தீரும்.

மாஞ்சில் : — (சடாமாஞ்சில்)

மாட்சிகம் : — (தேன்)

மாதளை: — மலட்டுநோய் நீங்கும்.

மாதுளங்கம் (துருஞ்சிநாரத்தை) :—சுவையின்மை, கக்கல், சன்னுச நோய் நீங்கும்.

மாதுளங்காய் (பிஞ்சு) : — பெருங்கழிச்சல், பசியின்மை நீங்கும்.

மாதுளம்பழம் : — கக்கல், நீர்வேட்கை, மதமூர்ச்சை, குன்ம நோய் தீரும்,

மாலதன்செடி (விட்டுணுகிரந்தி) : — ஆண்குறிப் புண் தீரும்.

மால்கிரந்தி (விட்டுணு கிரந்தி) : —நாக்குநோய் தீரும்.

மாவிலிங்கப்பட்டை: — கல்லடைப்பு, குன்மம் தீரும்,

மாவிலிங்கை: — அகக்கட்டி, வாதம், நரை, திரை, முதுமை தீரும்.

மாவிலிங்கையிலை : — அங்குல்நோய் தீரும்.

மான்கொம்பு : — மஞ்சள்நோய், கண்ணோய் தீரும்.

மான் பல் :— கண்ணோய் தீரும்.

மி

மிளகு :—தூற்கம்மல், எருவாய் நோய், உன்மத்தம், நாக்கு நோய், கண்டநோய், இரணம், என்புமுறிவு நோய். அங்குல் நோய், தாவரநஞ்சுகள் தீரும்.

---

* இதன் முறைகள் நமது அனுபோக வைத்திய நவநீதத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன

**மிளகுத்தூள் :** — நிணஅழல் (சீதபித்தம்) தீரும்.

மு

**முக்காவேளை:**— தொடர் கழிச்சல், பசியின்மை, நரை, திரை, முதுமை தீரும்.

**முசுட்டையிலை வித்து :** — வெட்டை, விந்திழப்பு தீரும்.

**முசுறுமுட்டை :** — உன்மத்தம் தீரும்.

**முடக்கொத்தான் :** — கருப்பவிப்புருதி, எலிநஞ்சு, நரை, திரை, முதுமை தீரும்.

**முடக்கொத்தான் விதை :** — விந்திழப்பு தீரும்.

**முதியார் கூந்தல் :** — கல்லடைப்பு, வளிநோய் தீரும்.

**முத்தக்காசு :** — (கோரைக்கிழங்கு)

**முத்தம் (முத்து) :** — கக்கல்நோய், காங்கைநோய், மதமூர்ச்சை, பெருங்கழிச்சல், பசியின்மை, பாண்டு, காமாலை, வைசூரி, குட்டம், நுண்புழுநோய், பித்தநோய், உன்மத்தம்,முகநோய், தலைநோய், தாவரநஞ்சுகள், நரை, திரை, முதுமை தீரும்.

**முத்துச்சிப்பி:** — மூளைஅகப்புண் தீரும்.

**முந்திரி :** — மூத்திரசுருக்கு தீரும்.

**முந்திரிகைக்கனி :**— (திராட்சைப்பழம்) குரற்கம்மல், மதமூர்ச்சை, வெள்ளை, அழல்நோய்,தாவரநஞ்சுகள், சயநோய்,உன்மத்தம் ஆண்குறிப்புண், விந்திழப்பு தீரும்.

**முயலிரத்தம் :** — வெங்கலாஞ்சிய இரணம் தீரும்.

**முருங்கை :** — கண்ணோய், காதுநோய் தீரும்.

**முருங்கைப்பட்டை :**— வெட்டை, கல்லடைப்பு தீரும்.

**முருங்கைப் பூ :** — அழல்நோய், விந்திழப்பு தீரும்,

**முருங்கையிலை :** — விந்திழப்பு தீரும்.

**முருங்கை வித்து :**— உண்ணாக்குப்புண் நீங்கும்.

**முருங்கைவேர்:** —அகக்கட்டிகள், மூளை அகப்புண், குருதிக்கட்டிகள் யானைக்கால்புண் தீரும்.

**முலைப்பால் :**—மதமூர்ச்சை, உன்மத்தம், கண்ணோய், தலைநோய், எலிநஞ்சுதீரும்.

**முள்முருக்கிலை :** — குருதிகுன்மம் தீரும்.

**முள்முருக்குப்பட்டை :** — இரத்தகுன்மம், நரை, திரை, முதுமை தீரும்.

முள்முருக்கு. — மூளை அகப்புண் தீரும்.

**முள்ளங்கிவித்து** : — உண்ணாக்குப்புண் நீங்கும்.

**முள்ளாங்கி (முள்ளங்கி)** : — குரற்கம்மல், குன்மம், காதுநோய், மூக்குநோய், சிறுநஞ்சு தீரும்.

மு

முள்ளி : —எருவாய்நோய் தீரும்.

மூக்குரட்டை : — தமரகநோய், தொடர்கழிச்சல், பசியின்மை, விப்புருதி, இரத்தகுன்மம், வாதசூலை, நுண்புழு, தாவரநஞ்சுகள், அனைத்துநஞ்சு தீரும்.

**மூக்குரட்டைவேர்** : — கல்லடைப்பு, குன்மம் நீங்கும்.

**மூங்கிலிலை** : — வெட்டை தீரும்.

**மூங்கில்விதை** : — தொழுநோய் தீரும்.

**மூங்கில்குருத்து** : — புண்புழு நோய், வாதசுரோணிதம் தீரும்.

**மூங்கிற்புறணி** : — என்புமுறிவு நோய் தீரும்.

மெ

மெருகு : — எருவாய்நோய் தீரும்.

மெழுகு : — உதட்டு நோய், இரணம், அனற்பட்ட புண் தீரும்.

மே

**மேனி** : — (குப்பைமேனியைப்பார்க்க)

மை

**மைசாட்சி** : — (குக்கிலைப்பார்க்க)

மோ

**மோதம்** : — (ஓமம்)

**மோர்த்தெளிநீர்** : — மதமூர்ச்சை தீரும்.

ய

**யவச்சாரம்** : — எருவாய்நோய், தொடர்கழிச்சல், பசியின்மை, கல்லடைப்பு, குன்மம், இரத்தகுன்மம், வாதசூலை, பெருவயிறு, சோகை, நுண்புழு நோய், உடல்பருத்தல், நாக்கு நோய், முகநோய், கண்டநோய், சிறுநஞ்சு தீரும்.

யா

**யானைக்கொம்பு** : — பூதக்கிரகம், கண்ணோய் தீரும்.

**யானைத்திப்பிலி** : — குரற்கம்மல், மூக்குநோய் தீரும்.

**யானைநெருஞ்சி :** — மூத்திரச்சுறுக்கு தீரும்.

**யானைப்பல் :** — கண்ணோய் தீரும்.

**யானைப்புத்து :** — மனநோய் தீரும்.

**யானைமூத்திரம் :** — அகட்டு வாயு தீரும்.

**வ**

* **வங்கபற்பம் :** — நீர்ச்சுறுக்கு தீரும்.

**வங்கம் :** — தாவர நஞ்சுகள், விந்திழப்பு, சேற்றுப்புண் தீரும்.

**வசம்பிலை :** — குரற்கம்மல் தீரும்.

**வசம்பு :** — பசியின்மை, கருப்பவிப்புருதி, குன்மம், விசற்பி, குட்டம், நுண்புழுநோய், பாலக்கிரகம், பூதக்கிரகம், கண்ணோய், காதுநோய், மூளையிரணம், குருதிக்கட்டி, யானைக்கால் புண், முகப்பரு, அல்குல்நோய், தாவர நஞ்சுகள், அனைத்து நஞ்சு, சிறுநஞ்சு, நரை, முதுமை தீரும்.

**வச்சிரபாலைவிதை :** — அனைத்து நஞ்சு தீரும்

**வச்சிரப்பால் (வச்சிரப்பாலைப்பால்) :** — புரையோடிய புண், தேள் நஞ்சு தீரும்.

**வடித்தசாதம் :** — வெங்கலாஞ்சிய இரணம் தீரும்.

**வட்டக்கிலுகிலுப்பை :** — பெருவயிறு, சோகை, குட்டம் தீரும்.

**வட்டக்கிலுகிலுப்பைச் செடி :** — மகோதரம் தீரும்.

**வட்டத்திருப்பி :** — பெருங்கழிச்சல், பசியின்மை, அல்குல் நோய், தாவரநஞ்சுகள், அனைத்துநஞ்சு, சிறுநஞ்சு தீரும்.

**வட்டத்திருப்பிவேர் :** — வெட்டை நீங்கும்.

**வரப்பின்முள்ளி :** — வாதசுரோணிதம், உண்ணாக்குப்புண் தீரும்,

**வரிக்கடுக்காய் :** — பெருவயிறு தீரும்.

**வலம்புரிக்காய் :** — கண்ணோய் தீரும்.

**வல்லாரை :** — உன்மத்தம், வெறிநோய், மூக்குநோய், நரை, திரை முதுமை தீரும்-

**வல்லாரையிலை :** — வைசூரி தீரும்.

**வழுதலம்பழம் :** — பூதக்கிரகம் தீரும்.

**வழுதலை :** — வாதசுரோணிதம், அகக்கட்டி (விப்புருதி) தீரும்.

* இதன் முறைகள் நமது அனுபோக வைத்திய நவநீதத்திற் சொல்லப்பட்டிருக்கின்றன-

**வழுதலைவேர் :** — குரற்கம்மல், யானைக்கால்நோய் தீரும்.

**வழுவைக்கீரை:** — அனற்பட்ட புண் தீரும்,

வள்ளி : —விசற்பி தீரும்.

**வள்ளிக்கிழங்கு :** —விந்திழப்பு தீரும்.

**வறட்சுண்டி :** — பெருங்கழிச்சல் பசியின்மை, கல்லடைப்பு தீரும்.

**வறட்பூலா :** — கண்ணோய் தீரும்.

**வறுத்தஉப்பு :** — என்புமுறிவு தீரும்.

**வனமல்லி :** — தொழுநோய் தீரும்.

**வனமுருக்கு :** — குன்மம் தீரும்,

**வனமுருக்கின்றோற்சாம்பல் :** — குருதிகுன்மம் தீரும்.

**வன்னி :** — உண்ணுக்குப்புண், வெங்கலாஞ்சியவிரணம் தீரும்.

**வன்னிப்பட்டை:**— நகம், பல் நஞ்சு தீரும்.

**வன்னிளந்தும்பியின் காய்:**— பெருங்கழிச்சல், பசியின்மை, தீரும்.

### வா

**வாகைப்பிசின்:**— வெட்டை தீரும்.

**வாந்திசெய்வித்தல்:**— கக்கற்கழிச்சல் (வாந்திபேதி) தீரும்.

**வாய்த்தம்பலம்:**— அரைகடி நஞ்சு தீரும்.

**வாய்விளங்கம்:**— பாண்டு, குட்டம், நுண்புழுநோய், உடல்பருத்தல் மூக்கு நோய், நாக்குப்புண், பவுத்திரப் புண், சிறுநஞ்சுகள், நரை, திரை, முதுமை, தாவரநஞ்சுகள், அலைத்துநஞ்சு, தீரும்.

**வாலுளுவை :** — குன்மம், குட்டம், கண்ணோய், கண்டநோய், நரை, திரை, முதுமை தீரும்.

வாழை : —மிகுகழிச்சல், பசியின்மை, நரை, திரை, முதுமை தீரும்.

**வாழைக்கிழங்கு :** — வெள்ளைப்பாடு, மூலை அகப்புண் தீரும்.

**வாழைப்பழம் :** —விந்திழப்பு, வெள்ளைப்பாடு தீரும்.

### வி

**விடத்தேரிலை :** — மிகுகழிச்சல், பசியின்மை தீரும்.

**விடத்தேரின்பிசின் :** — வெட்டை தீரும்.

**விபூதி :** — வைசூரி, சீதப்பித்தம் தீரும்.

**விதையாவரை :** — பவுத்திரப்புண் தீரும்.

**விலாமிச்சைவேர் :—** வறட்சிநோய், வெள்ளைப்பாடு, அகக்கட்டி நோய், விசற்பி, குட்டம்,மதமூர்ச்சை, மேகக்கட்டி, சீதபித்தம், அழல், தலைநோய் தீரும்.

**வில்வஇளங்காய்:** மிகுகழிச்சல், பசியின்மை தீரும்.

**வில்வம் :—** கக்கல், குன்மம் தீரும்.

**விழுதி :—** வாதசுரோணிதம் தீரும்.

**விழுதியிலை :—** கல்லடைப்பு, அகக்கட்டி, சோகை தீரும்.

**விளக்கெண்ணெய் :—** பெருவயிறு, கல்லடைப்பு, கருப்பவிப்புருதி, வாதசூலை, மகோதரம், வாதம், இரணம், மூளை அகப்புண், யானைக்கால், குன்மம் தீரும்.

**விளங்கம் :** = (வாய் விளங்கம்)

**விளா :—** பாலக்கிரகம் தீரும்.

**விளாங்கனி :—** கக்கல் தீரும்.

**விளாம்பட்டை :—** வெட்டை தீரும்.

**விளாம்பிசின் :—** கல்லடைப்பு, பிரமேகம், முகப்பரு தீரும்.

## வீ

† வீரம் :— ஆண்குறி புண் தீரும்.

வீழி :— கருப்பை அகக்கட்டி, குட்டம், வாதம் தீரும்.

**வெங்காரம் :—** குருதிஎருவாய்முளை, தொடர்கழிச்சல், பசியின்மை, கல்லடைப்பு, அனைத்துநஞ்சு தீரும்.

**வெட்டி வேர் :—** மதமூர்ச்சை, மிகுகழிச்சல், பசியின்மை, கல்லடைப்பு, மேகக்கட்டி, அதிமூத்திரநோய், விப்புருதி, விசற்பி, கண்டநோய், அனற்பட்டவிரணம், நகம் பல் நஞ்சு தீரும்'

**வெட்பாலை:—** குருதிஎருவாய்முளை, கண்டநோய், அனற்பட்ட புண் தீரும்.

வெட்பாலைப்பட்டை :— மிகுகழிச்சல், பசியின்மை தீரும்.

**வெட்பாலைப் பருப்பு :—**மிகுகழிச்சல், பசியின்மை, சீதபித்தம், யானைக்கால் புண் தீரும்.

**வெட்பூலா :—** மலட்டுநோய் தீரும்.

**வெண்கருப்பஞ்சாறு :—** விந்திழப்பு தீரும்,

---

† இது நஞ்சுக் குணமுள்ளது. இதன் முறைகள் நமது அனுயோக வைத்திய நவநீதத்திற் சொல்லப்பட்டிருக்கின்றன.

† **வெண்கலம்** :— கண்ணோய், இரணந் தீரும்.

† **வெண்காரம்** : — கண்ணோய் தீரும்.

**வெண்குங்கிலியத்தைலம் பூசல்** : — குணக்கநோய் தீரும்.

**வெண்குங்கிலியம்** : — மிகுகழிச்சல், பசியின்மை, நரை, திரை, முதுமை தீரும்.

**வெண்ணெய்** : — வெண்குட்டம், கண்ணோய், விந்திழப்பு தீரும். சூல்மகளிர்க்குச் சுகமுண்டாம்.

**வெண்வெய்தற்கிழங்கு** : — தலைநோய் தீரும்.

**வெந்நீர்** :—அனற்பட்டபுண் தீரும்.

**வெல்லம்** : — சுவையின்மை, எருவாய்நோய், மூளை அகப்புண், வெங்கலாஞ்சியபுண், அனைத்து நஞ்சு தீரும்.

**வெள்வேல்** : — நாக்குநோய் தீரும்.

**வெள்வேற்பிசின்** : —வெட்டை தீரும்.

**வெள்ளரி** : — நீர்ச்சுறுக்கு, அழல்நோய். வாதசுரோணிதம் தீரும்,

**வெள்ளறுகு** : — நீர்ச்சுறுக்கு, சோகை, விசற்பி, முகப்பரு புண், அனைத்துநஞ்சு, விந்திழப்பு தீரும்.

**வெள்ளறுகு வித்து** : — மிகுகழிச்சல், பசியின்மை தீரும்.

**வெள்ளாட்டுக்குழம்பு மோர்** : — மஞ்சள்நோய் தீரும்.

**வெள்ளாட்டுச் சாணம்** : — சோகை தீரும்.

**வெள்ளாட்டுத் தயிர்** : — மிகுகழிச்சல், பசியின்மை தீரும்.

**வெள்ளாட்டு நீர்** : — சோகை, காதுநோய் தீரும்.

**வெள்ளாட்டுப் பால்** : — சயநோய், வெங்கலாஞ்சிய இரணந் தீரும்.

**வெள்ளாட்டு மோர்** : — பாண்டு தீரும்.

**வெள்ளி** : — கண்ணோய், தாவர நஞ்சுகள் தீரும்.

**வெள்ளிலோத்திரம்** : — வெங்கலாஞ்சிய இரணந் தீரும்.

**வெள்ளீயம்** : — மேகக்கட்டி தீரும்,

**வெள்ளுள்ளி** : — அகட்டுவாயு, குருதிகுன்மம், சோகை, நுண்புழு நோய் வெறிநோய்தீரும்.

---

† இவைகளின் முறைகள் நமது அனுபோக வைத்திய நவநீதத்திற் சொல்லப்பட்டிருக்கின்றன.

**வெள்ளைக்காஞன் :** —பெருவயிறு, தேள் நஞ்சு, வெண்குட்டம்,மூளை அகப்புண், அனைத்து நஞ்சு, விந்திழப்பு, அகட்டுவாயு, கண்ணோய், நரை, திரை, முதுமை தீரும்.

**வெள்ளைக்காஞம் பூ :** — கல்லடைப்புத் தீரும்.

**வெள்ளைக்குங்கிலியம் :** — பாலக்கிரகம், உதட்டுநோய், அடிபட்ட காயம் தீரும்.

**வெள்ளைச் சாரணை :** — தாவரநஞ்சுகள், கண்ணோய் தீரும்.

‡ **வெள்ளை வசம்பு :** — மலட்டுநோய் தீரும்.

## வே

**வேங்கை :** — குட்டம், கண்டநோய்: உடற்பருத்தல் தீரும்.

**வேங்கைப்பட்டை :** — மிகுகழிச்சல்,பசியின்மை தீரும்.

**வேப்பம்பட்டை :** — மூளை அகப்புண், இரணம், பதுமகலுடகஇரணம் தீரும்.

**வேப்பம்பருப்பு :** — நுண்புழுநோய் தீரும்.

**வேப்பம்பிசின் :** — வெட்டை தீரும்.

**வேப்பம்பூ :**— சுவையின்மை தீரும்.

**வேப்பம்வேர் :**— வைசூரி, சேற்றுப்புண் தீரும்

**வேப்பிலை :** — வைசூரி, நுண்புழுநோய், நகம், பல்நஞ்சு; பாலக்கிரகம். பூதக்கிரகம், உதட்டுநோய் தீரும்.

**வேப்பெண்ணெய் :** — வளிநோய், காதுநோய் தீரும்.

**வேம்பாடம் :**— இரணம் தீரும்.

**வேம்பு :** — நீர்ச்சுறுக்கு, விப்புருதி, குன்மம், வெங்கலாஞ்சிய இரணம், வைசூரி, குட்டம், பித்தநோய், பூதக்கிரகம், நாக்கு நோய், முகநோய், நரை, திரை, முதுமை தீரும்.

**வேம்பம்பட்டை :** — புரையோடியபுண் தீரும்,

**வேல் :**— முக நோய் தீரும்.

**வேளை :**— செரியாக்கழிச்சல், பசியின்மை, குன்மம், வாதசூலை, நீராம்பல், சோகை, வெண்குட்டம், கண்ணோய், பெருவயிறு, பல் நோய் தீரும்.

**வேளைவேர் :**—அல்குல்நோய் தீரும்.

---

‡ நஞ்சுக்குணமுள்ளது

அட்டவணை அகராதி முற்றுப் பெற்றது.

# வைத்திய சதகம்-பிற்சேர்க்கை

நாம் முகவுரையில் கூறியிருப்பதுபோல், மேற்கண்ட நூலில் இன்னின்ன நோய்க்கு இன்னின்ன மருந்து சரக்கெனச் சொல்லப் பட்டிருக்கிறதே ஒழிய, அவற்றைப்பயன்படுத்தும் முறைகள் விளக்க மாகச் சொல்லப்படவில்லை. மருத்துவ நூல்வல்ல அறிஞர்கட்கு இவைகளைப் பயன்படுத்தும் முறை விளக்கங்கள் தெரிந்திருக்கும். ஆனல், சாதாரணமானவர்கட்கும், மற்றவர்கட்கும் பயன் படும்படி யாக, இந்நூலின் ஈற்றிலிருக்கிற பாட்டுகளில் கண்ட சில முறை களின் பொதுவிதிகளையும், வேறுபல பொதுவிதிகளையும் சொல்லு வோம். புத்தியுள்ளவர்கள் இவற்றை ஆழ்ந்த கருத்துடன் பல முறை படித்துக் காலம், இடம் அறிந்து சூழ்நிலைக் கேற்றுற்போல் பயன்படுத்தி நலமடைவார்களென நம்புகின்றேம்.

## பொதுவிதிகள்

தனிச்சரக்காக இருந்தாலும், பற்பல சரக்குகளாக இருந்தாலும் நோய்களுக்காக அவற்றை முக்கியமாய்க் கீழ்க்காணும் சிலவகை களாகப் பட்டறிவுடையோர், பயன்படுத்தி வந்திருக்கின்றுர்கள் அவையாவன :—

### 1. சுரசம்

**சுரசம்** :— சு — நல்ல, இரசம் — சாறு; சுரசம்—இனியசாறு. அச்சாறுகளாவன :— கரும்புச்சாறு, இனிப்புள்ள கனிவகைகளின் சாறுகள், அதிமதுரச்சாறு இவை போன்றவைகளாம். ஆனல், மருத்துவ மறைமொழியில் வேர், இலை முதலியவைகளைப் பச்சை யாகக் கொண்டுவந்து அந்தந்த இனத்திற்குத் தக்கபடி கசக்கியும், நசுக்கியும் இடித்தும், வதக்கியும் ஆலை முதலிய பொறிகளில் ஆட்டி யும், அந்தந்த பொருள்களுக்குத்தகுந்தபடியும், அந்தந்த மருந்துப் பொருளின் அளவிற்குத் தகுந்தபடியும் எடுத்த தனிச்சாற்றுக்குச் சுரசமென்றும், சுயரசக்கியாழமென்றும் பெயர். வேர், இலை முதலிய வைகளை நையச்சிதைத்து, அதற்கு இரண்டு பங்கு நீரிற்போட்டு, ஒரு நாளூறவைத்து, எடுத்து வடிகட்டிக் கொள்வதற்கும் சுரச மென்று பெயர். இதற்குச் சீதோதகக்கியாழமென்றும் பெயர்; இது உத்தமமாம். இப்படிச் செய்ய இயலாத காலங்களில் 12 மணி நேரம் ஊறவைத்துப் பிழிந்தெடுத்துக் கொள்ளலாம். உலர்ந்த பட்டை, வேர் முதலியவைகளை நையச் சிதைத்து, அதற்கு நான்கு

அல்லது எட்டு பங்கெடை தண்ணீரிற்போட்டு, ஒரு நாளூற வைத்து, வடிகட்டிப் பிழிந்தெடுத்துக் கொள்வதும் சுரசமாம். இதற்குச் சீதோதக ஊறல் கியாழமென்றும் பெயர்.

அளவு : — இளைஞருக்குச் சாதாரண மூலிகைகள், மருந்துப் பொருள்களானல் அரைப்பலம் முதல்முக்கால்பலம்வரை கொடுக்க லாம். குழந்தைகள், சிறுவர்களுக்கு மேற்கண்ட அளவில் பதினறில் ஒரு பாகமாம்.

ஆனல், ஊமத்தை, கொடிவேலி இவை போன்ற நச்சுக்குண முள்ளவைகளும், மிக்க வீறுள்ளவைகளுமானல் மேற்கண்ட அளவு கொடுக்கலாகாது. அந்தந்தச் சரக்கின் வேகத்திற்குத்தக்க படி, அளவைக்குறைத்து உட்கொள்ள வேண்டும். அவர்களின் உடலியல்பையும் கவனித்துக் கூட்டியும் குறைத்தும் உட்கொள்ள வேண்டியது.

இந்தச் சுரசத்துடன் அந்தந்த நோய்க்குத்தக்கபடி தேன், சருக்கரை (சீனி), வெல்லம், சாரங்கள், சீரகம், இலவணம் (உப்பு), நெய், எண்ணெய், தூள்கள் முதலியவைகளைச் சேர்த்துக் கொடுக்க வேண்டியதிருந்தால் ஒருவராகனெடை சேர்த்துப்பயன் படுத்தலாம். அந்தந்த நோய்களில் பலசரக்குகள் கூறி இருப்ப தால், நோய்க்குத் தக்கபடியும், சமயோசிதம் போலவும் விருப்ப மான சரக்கை மென்பொடியாகவும், துணை மருந்தாகவும் பயன் படுத்திக் கொள்ளலாம். பலசரக்குகளைச் சேர்த்துத் தூள் செய்தால் அந்தத் தூளின் அளவு அரை வராகனெடையாம்.

குறிப்பு : — ஒரு இரும்பு அல்லது மண் பாண்டத்தை அடுப்பில் வைத்துச் சூடேற்றி அதில் பிழிந்த சாற்றை ஊற்றி முறித்துக் கொள் வதற்குச் சுரசமெனச் சில இடங்களில் சிலரால் வழங்கப்படுகிறது. வெப்பத் தொடர்பான நோய்களில், மேற்கண்டபடி முறிக்காமலும், சீதளசம்பந்த நோய்களில் மேற்கண்டபடி முறித்தும் பயன்படுத்து வது மருத்துவ நூல் முறையாம்.

ஆயினும், சீந்தில்கொடி போன்றவைகளை எந்தவகையிலும் காய்ச்சலாகாது. ஆனல், அவற்றைக் குளிர்ந்த நீரில் 30 நாழிகை ஊற வைத்து வடிகட்டிக் கொள்ளலாம்.

## 2. ஊறல் கியாழம்

ஒரு பங்கு பொருள்களை நையச்சிதைத்து, ஆறு பங்கு நீரிற் போட்டு, ஒரு நாள் ஊறவைத்து, மறுநாள் வடிகட்டிக் கொள்

வதற்கு ஊறல் என்று பெயர். இதுவும் சுரசத்திற் சேர்ந்த ஒரு வகையேயாம்; இதற்கு இன்னும் சீதளக்கியாழம் என்றும், தண்ணீர் ஊறல் கியாழமென்றும் பெயருண்டு.

அளவு : — மேற் கூறிய சுரசத்தினளவே இதற்குமாம். தேன், நெய் முதலியவைகளையும், மென்பொடிகளையும் சேர்க்க வேண்டி இருந்தால் மேற்சுரசத்தில் சொன்னபடியே சேர்த்துக் கொள்ள வேண்டியது.

## 3. கல்கம்

ஈரமான சரக்கை அரைத்து உருண்டை செய்து கொள்வதற்குக் கல்கம் (கற்கம்) என்று பெயர்.

உலர்ந்த சரக்காயிருந்தால் நீர் விட்டரைத்து உருண்டை செய்து கொள்ள வேண்டியது முறை.

அளவு : — 1 முதல் 2½ வராகன் எடை; உடல்வன்மை, நோய் வன்மை இவைகளுக்கேற்றுற்போல் கொடுக்க வேண்டியது.

தேன், நெய், எண்ணெய் இவைகளை இதனுடன் சேர்க்க வேண்டியிருந்தால் இதற்கிரண்டு பங்கும், வெல்லம், சர்க்கரை இவற்றைச் சேர்க்க வேண்டியிருந்தால் சமஅளவும் சேர்க்க வேண்டியது.

திப்பிலியைக் கல்கமாகச் செய்து சாப்பிட வேண்டியிருந்தால் முதல் நாள், ஐந்து திப்பிலியைப் பொடித்துத் தண்ணீர் விட்டு அரைத்து, உருட்டியெடுத்து நோய்க்குத் தக்கவாறு மேற்கண்டபடி தேன், நெய், முதலிவைகளில் கலந்து சாப்பிடவேண்டியது. மறு நாள், ஒரு திப்பிலியை அதிகப்படுத்தி முதல் நாள் சித்தம் செய்தபடியே செய்து சாப்பிட வேண்டியது இவ்விதமே, நாள்தோறும் ஒவ்வொரு திப்பிலியை அதிகப்படுத்திச் சாப்பிட்டு வரவேண்டியது. இப்படியே பதினாறுநாள், இருபது திப்பிலி ஆகும்வரையில் சாப்பிட வேண்டியது. பதினேழாம் நாள் முதல், நாள்தோறும் ஒவ்வொரு திப்பிலியாகக் குறைத்துக் கொண்டு வந்து ஐந்து திப்பிலிக்கு வந்தவுடன் நிறுத்தி விட வேண்டியது. எந்த நோய்க்காக நாம் கல்கம் சாப்பிட்டோமோ அந்தநோய் தீர்ந்து போகும். அப்படித் தீராதிருந்தால் இடையில் இரண்டொரு வாரம் விட்டு மறுமுறை சாப்பிட வேண்டியது. இவ்விதம், மூன்று முறை செய்யின் எவ்விதக் கடின நோயும் தீர்ந்து போகும். எனினும், முதன்மையாக இரைப்பு

நோய், மூச்சு நோய், கார்மேகஇரைப்பு, முதலிய இருமல்நோய்கள், என்புருக்கி, ஈளை, முதலியஇருமல்நோய்கள் ஆகியவை தீரும்.

**குறிப்பு** : — மிளகு, இலவங்கம், சீரகம் முதலிய எந்தச் சரக்கையும் மேற்கண்ட விதமாகப் பயன்படுத்தலாம். இவ்வாறு பயன்படுத்துவதற்குக் கற்ப முறை என்று பெயர். இந்தச் சதகத்தில் அந்தந்த நோய்க்குப் பல மருந்துப்பொருள்கள் சொல்லப்பட்டிருப்பதால், உடலியல்பு முதலியவைகளுக்கேற்றபடி ஒன்றைத் தெரிந்தெடுத்து மேற்கண்ட கற்பமுறைப்படி உட்கொள்ளச் செய்தால், கடினமான நோய்களெல்லாம் தீர்ந்து முழுமையான நலங்காணஏதுவாகும். இதற்கு விடாமுயற்சியும் தன்னம்பிக்கையும் முழு நம்பிக்கையுமே இன்றியமையாததாகும். இவ்வாறே, மேலே சொல்லப்பட்ட சுரசங்களையும் இனிச்சொல்லப்படும், கியாழம் முதலியவைகளையும் மேற்கண்ட முறைப்படியே தொடர்ச்சியாகப் பயன்படுத்தி வந்தால் பலவகை நன்மைகளுண்டாமென்பது திண்ணம். ஐயமுள்ளவர்கள், இந்தச் செய்தியை அவரவர்கள் தத்தம் பட்டறிவு மூலமாகச் சோதித்துப் பார்த்துக் கொள்ளலாம்.

## 4. குடிநீர் (கியாழம்)

மரம், வேர் முதலியவற்றின் சக்கைகளையாவது, பட்டைகளையாவது நையச்சிதைத்து, நீர்விட்டுச் சுண்டக் காய்ச்சி, வடிகட்டிக் கொள்வதற்குக் குடிநீர் (கியாழம்) என்று பெயர். இது சிலவகைப்படும்.

1. வேர், பட்டை சக்கை முதலியவைகளை நையச் சிதைத்து அதற்கு நான்கு பங்கெடை நீரிற்போட்டுக் காய்ச்சி நான்கிலொரு பாகமாகச் சுண்டின பின் வடிகட்டிக் கொள்வதற்குச் நாற்சுறுக்குக் குடிநீர் (சிரிதக்கிழாயம்) என்று பெயர்.

2. மேற்படி பொருள்களை நையச் சிதைத்து எட்டுப்பங்கெடை நீரிற்போட்டுக் காய்ச்சி எட்டிலொரு பாகமாகச் சுண்ட வைத்து வடிகட்டிக் கொள்வதற்கும், பதினாறு பங்கு நீரை விட்டு எட்டிலொன்றாகக் காய்ச்சிக்கொள்வதற்குப் எண்சுறுக்குக் குடிநீர் (அட்டபாகக்கியாழம்) என்று பெயர்.

3. மேற்கண்டவைகளை மேற்கண்டபடி பதினாறு பங்கு நீரிற்போட்டுக் காய்ச்சிப் பதினாறிலொன்றாகச் சுண்ட வைத்துக் கொள்வதற்குப் பதினாறுசுறுக்குக் குடிநீர் (சோடபாகக் கியாழம்) என்று பெயர்.

பொருள்களின் வயிரம், கடினம், மிருது, இலேசத்துவம் முதலியவைகளுக்குத் தகுந்தபடி மேற்கண்டிருக்கின்ற வகைகளுள்

ஒன்றுகத் தனித்தனிக்கியாழம் செய்து கொள்ள வேண்டியது. கடின மான சரக்குகளையும், இலேசான சரக்குளையும் சேர்த்துக் கியாழம் செய்யவேண்டியிருந்தால், நேரப்பட வெந்து சத்திறங்குகின்றகடினச் சரக்குகளை நீரில் முதலில் தனியே போட்டுக் காய்ச்சி, பிறகு சீக்கிரத்தில் வெந்து சத்திறங்குகின்ற இலேசான சரக்குகளைப் சேர்த்துக் காய்ச்ச வேண்டியது. நுண்மையான சரக்குகளைப் பத்து மணித்துளி முதல் முப்பது மணித்துளி (நிமிடம்) வரையில் காய்ச்சினுல் போதும்.

கியாழங்களைக் கொஞ்சம் சூடாயிருக்கும் போதே வடிகட்டிக் கொள்ள வேண்டியது. குளிர்ந்துவிட்டால் கியாழத்திலிருக்கும் சத்து அடியிற் படிந்து விடும். கியாழத்தைச் சாப்பிடும் போது கலக்கிச் சாப்பிட வேண்டும்.

இந்தக் கியாழத்தின் அளவு : — பெரியவர்கட்கு 1/8 முதல் 1/4 ஆழாக்கு வரை; சிறுவர்கட்கு $\frac{1}{2}$ முதல் $1\frac{1}{2}$ பலம் வரையில்.

இந்தக் கியாழத்தில் சர்க்கரை சேர்த்துச் சாப்பிட வேண்டி இருந்தால், வளிநோய்க்குக் கியாழத்தினெடைக்கு நான்கிலொன் றும் அழல்நோய்க்கு எட்டிலொன்றும், ஐயநோய்க்குப் பதினாறி லொன்றும் சேர்த்துச் சாப்பிட வேண்டியது.

தேன் சேர்த்துச் சாப்பிட வேண்டுமானுல் வாதநோய்க்குப் பதினாறில் ஒன்றும், அழல்நோய்க்குஎட்டிலொன்றும், ஐயநோய்க்கு நான்கிலொன்றும் சேர்த்துச் சாப்பிட வேண்டும்.

சீரகம், மைசாட்சி, சாரம், (காரம்) இலவணம், சிலாசத்து, பெருங்காயம், சுக்கு, மிளகு, திப்பிலி முதலியவற்றின் தனித்தனித் தூள்களைச் சேர்த்துச் சாப்பிட வேண்டியிருந்தால் $\frac{1}{2}$ வராகனெடை சேர்த்து உட்கொள்ள வேண்டும்.

ஏதேனுமொரு சரக்கைப் பால், நெய், வெல்லம், எண்ணெய், சிறுநீர், அன்னியதிரவங்கள் ஆகியவைகளுள் ஒன்றுடன் சேர்த்த ரைத்து, அதைக்கியாழத்தில் கலக்கிக்கொடுக்க வேண்டியிருந்தால் அப்படி அரைத்தெடுத்த மருந்தில் 3/4 முதல் 1 வராகனெடை வரையில் கலக்கிக் கொடுக்கலாம்.

இன்னும், இச் சதகத்தில் அந்தந்த நோய்களுக்குக் கூறப்பட் டிருக்கும் பல பொருள்களில் உடலியல்பிற்கேற்ற சிலவற்றைச் சேர்த்துக் கொடுக்க வேண்டியிருந்தால், அவ்விதம் சிலவற்றை

கூட்டு முறையாகச் சேர்த்துச் சூரணத்தில் 1/4 முதல் ½ வராக னெடை வரையில் மேற்படிக் கியாழத்துடன் மென்பொடியாகச் சேர்த்துப் பயன்படுத்தலாம்.

## 5. வெந்நீர் ஊறல் குடிநீர்

இன்னும், இந்தக் கியாழத்தில் வெந்நீர் ஊறற் (குடிநீர்) என ஒருவகையுண்டு.

வேர், இலே, பூ முதலிய நுண்மையான சரக்குகளேயும், இலே சாகச்சத்து புறப்படக்கூடிய சரக்குகளேயும், வெந்நீரில் ஊறவைத்து எடுத்துக் கொள்வதற்கு வெந்நீர் ஊறல்குடிநீர் என் று பெயர்.

இரேவல்சீனி, நிலஆவாரை, ரோசாப்பூ, இலவங்கம், சாமந்திப்பூ, சீரகம், ஓமம், சோம்பு முதலிய சரக்குகளில் காற்றினுல் நீங்கிப் போகிற சத்திருப்பதால் அவைகளேக் குடிநீர் செய்யலாகாது.

இந்த வெந்நீர் ஊறற்குடிநீரில் இறங்கியிருக்கும் சத்தானது, சீக்கிரத்தில் அழுகிக்கெட்டுப் போகுமாகையால், இதனைப் புதிதாகச் செய்து கொள்ள வேண்டிய காய்ச்சும் குடிநீரிலும் சிலவற்றிற்கும் இந்த விதியைக் கடைப்பிடிப்பது நன்மையாம்.

இந்த வெந்நீர் ஊறற் குடிநீர்க்கு 1 மணி நேரம் முதல் 6 மணி நேரம் வரை சரக்குகள் வெந்நீரில் ஊறினுல் போதும்.

அளவு : — பெரியவர்கட்கு 1/8 முதல் 1/4 ஆழாக்கு வரை; சிறுவர்கட்கு ½ முதல் 1½ பலம் வரை.

இதில், தேன் முதலிய சரக்குகளேச் சேர்க்க வேண்டிருந்தால் முன் காய்ச்சுக் குடிநீரில் கூறியுள்ள முறைப்படியே சேர்த்துக் கொள்ள வேண்டியது.

## 5. பாண்டம்

அந்தந்தச் சரக்கின் அளவுப்படி ஏதேனும் ஒரு சரக்கைச் தூள் செய்து அதில் ஒரு ஆழாக்குக் கொதிக்கின்ற வெந்நீரை விட்டு இளஞ் சூடாயிருக்கும்போது வடிகட்டியெடுத்துக் கொள் வதற்குப் பாண்டகியாழமென்று பெயர். இதுவும் ஒருவகை வெந் நீர் ஊறல் கியாழமாம்.

இலுப்பைப்பூ, அதிமதுரம், சந்தனம், சிற்றீச்சம்வேர், தாமரை வளேயம், தாமரைப்பூ, பூதபட்டாணி, குமிழ்வேர்ப்பட்டை, சிறு

நாகப்பூ, மஞ்சட்கடுக்காய்த்தோல், தான்றிக்காய்த்தோல், நெல்லி முள்ளி, நன்னாரி, திராட்சை, நெற்பொரி ஆகியவைகளை மேற் சொல்லியிருக்கின்றபடி பாண்டக் கியாழமாகச் செய்து கொள்வது நல்லது.

முன் கியாழத்திற் சொல்லியிருக்கிற மென்பொடி முதலியவை களை இப்பாண்டக் கியாழத்திலும் சேர்த்துக் கொடுக்கலாம்.

இன்னும், கூட்டுச் சரக்குகளை நீரிலிட்டு 1 முதல் 7 நாள் வரைக் காய்ச்சி வடிகட்டி எடுப்பதற்கும் பாண்ட கியாழமென்று பெயர். இதற்கு அடைக்கியாழமென்று மறுபெயருமுண்டு. கூட்டுச் சரக்குகளைத் தண்ணீரிலிட்டு, ஒன்று முதல் மூன்று நாள் வரைக் காய்ச்சி, கியாழத்தைத் தனியே இறுத்து வைத்துக் கொண்டு, வேளையொன்றுக்கு அரை அல்லது கால் ஆழாக்கு வீதம், அப்போ தைக்கப்போது இளஞ்சூடு காட்டிக் கொடுப்பது சிலருடைய வழக்கம். கூட்டுச்சரக்குகளைத் தண்ணீர்விட்டு ஏழுநாள் வரையில் நெருப்பின்மீது வைத்துக் கொண்டே, அதிலிருந்து அரைக்கால் முதல் கால் ஆழாக்குவீதம் இறுத்துப் பயன்படுத்துவது சிலருடைய வழக்கம்.

## 6. கலப்புத்தூள் (சூரணம்)

மென்பொடி முதலியவைகளை முன் கியாழத்திற் கூறியிருக் கின்றபடியே இதற்கும் சேர்த்துக் கொள்ளவேண்டும்.

மருந்து பொருள்களை வெய்யிலில் காய வைத்து அல்லது வெதுப்பி, இடித்துத் தூள் செய்து துணியில் வடிகட்டிக் கொள்வ தற்குக் கலப்புத்தூள் (சூரணம்) என்று பெயர்.

மேற்கண்டபடி தூள்கள் செய்வதில் கடினமான பொருட்களை வெண்கலம் அல்லது இரும்பு உரலிலும், மிருதுவான பொருட் களைக் கல்லுரல் அல்லது கல்வத்திலிட்டுத் தூள் செய்து துணி யில் வடிகட்டிக் கொள்ளவேண்டும்.

மாசிக்காய், கடுக்காய், முதலிய துவர்ப்புப் பொருட்களை இரும்பு உரலிலிட்டுத் தூள் செய்யலாகாது. அவ்விதம், செய்யின் தூள் கறுத்துக் கெட்டுப் போகும்.

கடுக்காயை இடித்துப் பொடித்துத் துணியில் வடிகட்டு தலாகாது. ஆனால், அதைத் தெள்ளி வாதுமை நெய்யை அல்லது

பசுவின் நெய்யைத் தெளித்து நெய்ப்பசை யுண்டாக்கிக் கொள்ள வேண்டும்.

இஸ்பகோல் விதையை அறவே இடித்துத்தூள் செய்ப லாகாது; ஆனால், இடிக்காமல் முழுவிதையாகச் சேர்த்துங் கொள் வது யூனானி மருத்துவர்களுடைய சித்தாந்தம். இடித்தால் இதில் நச்சுக் குணமுண்டாகி விடுகிறது என்பது அவர்கள் கருத்து.

கற்பூரத்தைத் தூள் செய்ய வேண்டியிருந்தால் அதனுடன் கொஞ்சம் சாராயத்தைச் சேர்த்தரைத்தால் அது தூளாகிவிடும்.

சில சரக்குகள் ஒட்டிலிட்டு அடுப்பேற்றி நன்குக வெதுப் பினால் மட்டும் நன்றாகத் தூளாகும்.

பல சூரணங்களை ஒன்றாகச்சேர்க்க வேண்டியிருந்தால் சரக்கு களைத் தனித்தனி இடித்து கூட்டுமுறையிற் சொல்லியிருக்கின்ற நிறைப்படி நிறுத்தெடுத்துக் கொள்ள வேண்டும். அப்படிச்செய்யா விட்டால் சரக்குகள் சேதமாகி நிறை குறையும்.

அளவு : — 1 முதல் 2½ வராகனெடை.

இந்தத் தூள்களில் வெல்லம் சேர்க்க வேண்டியிருந்தால், சமனெடை சேர்க்க வேண்டியது. சர்க்கரை சேர்க்க வேண்டிய திருந்தால், இரண்டு பங்கு சேர்க்க வேண்டியது. நெய், தேன், ஆகியவைகளைச் சேர்க்க வேண்டியிருந்தால், இரண்டு பங்கு சேர்க்க வேண்டியது. மற்றநீர்மங்களானால் நான்கு பங்கு சேர்க்க வேண்டியது. பெருங்காயம் சேர்க்க வேண்டியிருந்தால், அதனைச் சுட்டெரித்து வாசனையில்லாமல் சாம்பலாக்கிக் கொள்ள வேண்டி யது; அப்படிச் செய்யாவிட்டால் சிலருக்கு வாந்தி, அருவெருப்பு, வெகுட்டல் முதலிய தீய குணங்களுண்டாகும்.

## 7. இளகம் (லேகியம்)

வெல்லம் சர்க்கரை, தேன் ஆகியவைகளில் ஒன்றைப் பாகு செய்து பாகு பதத்தில் தூள்களைச் சேர்த்து மத்தாற் கடைந்து அல்லது கிண்டிக் கிளறி இறக்கி ஆறவைத்தெடுத்துக் கொள் வதற்கு இளகம் (லேகியம்) என்று பெயர்.

தூள் ஒருபங்கு, வெல்லமானால் தூளிற்குச் சமனடை; சர்க்கரையானால் சூரணத்திற்கு இரண்டு பங்கெடை, தேனானால் சூரணத்திற்கு மூன்று பங்கெடை சேர்த்தல் பொதுவிதி.

இவற்றுள், ஒன்றை மேற்கண்டபடி பாகு செய்து பாகுபதத்தில் தூள்களைக் கொட்டி மத்தாற் கடைந்து அல்லது, கிளறி இறக்கி ஆறவைத்தெடுத்துக் கொள்ள வேண்டும்.

இதில் நெய்யைச் சேர்க்க வேண்டியிருந்தால், சூரணத்தின் மொத்த எடையில் நான்கிலொரு பங்கு, சேர்த்துக்கொள்ள வேண்டும். தேனைச் சேர்த்துக் கொள்ள வேண்டிய திருந்தால், சூரணத்தி னெடையில் ஐந்திலொரு பங்கு தேனைச் சேர்த்துக் கொள்ளவும்.

## 8. வடகம்

வடகம் செய்ய வேண்டியிருந்தால் வெள்ளைச் சர்க்கரை, தூய்மை செய்த குக்கில் ஆகியவைகளில் ஒன்றைப் பாகு செய்து, வேண்டிய சரக்குகளின் சூரணங்களில் விட்டு, உருண்டையாகச் செய்து கொள்வதற்கு வடகமென்று பெயர்.

இவ்வாறு, வடகம் செய்யும்போது சீனிசர்க்கரை, குக்கில் ஆகியவைகளைப் பாகு செய்யாமலும் சேர்த்துக் கொள்ளலாம்.

தண்ணீர், பால், தேன் முதலியவைகளில் ஒன்றைச் சேர்த்து வடகம் செய்ய வேண்டியிருந்தால், அதனைத்தனியே சூரணத்துடன் சேர்த்துப் பிசைந்து வடகஞ் செய்து கொள்ளலாம்.

சர்க்கரையைச் சேர்த்து வடகம் செய்ய வேண்டுமானால், சூரணத்திற்கு நான்கு பங்கு சர்க்கரையையும்; வெல்லத்தைச் சேர்த்துச் செய்ய வேண்டுமானால், சூரணத்திற்கிரண்டு பங்கு வெல்லத்தையும்; குக்கில், தேன் இவற்றைச் சேர்த்துச் செய்ய வேண்டுமானால், சூரணத்திற்குச் சமன் தனித்தனியே குக்கிலையும் தேனையும் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

## 9. நெய் (கிருதம்)

நெய்யுடன் மூலிகைச் சாற்றை அல்லது கியாழத்தைச் சேர்த்துக் காய்ச்சி அந்தச்சாறு அல்லது கியாழம் (குடிநீர்) சுண்டினபின் நெய்யை வடித்துக் கொள்வதே முறைமையாம்.

நெய் ஒரு பங்கு, மூலிகைச்சாறு அல்லது கியாழம் இரண்டு பங்கு. இந்த நெய்யுடன் மேற்படி சாற்றை அல்லது கியாழத்தைச் சேர்த்துக் கொள்ளவும்.

கத்தூரி, கோரோசனை, முத்து, முத்துப் பற்பம், பவழம், வழ பற்பம் முதலியவைகளைச் சேர்க்க வேண்டியதிருந்தால்

ஒரு வீசைக்கிருதத்திற்கு இரண்டரை வராகனெடை சேர்க்கலாம் உடல் ஊட்டமுள்ளவர்கள் மிகுதியாகவும் கொள்ளலாம்.

## 10. தலைமுழுக்குத் தைலம்

எள்ளெண்ணெயையும் மூலிகைகளின் சாற்றை அல்லது திரவியங்களின் கியாழத்தைச் சேர்த்துக் காய்ச்சிக் கடுகுதிரள் பதத்தில் இறக்கி இளஞ்சூட்டுடன் வடிகட்டி எடுத்துக் கொள்வதே தைலமாகும்.

எள்ளெண்ணெய் ஒரு பங்கு, மூலிகைச்சாறு அல்லது கியாழம் இரண்டு பங்கு, மேற்படி எண்ணெயுடன் மேற்படி மூலிகைச்சாறு அல்லது கியாழத்தைச் சேர்த்துக் காய்ச்சிக் கடுகு திரள் பதத்தில் இறக்கி இளஞ்சூட்டுடன் வடிகட்டிப் பீங்கான் சாடியிலடைத்து வைத்துக் கொள்ளவும். இதனைத் தானியப்புடம் வைத்தெடுத்துக்கொள்வது மேன்மையாம். (தானியப்புடம்—தைல பாத்திரத்தை நெல்லில் பொதிந்து வைத்தல்)

## 11. பிடித்தைலம்

மேற்கண்ட முறையாக வேப்பெண்ணெய், புங்கெண்ணெய், முதலிய எண்ணெய்களுடன் தேவையான சரக்குகளைச் சேர்த்துக் காய்ச்சி, நோயுள்ள இடத்திற் பூசுந்தைலம் மேற்பூச்சுத் தைல மாகும்.

## 12. பற்று

உலர்ந்த சரக்குகளை அல்லது ஈரச்சரக்குகளை நீரில் அல்லது வேறு இரசத்தில் அல்லது தனியே அரைத்து, அவசியமான இடத்தில் அல்லது நோயுள்ள இடத்திற் பூசுவதற்குப் பற்று என்று பெயர்.

## 13. தப்பளம்

தலையுச்சியில் மூலிகைகளை அரைத்துத் தடவி அல்லது மூலிகை முதலியவற்றின் சாற்றைத்தடவிக் கையால் மெதுவாகத் தட்டு வதற்குத் தப்பளமென்று பெயர். நாசியிலிருந்து இரத்தம் வடிதல் முதலிய நோய்களில் தப்பள மிடுவது வழக்கம்.

## 14. மூக்குப்பொடி

இது மூக்கில் பயன்படுத்தும் தூள் மருந்து. தேவையான சரக்கைத் தூள் செய்து, அதனை ஒரு மூக்கின் துவாரத்தை அழுத்திக் கொண்டு, மறு மூக்குத் துவாரத்தில் உறிஞ்ச வேண்டும்.

இவ்விதமே மற்றொரு மூக்கை மூடிக் கொண்டு முன் மூடியிருந்த மூக்கில் இழுக்கவேண்டும். இவ்விதமின்றி மேற்படித் தூளைச்சிறு குழாய்களில் வைத்தும் மூக்கில் மூச்சால் இழுத்துச் செலுத்த லாம்.

## 15. நசியம்

திரவ வடிவமான மருந்துகளை நாசியில் துளித்துளியாக விடு வதற்கு நசியமென்று பெயர். மூக்கில் விடுவதற்கு மூக்குத்துளி யென்றும் காதில் விடுவதற்குச் செவித்துளியென்றும் பெயர்.

## 16. தூபம்

வேண்டிய சரக்குகளைச் சற்றுப் பருமனாகப் பொடித்துக் கரி நெருப்பில் போட புகையெழும்பும். இதனை நோயாளியின் அருகில் அல்லது தொலைவில் மூச்சுக்குநேரே செல்லும்படி புகையை வைக்க வேண்டியது. இன்னும், தூபக்கலத்திற்போட்டுப் புகைப்பது நல்லது இதன் விவரத்தை நமது **"யூனானி வைத்தியத்தாது விருத்தி போதினி"** இரண்டாம் பாகத்திற் காண்க.

## 17. புகைபிடித்தல்

வேண்டிய சரக்குகளைத் தூள்செய்து சுங்கான் அல்லது உக்கா முதலியவைகளிற் போட்டு அதன் மீது நெருப்பை வைத்துப் புகை இழுப்பதாம். இவ்வாறு இழுத்த புகையிற் சிறிதளவு விழுங்கி மூக்கினால் விடவேண்டியது.

## 18. புகை கொடுத்தல்

தேவையான சரக்குகளைப் பொடித்து, நெருப்பிலிடப் புகையும்; இதனை எருவாய் அல்லது புண்களிற்படும் படியாகப் புகைக் கொடுக்க வேண்டியது.

## 19. புகைத்திரி

வேண்டிய சரக்குகளைத் தூள் செய்து, துணியில் அல்லது காகிதத்தில் பரப்பி, சுற்றித் திரித்து நூலால் கட்டிக் கொளுத்தி மூக்கில் அல்லது புண்களில் பிடிப்பதற்குப் புகைத்திரியென்று பெயர்

## 20. திரி

மூலிகையை இடித்துப் பிழிந்த சாற்றில், மெல்லிய துணியை நனைத்து உலர்த்தி, மெல்லிய திரியாகச் செய்து, புண்களின் புரை களில் வைப்பதாம் இது பலவகைப்படும்.

## 21. பீச்சு

சரக்குகளைக் குடிநீராக அல்லது ஊறல்கியாழமாகச் செய்து பீச்சாங்குழல் (சிவிறி) மூலமாக எருவாய்க்குள் அல்லது கருப்பப் பைக்குள் செலுத்துதலாம். ஆனால், இப்போது எனிமா என்னும் கருவி உண்டாகியிருப்பதால் அதன் மூலமாக மேற்கண்டவைகளைப் பயன்படுத்துவது மிகவும் நல்லது.

## 22. ஒற்றடம்

உலர்ந்த அல்லது பச்சையான பொருள்களைத் துணியில் முடிப்பாக வைத்துக்கட்டி, நெருப்பு முதலியவைகளிற் காய்ச்சி ஒற்றடமிடுவது ஒற்றடமாம்.

**குறிப்பு :** — இத்தகைய மருத்துவ முறைகள் இன்னும் பல உள. அவையெல்லாவற்றையும் இங்கெழுதுவது முடியாத செயல். எனவே, இங்குச்சில முக்கியமானவைகளை மட்டும் எழுதியிருக்கின்றோம்.

இன்னும், இந்தச் சதகத்தில் கூறியிருப்பவை யாவும் மிக இன்றியமையாதவையாகும். இவற்றைமிக்க கருத்துடன் கவனித்து முறைப்படி மேற்சொல்லிய முறையில் தனிமருத்தாக செய்து கொடுப்பதால் பெரும் பயனுண்டாகுமென்பது திண்ணம். ஆயினும், சில வேளைகளில் பலவகைகளைச்சேர்த்துப்பயன்படுத்த வேண்டுமானால் உடலியல்பு, நோயினியல்பு முதலியவைகளை நிதானித்துச் சரக்குகளின் எடையை ஏற்படுத்துவது நலமாகும். இதற்காகப் பலர் பலவகைகளைக் கூறியிருக்கின்றார்கள். அவை ஒன்றோடொன்று வேறுபட்டவைகளாகவும், பெருஞ் சுற்றுனவைகளாகவும் மிக விரிவானவைகளாகவும் இருப்பதால் எல்லோரும் எளிதாகத் தெரிந்து கொள்ள இடலவில்லை.

ஆகையால், முறைப்படி ஏற்படுத்துவதாயிருந்தால் அந்த முறைப்படியே தெளிவாகவும், சுருக்கமாகவும், இறைவனருளால் "மீஜானுவல் அத்வியா" என்னும் ஒரு கிரந்தம் வெளிப்படுத்தப் படும். அதனை வாசித்தால் இளகம் முதலிய முறைகளில் எந்தெந்த உடலுக்கு எந்தெந்தச் சரக்கை எவ்வளவு அளவு சேர்க்க வேண்டும் என்னும் விளக்கங்கள் தெரியவரும்.

## வடமொழி நோய்ப் பெயர்களின்
# விளக்கப் பட்டியல்

இந்நூலில் சில நோய்களுக்கு வடசொற் பெயர்களும் மருத்துவக்குறிப்புப் பெயர்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், அவற்றையெல்லாம் சாதாரணமானவர்கள் தெரிந்து கொள்ளும்படி அத்தகைய பெயர்களை இதனடியில் அகராதி வரிசையில் எழுதி அவற்றின் தமிழ் உரைகளையும் எழுதியிருக்கின்றோம்.

**அசக்கள்ளியாதிரணம் :** — பயற்றைக் கயிற்றில் கோத்ததுபோல், நீளமாக மினுமினுப்புடன் நோவில்லாமல் ஆட்டின் கழுத்தில் தொங்கும் அதர்போலப் படருங்கொப்புளம்.

**அஸ்மரி :** — கல்லடைப்பு.

**அதரநோய் :** — உதட்டுநோய்.

**அதிக்குருகரங்கள் :** — உடல் இளைத்தலைப் போக்கும் பண்டங்கள் (அதாவது உடலைப் பருக்கச் செய்பவைகள்.)

**அதிஸ்தூல ஹரங்கள் :** — பருத்த உடலை இளைக்கச் செய்யும் பொருள்கள்.

**அபஸ்மாரம் :** — மூர்ச்சைநோய்.

**அளாகவிடம் :** — வெறிகொண்ட அல்லது கோபங்கொண்ட எலிகளின் கடியால் தோன்றும் நஞ்சு.

**அற்புதரணம் :** — பலவிதக்கிரந்திகளின் இலக்கணங்களைப் பெற்று, சிறப்பாகப் பருத்தலும் உயர்தலுமாயிருக்கும் கிரந்தி. (கிரந்தி=முடிச்சு)

**ஆவரணப்பயித்தியம் :** — அறிவு மயக்கப்பயித்தியம்- (ஆவரணம்—மூடுதல், மறைத்தல்;) பயித்தியம்=வெறிநோய்.

**இரத்தகுன்மம் :** — சூதகக்கட்டி.

**இரவுத்திரவிரணம் :** — குதிகால் நெருப்புப் பட்டதுபோல் குதரிப் போகுதல். (இரவுத்திரம்—சினம்)

**உதரவரதன் :** — மகோதரம் (பெருவயிறு)

**உபசிம்மகவிரணம் :** — உள்நாக்குப்புண்.

**உருத்திரரோகம் :** — மாரடைப்பு

**உன்மாதம் (உன்மத்தம்)** : — பயித்தியம்.

**எலும்புருக்கி** : — எலும்புகளின் நடுவிலிருக்கின்ற மூளை குத்தலுடன் உருகி அல்குல் வழியாக வெள்ளை நிறமாக வெளிப்படும் நோய்.

**கண்டலாஞ்சியவிரணம் ;** — கண்டமாலை.

**கதாக்கிரந்தி** : — குதிகாலிலும், விரலிலும் புண்ணுதல்.

**கரதமவிரணம் ;** — சேற்றுப்புண்.

**கன்னரோகம் :** — காதுநோய்.

**காமியவிரணம் :** — ஆண் குறியில் உண்டாகும் புண்.

**கீட்டகவிடம் .** — புழு பூச்சிக்களின் நஞ்சு.

**குணக்கரோய் :** — நகங்கறுத்துப் புண்ணுகுதல்.

**கொர்ப்பவிப்புருதி (கொர்ப்பவித்திரிதி)** : — கருப்பையில் குத்தலோடு உண்டாகும் கட்டி.

**கொர்ப்பிணிசுககரங்கள்:-** சூல்மகளிர்க்கு நலம்பயக்கும் பொருள்கள்,

**கோட விரணம் :** —எரிச்சலோடு கூடிய பலவித புடைகள் (தடிப்புகள்.)

**சக்கராற்புதவிரணம் :** — மூளையின் புண்.

**சத்தியவிரணம் :** — அடிபட்ட காயங்களாலுண்டான புண். (புதியது).

**சருவாசிய ரோகம் :** — முகநோய்.

**சன்னுசரோகம் (சன்னியாசிரோகம்) :** — இது பெண்களுக்குத் தீடீரென்று காணும் ஒருவித மூர்ச்சை நோய்.

**சிம்மக ரோகம் :** —நாக்கு நோய்.

**சிலிபதவிரணம் :-** முழுங்கால்வாதம், நரித்தலைவாதம், யானைக்கால் நோய்.

**சீதபித்தம் :** — உடம்பின்மேல் வட்டவட்டமாகவும் இரத்த நிறத்தோடுங் கூடிய தடிப்புகள் அகலமாயெழும்புதல்.

**சுகப்பிர சூதி :** — இயல்பான கருவுயிர்த்தல்.

**சுரசாதம் (குரற்கம்மல்) :** — தொண்டைக்கம்மல்

**சோகை** (சோன்ப) :— நரம்புகளில் வீக்கம் ஏறுவதனுல் வாந்தியும், உடலனலும் உண்டாகும். இதுவே சோகையாம். இதற்கு ஊதல், அதைப்பு, சுரப்பு எனவும் பெயர்களுண்டு.

**சோமரோகம் :** — மிகுமூத்திரம், வெள்ளொழுக்கு.

**தனவிப்புருதி :** — முலையில் குத்தலுடனுண்டாகும் கட்டி.

**தாவரவிடம் :** — செடி, மரம் மூலிகைகளாலுண்டாகும் நஞ்சு.

**நகதந்தவிடம் :** — நகத்தினுலும், பற்களாலும் உண்டாகும் நஞ்சு. (கள்ளுதல், பிருண்டுதல், கடித்தல் ஆகிய கராணத்தால் ஏற்பட்டது.)

**நஷ்ட வீர்யம் :** —விந்து இழப்பு.

**நாசிரோகம் :** — மூக்கு நோய்.

**நாடி விரணம் :** — நரம்புகளின் புண். (புரையோடிய புண்)

**பங்க நோய் :**— எலும்புகள் ஒடிந்து போதல்.

**பதுமகண்டக விரணம் :** — தாமரைத் தண்டின் முட்களைப் போல உடலிலுண்டாகும் சொறி, இதற்குத் தவளைச் சொறி, பெருஞ் சொறியென்று பெயர்.

**பாஷாண விரணம் :** — கல்லைப் போலிருக்கும் புண் (பாஷாணம்—கல்).

**பாலக்கிரகம் :** — பாலர்கட்குண்டாகும் கிரகக் குற்றங்கள்.

**பால நோய் :** — குழந்தை நோய்கள்.

**பூதக் கிரகம் :** — பேய் பிசாசு கிரகங்களின் குற்றங்கள்.

**பெரும்பாடு :** —பூப்பின்போதும் பிறகும் அதிகமாய்க்குருதி வெளிப்படுதல். (பெரும்பாடு தமிழ்ச் சொல்).

**பொட்டக விரணம் :** — பல கண்களுள்ள பலவித கட்டிகள்.

**மதமூர்ச்சை ரோகம் :** — மூர்ச்சை நோய்.

**முகதூஷக விரணம் :** — இளைஞர் முகத்தில் வெங்காயம் போலும், இலவமுள்ளைப் போலும் அடிபருத்து முளையுள்ள கொப்புளங்களையுண்டாக்கித் தொல்லைதரும் நோய். இதற்கு முகப்பருவென்று பெயர்.

**எலி விஷம் :** — எலிக்கடியால் ஏற்பட்ட நஞ்சு.

**மூத்திரக் கிரிச்சரம் :** — நீர்ச் சுருக்கு நோய்.

**ருத்தருதம் :** — எருவாயில் புண்; இது மலத்தையடக்கி விடுவதால் எருவாயில் வெடிப்புகளுண்டாகும்.

**வந்தியாரோகம் :** — மலட்டு நோய்.

**வல்மீகம் :** — கைகால் முதலியவைகளில் புற்றின் முகத்தைப் போலுண்டாகும் கிரந்தி.

**வாதசூலை :** — இதில் முக்கியமாக உடலின் கீழ்ப் பாகங்களில் குத்தல் குடைச்சல் முதலியவைகளுண்டாகும்.

**விசற்பி :** — புருவம், உச்சி, கண்டம், மார்பு, மார்புக்குங்கீழ், உந்தி, உதடு, அண்டம், முழங்கால், கணுக்கால், இடுப்பு, காலின் பெருவிரல், சுட்டுவிரல், தோள் ஆகிய பதினான்கு இடங்களில் பலநிறக் கொப்புளங்களாக உட்புறத்திலும் வெளிப்புறத்திலும் உண்டாவதாம். இதில் சுரஇலக்கணங்களும் சோபை இலக்கணங்களும். (அக்கி)

**விஷீசி** (விசூட்சி) : — வாந்தி பேதி, கக்கற்கழிச்சல் ஊழிநோய் நச்சுக்கழிச்சல்.

**விதாகம் :** — மிகுவேட்கை நோய். (எரிச்சலுடன் கூடியது).

**விப்புருதி :** — குத்தலுடனுண்டாகும் கட்டி.

முற்றிற்று